
# சுயம்பு



யா/விக்னேஸ்வரக் கல்லூரி
கரவெட்டி
இந்து மாமன்றம்

# சயம்பு

## 2010

J/VIGNESWARA COLLEGE
ISURA SCHOOL
TRUTH TRIUMPHS
KARAVEDDY

## இந்துமா மன்றம்

யா/ விக்கேஸ்வரக் கல்லூரி

கரவெட்டி

உ
சிவமயம்

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**



**வாக்குண்டாம் நல்ல மன முண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி தும்பிக்கை யான் பாதந்**
**தப்பாமற் சார்வார் தமக்கு.**

# பொருளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| விநாயகர் துதி | i |
| கல்லூரி இந்துமாமன்றக் கீதம் | ii |
| கல்லூரிக் கீதம் | iii |
| இந்துமாமன்ற நிர்வாக உறுப்பினர்கள் | iv |
| வாழ்த்துரை | v |
| வாழ்த்துரை | vi |
| அருளாசிச் செய்தி | vii |
| வாழ்த்துரை | viii |
| ஆசியுரை | ix |
| ஆசியுரை | x |
| வாழ்த்துரை | xi |
| வாழ்த்துரை | xii |
| வாழ்த்துரை | xiii |
| வாழ்த்துரை | xiv |
| வாழ்த்துரை | xv |
| நூலாசிரியர் நுன்முகம் | xvi |
| தலைவர் உரை | xvii |
| பத்திராதிபரின் மனவெளிச்சம் | xviii |
| காணாபத்தியம் | 01 |
| சங்கரரும் அத்வைத வேதாந்தமும் | 05 |
| இந்துசமய வழிபாட்டு முறைகள் | 08 |
| சைவத்தில் திளைக்கும் விக்னேஸ்வரக்கல்லூரி | 14 |
| இந்து நாகரிகத்தின் சிறப்பு | 16 |
| கரவெட்டியின் சமயப் பாரம்பரியம் | 18 |
| சத்குரு ஸ்ரீ ஷீரடி சாயி பாபா | 24 |
| அபரக்கிரியை | 28 |
| கிராமியத்தெய்வங்களும் வழிபாடுகளும் | 30 |
| இந்துமதத்தில் நடனக்கலை | 32 |
| இசைக்கலையின் வளர்ச்சி | 36 |
| சைவசமய கலாசாரம் | 38 |
| பல்கலைக்களஞ்சியமாம் எம் இந்து மதம் | 41 |
| வினாவிடைத் தொகுப்பு | 42 |

# இந்து மாமன்றம்
# நிர்வாகசபை உறுப்பினர்கள்
# 2010

| | | | |
|---|---|---|---|
| போஷகர் | - | திரு.வே.சிவசிதம்பரம் | அதிபர் |
| தலைவர் | - | திரு.கோ.கோணரஞ்சன் | ஆசிரியர் |
| செயலாளர் | - | திருமதி.இ.அபிராமசர்மா | ஆசிரியர் |
| பொருளாளர் | - | செல்வி.ராஜினி | ஆசிரியர் |

| | | |
|---|---|---|
| தலைவர் | செல்வன் | தி.பிரசாதனன் |
| உபதலைவர் | செல்வன் | செ.கஜமுகன் |
| செயலாளர் | செல்வி | ம.உஷாந்தி |
| உபசெயலாளர் | செல்வி | ந.அம்பிகா |
| பொருளாளர் | செல்வி | ந.துஜிக்கா |

**நிர்வாகக்குழு உறுப்பினர்கள்**

செல்வன் யோ.சியாம்சன்
செல்வன் ச.ஹேமதர்சன்
செல்வன். பு.துவாரகன்
செல்வன் நா.நாகேந்திரசர்மா
செல்வி யோ.சோபித்திரியா
செல்வன் செ.மதுசூதனன்
செல்வி க.திவாகர்
செல்வி க.மயூரி

**மலர்க்குழு உறுப்பினர்கள்**

செல்வன் செ.ரமேஸ்
செல்வி செ.நிருஜா
செல்வன் செ.ஜெனகன்
செல்வி ந.வைஷ்ணவி
செல்வன் யோ.டிலக்ஷன்
செல்வி இ.வனிதா
செல்வன் இ.விக்கிரமன்
செல்வி சி.பர்மிலா

**பத்திராதிபர்கள்**

செல்வி வி.விஷ்ணுப்பிரியா
செல்வி இ.திவியா

## கல்லூரி இந்துமா மன்றக் கீதம்

### பல்லவி

வாழ்வியலும் வழிபாடும் ஒருங்கிணைய வழிகாட்டும்
இந்துமா மன்றப்பணி நீடு புகழ் பெறுகவே

### அநுபல்லவி

சைவத்தமிழ் கண்ணான எங்கள் கலைக்கோயில்
விக்னேஸ்வரக் கல்லூரி வாழ்க வாழ்க வாழ்கவே.

### சரணம்

கள்ளமில்லா வெள்ளையுள்ள பிஞ்சு மனச் சிறார்களின்
உள்ளத்திலே அன்பு விதை தூவுகின்ற பண்பிலே
பஞ்சமா பாதகத்தைப் பருவத்திலே கிள்ளியே
விஞ்சுகின்ற பக்தியோடு வாழவைக்கும் அழகிலே.
(வாழ்வியல்)

ஆலயத்தில் ஒளித்தீபம் நித்தமும் ஏற்றியே
காலமெல்லாம் திருமுறையைப் பண்ணோடு பாடி
காலையிலே காயத்திரி மந்திரத்தை ஓதி
வெள்ளி ஆராதனை விருப்புடனே செய்து
(வாழ்வியல்)

திருமுறையைத் தந்திட்ட திருத்தொண்டர் நால்வருக்கு
குரு பூசை கொண்டாடி குரு வணக்கம் செலுத்தி
நவராத்திரி நாயகிக்கு விருப்புடனே விழாவெடுத்து
சிவமான நந்திக்கொடி சிறப்புடனே ஏற்றி
(வாழ்வியல்)

இந்து நாகரிகத்தை உயர் புரதில் கற்று
இந்து இதழ் சுயம்பு எனும் சஞ்சிகையை ஆக்கி
மாதா பிதா குருதெய்வ மலர் பாதம் தொழுது
ஞாலத்திலே சீலமுடன் சிறப்போடு வாழ்ந்திடவே
(வாழ்வியல்)

ஆக்கம்
நமசிவாயம் கல்யாணி
ஆசிரியர்.



# கல்லூரிக் கீதம்

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்
விக்கினேஸ்வரா வாழ்கவே வாழ்கவே

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலை மறைகாயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்.
(வாழ்கவே)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாகத்
திறன் பணி கண்டிடுவோம்.
(வாழ்கவே)

வர்த்தக இயலும் தொழில் முறைக் கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயன்றிடுவோம்.
(வாழ்கவே)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினில் கல்வி
என்றதை கூறிடுவோம்.
(வாழ்கவே)

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

**Department of Hindu Religious and Cultural Affairs**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ<br>பணிப்பாளர்<br>Director | 2552643 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax: | 2552825 | ඊමේල්<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudir@yahoo.com |
| පොදු<br>பொது<br>General | 2552641 | | | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 01.02.2010 |


# வாழ்த்துச் செய்தி

சிவ நெறியும், தமிழும் தளைத்தோங்கும் கரவெட்டியில் அமைந்துள்ள விக்னேஸ்வரக் கல்லூரியின் இந்து மாமன்றத்தினால் வெளியிடப்படும் 'சுயம்பு' என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை வாழ் இந்துக்கள் இன்று பல சவால்களையும் இடர்களையும் எதிர் நோக்கி உள்ளனர். இவற்றை எல்லாம் முறியடித்து வீறு கொண்ட ஒரு இந்து சமுதாயத்தை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்த எழுச்சி பாடசாலை மாணவர்களிடையே இருந்து ஆரம்பிப்பது தான் பொருத்தமானது. கல்லூரிகள் தோறும் நிறுவப்படும் இந்துமாமன்றங்கள் மாணவர்களின் சமய விழுமியங்களை ஒழுக்க மேம்பாட்டை வலியுறுத்தும் அமைப்புகளாக விளங்குவதுடன் எதிர்கால சமுதாயத்திற்கு நற்பிரஜைகளை உருவாக்குவதிலும் அளப்பரிய பங்களிப்பை வழங்குகின்றன.

அந்த வகையில் கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி இந்து மாமன்றத்தினரால் வெளிடப்படும் சுயம்பு என்னும் சஞ்சிகை இந்து சமய அறிஞர்கள், ஆர்வலர்கள், அபிமானிகளின் கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றைத் தாங்கி வெளிவந்து இந்து மாணவர்களும் ஏனையோரும் பயனடைய வழிவகுக்கும். இத்தகைய அரிய பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திய விக்கினேஸ்வரக் கல்லூரி அதிபர், ஆசிரியர், இந்துமாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்

# வாழ்த்துரை

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், B.A (Hons) Ph.D (Jaf) D.Litt.(Honoris Causa)

**வாழ்நாள் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள கரவெட்டியில் அமைந்துள்ள யா/ விக்னேஸ்வரக் கல்லூரியின் இந்து மன்றத்தினர் "சுயம்பு" என்ற பெயர் கொண்ட சஞ்சிகையினை இவ்வருடம் வெளியிட முன்வந்துள்ளதையிட்டு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் முதற்கண் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்லூரியில் பல்வேறு மன்றங்கள் ஆசிரிய மன்றங்களின் வழிகாட்டுதல்களுடன் இயங்கி வருகின்றன. அத்தகைய மன்றங்களுள் இந்துமன்றம் குறிப்பிடத்தக்கது ஆகும் . இம்மன்றம் இந்து மாணவர்களது, ஒழுக்கம், தெய்வ நம்பிக்கை, குரு, பெற்றோர், பெரியோரை மதித்தல் பணிவு போன்ற விழுமியங்களைப் பேணுவதற்கு வழிகாட்டியாக அமைந்து விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இவ்வருடம் மாணவச் செல்வங்களின் அரிய முயற்சியின் பயனாக நவராத்திரி விழாவின் நிறைவு நாளாகிய விஜயதசமி நன்னாளில் இம்மலரின் வெளியீடு இடம் பெறுவது மேலும் சிறப்பாக அமைகின்றது. அம்பிகையின் திருவருள் இம்மலர் வெளியீட்டுக்குத் துணை நிற்பதாகும்.

இந்து சமயம் சனாதன தர்மம் எனச் சிறப்புப் பெற்ற தொன்று மனித வாழ்வு மேன்மை பெற எண்ணற்ற வழிகளை எமக்குக் காட்டி நிற்கின்றது. வாழ்வியலுக்கு ஏற்ற பல்வேறு தர்மங்கள் இந்து சமயஞ் சார்ந்த இலக்கியங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவை தரும் அறிவுரைகள் வாழ்வில் உயர்ந்த இலட்சியத்தை அடையவும் வாழ்க்கை வளமுள்ளதாக அமையவும் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கவும் தீய எண்ணங்களைப்போக்கவும் பெரிதும் உதவுகின்றன. கல்வி என்ற அதிகாரத்தில் இடம் பெறும் குறள் இச்சஞ்சிகையின் பயன்பாட்டிற்குப் பெரிதும் உதவுவதாகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

உயர்ந்த கருத்துக்களுடன் கூடிய இச்சஞ்சிகையில் ஆக்கங்கள் மாணவர்களின் சிந்தனைக்கு விருந்தாக அமைவதோடு அவை கூறும் வழி நின்று வாழ்வில் சிறக்கவும் உதவும் என்பதில் ஐயமில்லை இச்சஞ்சிகை மாணவர்களது கூட்டு முயற்சி, திறமை ஆகிய அம்சங்களின் வெளிப்பாடாக அமைவது பாராட்டிற்குரியது.

இச்சஞ்சிகை வெளியீட்டுக்குச் சகல நிலைகளிலும் அனுசரணை வழங்கிய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மன்றத்தினை வழிநடத்தும் ஆசிரியர், இந்து மன்றத்தினர் மற்றும் அனைத்து நிலைகளிலும் உதவி நல்கிய அன்பர்கள் ஆகிய யாவர்க்கும் எல்லாம் வல்ல துர்க்கா - லஷ்மி - சரஸ்வதி தேவியரின் திருவருட்யேறு விஜயதசமி நன்னாளின் பொலிய வேண்டுமென வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மலர் வெளியீடு அனைத்து நிலைகளிலும் சிறப்புறுவதாகும்!

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்

யாழ்ப்பாணம்
10.10.2010

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**Department of Hindu Religious and Cultural Affairs**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක<br>பணிப்பாளர்<br>Director | 2552643 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax: | 2552825 | ඊමේල්<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudir@yahoo.com |
| පොදු<br>பொது<br>General | 2552641 | | | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 01.02.2010 |


# வாழ்த்துச் செய்தி

சிவ நெறியும், தமிழும் தளைத்தோங்கும் கரவெட்டியில் அமைந்துள்ள விக்னேஸ்வரக் கல்லூரியின் இந்து மாமன்றத்தினால் வெளியிடப்படும் 'சுயம்பு' என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை வாழ் இந்துக்கள் இன்று பல சவால்களையும் இடர்களையும் எதிர் நோக்கி உள்ளனர். இவற்றை எல்லாம் முறியடித்து வீறு கொண்ட ஒரு இந்து சமுதாயத்தை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்த எழுச்சி பாடசாலை மாணவர்களிடையே இருந்து ஆரம்பிப்பது தான் பொருத்தமானது. கல்லூரிகள் தோறும் நிறுவப்படும் இந்துமாமன்றங்கள் மாணவர்களின் சமய விழுமியங்களை ஒழுக்க மேம்பாட்டை வலியுறுத்தும் அமைப்புகளாக விளங்குவதுடன் எதிர்கால சமுதாயத்திற்கு நற்பிரஜைகளை உருவாக்குவதிலும் அளப்பரிய பங்களிப்பை வழங்குகின்றன.

அந்த வகையில் கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி இந்து மாமன்றத்தினரால் வெளிடப்படும் சுயம்பு என்னும் சஞ்சிகை இந்து சமய அறிஞர்கள், ஆர்வலர்கள், அபிமானிகளின் கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றைத் தாங்கி வெளிவந்து இந்து மாணவர்களும் ஏனையோரும் பயனடைய வழிவகுக்கும். இத்தகைய அரிய பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திய விக்கினேஸ்வரக் கல்லூரி அதிபர், ஆசிரியர், இந்துமாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி: 222 2870

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

## ஆசியுரைச் செய்தி

கல்வி சார் பெருந்தகையீர்:-

05/06/2010

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி இந்து மாமன்றத்தினுடைய வெளியீடான சுயம்பு எனும் நூல் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனித வாழ்க்கையில் மிகவும் உன்னதமானது மனிதனை பூரணப்படுத்துவது கல்வி. இக் கல்விக்காக பணியாற்றிய விக்கினேஸ்வரக் கல்லூரி கரவெட்டி மக்களின் கல்வி வளர்ச்சியில் நீண்டகாலமாக பணியாற்றுவது மகிழ்ச்சியை தருகின்றது. இக்கல்லூரியில் கல்வியை தொடரும் ஒவ்வொரு மாணவனும் நிறைவான கல்வியாளனாக வளர்வதற்கு சுயம்பு எனும் சஞ்சிகை அவனுக்கு உதவியாக அமைந்துள்ளது. இன்று வெளிவரும் கட்டுரைகளும் செய்திகளும் இன்றைய மாணவர்கள் சிந்தனை செயலாகும். இச் செயல் வருகின்ற மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமையும். நிறைவான சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் அதிபரையும் ஆசிரியரையும் வாழ்த்தி பாராட்டுகிறோம். இச்சஞ்சிகை சிறப்பாக வெளிவந்து அனைவரும் பயன் பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

# வாழ்த்துரை

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் "சுயம்பு" மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

அந்நியராட்சிக் காலத்திலே கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கோடு எமது மண்ணிலே பல பிள்ளைகள் சைவசமயப் பாரம்பரியத்திலே கல்வி கற்க வேண்டுமென்ற நோக்கோடு சுதேசிகளால் பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இத்தகைய பாடசாலைகளிலொன்றாக விக்கினேஸ்வரக் கல்லூரியை அடையாளம் காணலாம். இப் பாடசாலையின் இந்துமாணவர்மன்றம் நிறுவுநரின் நோக்கை நிறை வேற்றும் வகையில் செயலாற்றி வருவது பாராட்டிற்குரியது.

இந்துமாணவர்மன்றத்தின் "சுயம்பு" மலர் மாணவர்களது ஆக்கங்களையும் உள்வாங்கி வெளி வருவது பாராட்டிற்குரியது இதனூடாக மாணவர்களது எழுத்தாற்றலும் சமயப்பற்றும் வளருமென நம்புகிறேன் "சுயம்பு" மலரை வெளியிட எத்தனித்த அனைவரையும் பாராட்டுகிறேன்.

வ.செல்வராசா
வலயக்கல்விப்பணிப்பாளர்

# ஆசியுரை

சைவப் பண்பாட்டினை பேணிக்காத்து வரும் கரவெட்டியில் சிறந்த பாடசாலையாக விளங்கி சமூகத்திற்கு நல்ல பிரஜைகளை உருவாக்கி இன்று "இசுறு" பாடசாலையாகத் திகழும் யா/கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரியினது இந்துமாமன்றம் வருடாந்தம் வெளியிடும் "சுயம்பு" எனும் சஞ்சிகைக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இந்து சமயம் சார்ந்த கலைத்திட்ட விடயங்களையும் ஆன்மீகக் கட்டுரைகளையும் உள்ளடக்கி வெளிடப்படும் இந்நூலானது மாணவர்களிடையே ஆன்மீகச் சிந்தனைகளையும், சமய விழுமியங்களையும் வளர்த்து அவர்களை ஒரு சிறந்த மாணவர்களாக திகழ வைக்கும்.

இன்று கட்டிளமைப் பருவத்தினரிடையே அதிகரித்து வரும் நெறி பிறவாழ்வான நடத்தைகளை இவ்வாறான ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளின் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து எதிர்காலத்தில் நல்ல சமூகப்பண்புள்ள பிரஜைகளை உருவாக்க முடியும். அந்த வகையில் யா/விக்கினேஸ்வரக் கல்லூரியினது இந்துமாமன்றத்தினதும் வெளியீடான சுயம்பு சஞ்சிகை சிறப்பாக வெளிவர அரும்பணியாற்றும் அதிபர், மன்றப் பொறுப்பாசிரியர்கள், மாணவர்களை பாராட்டுவதுடன் "சுயம்பு" சஞ்சிகை சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

செ.உதயகுமார்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
(நிர்வாகம்)
வடமராட்சி வலயம்

# கோட்டக்கல்வி பணிப்பாளரின் ஆசியுரை

யா/விக்கினேஸ்வரக்கல்லூரியின் இந்துமாமன்றத்தின் சுயம்பு சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை தளமிட்டுத்தே கொண்டு செயற்பட்டு வரும் பாடசாலை என்று கூறினால் மிகையாகாது. அந்த வகையில் இந்தச் சுயம்புச் சஞ்சிகையின் பதிவு செய்யப்பட்ட படைப்புக்களும் படைப்பாளிகளும் இக்காலத்தின் கண்ணாடியாக நிலை நிறுத்தப்படுவது திண்ணம். அந்த வகையில் இப்படைப்பாளிகள் ஒவ்வொருவரும் பாடசாலை மாதாவின் சிறந்த சிற்பிகளாகத் திகழ வாழ்த்தி நிற்கின்றேன். இந்தச் சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என வாழ்த்துகின்றேன். இச்சஞ்சிகை வெளிக்கொணர முழுமனத்தோடு ஈடுபடும் அதிபர் இந்துமாமன்றப் பொறுப்பாசிரியர் ஏனைய ஆசிரிகளையும் மாணவச் செல்வங்களையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

த.தவேந்திரராசா
கோட்டக்கல்வி பணிப்பாளர்
வடமராட்சி

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் கீழ்கரவை நவம் (MA)
வடமராட்சி வலயக் கல்வி அலுவலகர்
" ஆசிரிய ஆலோசகரின் அருளாசிச்செய்தி "

அன்புசால் பெருந்தகையீர்,

சாதாரண மனிதனை உயர்ந்த குறிக்கோள் உடைய மனிதனாக்குவதும்,உயர்ந்த மனிதனை தெய்வமாக்குவதும் தாற் மதமும் ஆன்மீகமும்.அந்த ஆன்மீகத்திற்கு அடிப்படையாக இருப்பது கோயில்களும்,ஆன்மீக நூல்களுமாகும். அதற்கு உதவுபவை தான் ஆண்டு மலர்கள்.இன்றைய உலகமயமாகுதல் நிலையில் சமயங்கள் பற்றி சிந்தனைகளும்,இறைவழிபாடு பற்றிய அவசியமும் வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளவை. மனித சமூகத்தை ஒழுங்குபடுத்தவும் சீரிய வாழ்வை உருவாக்கவும் சமயங்களாலும் இறைவழிபாடுகளாலும் மட்டுமே முடியுமென்பது திண்ணம்.

சிவமும் சக்தியும் அத்துவிதமாக கலந்திருக்கும் வடிவம் தான் சிவலிங்கம். அந்த லிங்கம் தானாகவே தோன்றினால் அதனை சுயம்பு என்றழைப்பர். அந்த வகையில் இந்த நூல் அத்துவிதமான கருத்துக்களை தானாகவே தோன்றி முன் வைக்க விக்கினேஸ்வராக் கல்லூரியின் இந்துமாமன்றம் துணைநின்றது.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கல்விக்கு தலை போனது.அவ்வாறு எனின் வடமராட்சியில் கரவெட்டி அந்த தலையின் உச்சிபோன்றது. எந்த உச்சியின் மையம் போன்றது விக்கினேஸ்வரக் கல்லூரி என்றால் மிகையாகாது. அந்தக் கல்லூரியின் இந்துமாமன்றம் ஏனைய பாடசாலைகளில் உள்ள இந்துமாமன்றத்திற்கு ஓர் எடுத்துக் காட்டான முன் மாதிரியான மன்றம். வருடம் தோறும் இம் மன்றத்தில் இருந்து வெளிவரும் சஞ்சிகை தான் "சுயம்பு". வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரும் கல்விக் கேள்விகளில் நிறைவுத் தன்மையை அடையவும் சமய விழுமியங்களையும் பண்பாடுகளையும் கொண்ட கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி வருகிறது.

இன்றைய காலநிலையில் சைவத்தைச் சார்ந்த மக்கள் சமயநெறி நின்று வாழ்வதற்கு இதில் வரும் செய்திகள் யாவும் எமக்கு வழிகாட்டுகின்றன. அனைவரும் படித்து பயன் பெறவே இந்நூலை வெளியிடும் விக்கினேஸ்வரக் கல்லூரியின் இந்துமாமன்றத்தினை இறைவன் ஆசீர்வதிக்கவும் "சுயம்பு" என்னும் மலர் ஆண்டுதோறும் தொடர்ந்து வெளிவரவும் இறைவனை பிராத்தித்து எனது ஆசிச்செய்தியை நிறைவு செய்கிறேன்.

**" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க "**

# கல்லூரி முதல்வரின் வாழ்த்துரை

சுயம்பு சஞ்சிகையின் இரண்டாம் இதழ் எம்மவர் கைகளில் தவழ்வதை இட்டு பெருமையடைகின்றேன் இதற்காக உழைத்த எம் ஆசிரியர்கள் எம் பிள்ளைகள் அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள். காலம் சென்றாலும் பொன் மஞ்சாது என்பார்கள் அதே போன்று சுயம்பு சஞ்சிகையின் தரம் என்றென்றும் குறையாது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்துப் பண்பாடு மனநிலை அமைதியையும் மகிழ்ச்சியையும் தோற்றுவிக்கும் அதே சமயம் எம் மனங்களில் ஆன்மீக உணர்வையும் உள்ளார்ந்த ரீதியாகத் தோற்றுவிக்கின்றது. இச்சஞ்சிகையின் ஆக்கங்கள் வெற்றி கண்டுள்ளது. குறிப்பாக எம் பிள்ளைகளின் ஆக்கங்களோடு அவர் தம் ஆற்றல்கள் வளர்த்தெடுப்பதில் எம் ஆர்வம் அக்கறை அர்ப்பணிப்பு பாராட்டுக்கு உரியதே.

எமது கல்லூரி இந்துமாமன்றத்தினர் தம்மை இந்து சமயக் கலாசார அமைச்சின் ஓர் அங்கத்தவராகி அவர்களின் நல்லாசியுடனும் பல்கலைக்கழக பேராசிரியர், பெரியோர்களின் நல்லாசியுடனும் சஞ்சிகை வெளிவருவது ஓர் சிறப்பம்சமாகும். அந்த வகையில் இச்சஞ்சிகைக்கு ஆக்கங்கள் நல்லாசிகள் வாழ்த்துரைகள் தந்துதவிய நல்மனங்களிற்கு என் சார்பிலும் கல்லூரிச் சமூகம் சார்பிலும் நன்றிகளைத் தெரிவிக்கும் அதேசமயம் எம்மவர் மனங்களில் என்றென்றும் நிலைத்து நிற்பர். எமது கல்லூரி இந்துமாமன்றம் வளர்க என வாழ்த்தி எதிர் வரும் காலங்களில் இம் முயற்ச்சி தொடர வேண்டும் என வேண்டி விடை பெறுகின்றேன்.

வே. சிவசிதம்பரம்
கல்லூரி முதல்வர்.

உ

கரணவாய் மூத்தருயினார் துணை



# ஸ்ரீலஸ்ரீ வி. செவ்வந்திநாதக்குருக்கள் B.A (ஆசிரியர்)

பிரதம குரு, கோம்பையப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்

குருக்கள் பகுதி,
கரணவாய் கிழக்கு
கரவெட்டி.

12/4/2010

அன்புச் சார் பெருந்தகையீர்

யா/கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியின் இந்து மன்றம் தனது பணிகளை மேம்படுத்தும் முகமாக பல சமயப் பணிகளை ஆற்றி வருகின்றது. அவற்றில் மாணவர்களின் சமய விழுமியப்பண்புகளையும் உள்ளார்ந்த திறன்களையும் வெளிப்படுத்தும் சுயம்பு சஞ்சிகை வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மன்றம் 2004ம் ஆண்டு தனது முதலாவது சஞ்சிகையை வெளியிட்டது தொடர்ந்து 2010 இல் அதாவது இவ்வாண்டில் தனது இரண்டாவது சஞ்சிகையை வெளியிட திருவருவருளும் குருவருளும் கைகூடியுள்ளது. இச்சஞ்சிகை தாங்கி வரும் ஒவ்வொரு கட்டுரை ஆக்கங்களும் வளர்ந்து வரும் ஒவ்வொரு இறார்களையும் அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியாக பங்குவப்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது.

இவ்வாறாக திறம்பட செயற்பட்டு வரும் மன்றத்தின் செயற்பாடுகளை மிகவும் பாங்கான முறையில் வழிநடத்தி வரும் கல்லூரியின் முதல்வர் மன்றக்காப்பாளர்கள் மலர் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நல்லாசிகளையும் பாராட்டுக்களையும் வழங்குவதோடு இச்சஞ்சிகை சிறப்பாக அமைந்து அனைவருக்கும் பயன்கிடைத்த எல்லாம் வல்ல மூத்த விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.
ள

மேன்மை கொள்சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீலஸ்ரீ.விசுவநாதக்குருக்கள்
செவ்வந்திநாதக்குருக்கள் (ஆசிரியர்)
யா/உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி
வல்லெட்டித்துறை

# இந்து மாமன்ற பொறுப்பாசிரியரின் வாழ்த்துரை

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனையை மாணவர் மனங்களில் மீளப்பதிக்கும் நோக்குடன் "சுயம்பு" வெளிவந்துள்ளது. அஞ்ஞான மோகத்தில் செல்கின்ற மாணவர்களிடையே சீர்மியக் கல்வியை சிறப்புடன் செய்யும் சமயக்கல்வியின் மற்றுமோர் பரிணாமமாக உள்ளம் உவக்கும் ஓர் மலர்ப் படையலாக சுயம்பு உலா வருகின்றது.

ஓர் சமுதாயம் உயர்வடைய சிறந்த கல்வியும் ஒழுக்கமும் இரு கண்கள் போன்றவை அதிலும் ஒழுக்கத்தினை போதிக்கும் சமயக்கல்வி சமுதாயத்தின் சிந்தனைக்கு விருந்தாக படைக்கும் அதே வேளை உணர்வு மிக இன்ப வாழ்வு மலரவும் "சுயம்பு" வழிவகுத்தமை பராட்டத் தக்கதாகும்.

மாணவர்களின் சுய ஆக்கத்திறன் விருத்தியை முதன்மை நோக்காக கொண்டு மாணவர் தம் ஆக்கங்களையும் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் வகையில் ஆராய்ச்சி பூர்வமாகவும் அமைந்த அறிஞர் தம் ஆக்கங்களையும் மலரில் மகரந்தப் பொடியும் மணமும் போல அமைந்திருப்பது "சுயம்பு" சஞ்சிகையின் சிறப்பாகும்.

மெஞ்ஞானத்திற்கு மேலாக எதுவுமே இல்லை என உணர்த்தும் தத்துவமாய் நம் வாழ்வின் நுழை வாயிலாக இந்துமா மன்ற இணையற்ற தீபமென வெளிவரும் "சுயம்பு" சுடர் விட்டு பிரகாசிக்க வேண்டும் என மனபூர்வமாக வாழ்த்துகிறேன்.

திருமதி இ.அபிராமசர்மா
இந்துமாமன்ற பொறுப்பாசிரியர்.

# நூலாசிரியர் காட்டும் நுன்முகம்

"எழுதும் சக்தி கடவுளின் சக்தியைப்போன்றது" இந்த மாதிரி சொல்வது தவறு என்று சிலர் எண்ணலாம். இயற்கையில் இருப்பது எழுத்துக்கலையிலும் உள்ளது. பூமியில் ஓடும் ஒரு கங்கையைத்தான் நாம் பார்க்கின்றோம். ஆனால் எழுத்தாளருக்கு ஆகாயத்திலும் பூமியிலும் பாதாளத்திலும் ஓடும் மூன்று கங்கைகள் தென்படுகின்றன. ஆதலால் ஏராளமான சக்தியைத் தேக்கிக்கொண்டவர்கள் எழுத்தாளர்கள்.

இவ்வாறான எழுத்தாளர்களை யா/விக்னேஸ்வரக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களிலும் உருவாக்க வேண்டும் என்ற வேணவாவில் இக்கல்லூரி இந்து மாமன்றம் சார்பில் இரண்டாவது இதழான சுயம்பு சஞ்சிகையினை வெளியிடுகின்றோம். இதன் நூலாசிரியர் என்ற வகையில் பெருமையடைகின்றேன். மேலும் இச்சஞ்சிகையானது சைவசமயம் சார்ந்த பல்வேறு அறிஞர்தம் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவருகின்றமையால் மாணவர்களின் சமய அறிவையும் ஆற்றலையும் தூண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

யா/விக்னேஸ்வரக்கல்லூரி
கரவெட்டி

கோபாலபிள்ளை கோணறஞ்சன்
நூலாசிரியர்

# இந்து மன்ற தலைவர் உரை

எமது கல்லூரியின் இந்து மாமன்றத்தின் வெளியீடான "சுயம்பு" சஞ்சிகை மாறி வரும் உலகின் மனித மனங்களை மெரு கூட்டும் மகத்தான மெஞ்ஞான அறிவை மலர்விக்கும் நோக்குடன் வெளிவருகிறது. இந்து கலாசார மறு மலர்ச்சிக்காய் உதயமான எம் கல்லூரி தாயவளின் ஓர் தவமாக அமையும் சுயம்பு சஞ்சிகை எமது கூட்டு முயற்சியின் வெளிப்பாடு எனக் கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இச் சஞ்சிகையின் ஆக்கங்கள் யாவும் சைவப் பாரம்பரியத்தை பறை சாற்றும் வகையில் அமைந்துள்ளன. அஞ்ஞானம் அகல மெஞ்ஞானம் பரப்பும் வகையில் அறிஞர் பெருமக்களின் ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்து மதத்தின் உன்னதத்தை இனங்கண்டு வெளிக் கொணரும் வகையில் மாணவர்களின் தேடல்கள் ஆக்கங்களாக அணிவகுத்து நிற்கின்றன. இச் சஞ்சிகைக்கு மணி மகுடமென வாழ்த்துரைகளும், ஆசிச் செய்திகளும் அலங்கரித்து நிற்கின்றன.

சுயம்பு சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கங்களும் சைவ மணங்கமழ கல்லூரிச் சமூகத்தின் உழைப்பே காரணம் எனலாம். சுயம்பு சஞ்சிகை புதுமையும், பழமையும் இணைந்து தெய்வீக மணம் அறிவாலயமாய் கமழ இந்துப்பண்பாட்டுக் களஞ்சியமாய் காலமெலாம் திகழ உங்கள் நல்லாசியை வேண்டி நிற்கிறோம்.

தி.பிரசாதனன்

# பத்திராதிபரின் மனவெளிச்சம்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்று உரைத்த திருமூலரின் திருவாக்கிற்கிணங்க இந்து மாணவர்களின் மெய்ஞானத் தேடல்களும் ஆக்கவியல் அறிவும் "சுயம்பு" சஞ்சிகையாக உங்கள் முன் பரிணமித்துள்ளது. காலத்தின் கோலத்தால் சோதனைக் களமான எம் இளைஞர் சமுதாயத்திற்கு வழிகாட்டும் விடி வெள்ளிகளை தன்னகத்தே கொண்டு தன்மதியென மலர்ந்த "சுயம்பு" சஞ்சிகை கல்லூரித்தாயின் இலட்சிய தீபம்.

விஞ்ஞான மயமாகிவிட்ட நவீன யுகத்தில், மதங்கள் மறுக்கப்படும் வேளையில், அவற்றின் மகத்துவத்தை, அவை உலகிற்கு உவந்தளித்த வாழ்வியற் கோலங்களை அறிஞர் தம் வளமான படைப்புக்களாக சுயம்பு சஞ்சிகை சமர்ப்பிக்கின்றது. மேலும் எம் மாணவர்களிடையே இலை மறை காயாய் மறைந்துள்ள ஆற்றல்களை ஆளுமைக் கோலங்களை தன் அக இதழாய் தாங்கி வெளிவருகிறது. "சுயம்பு" உதயமாகும் போது எம்மினிய மாணவர்களின் சமய அறிவும் மலரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சிவபூமியாம் எம் இலங்கை மணித் திரு நாட்டின் சென்னியெனத் திகழும் யாழ்ப்பாண மண்ணின் இந்து கலாசாரம் செங்கோலோச்ச, கரவையூரில் சைவ மணம் கமழ, கல்லூரித்தாயவளின் மனம் குளிர காலந்தோறும் சுயம்பு சஞ்சிகை வெளிவர நாம் பாடுபட்டு உழைப்போம்.

வி.விஷ்ணுப்பிரியா
13B

# காணாபத்தியம்

சமயம் வைதீக சமயம், அவைதீக சமயம் என வகுத்து நோக்கப்படுகின்றது. வேத உபநிடத சிந்தனைகளை பிரமாண நூல்களாக ஏற்றுக் கொண்டு எழுச்சி பெற்றிருந்த சமய நெறிகள் வைதீக நெறிகள் என அழைக்கப்படுகின்றன. சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் முதலான ஆறு வகை சமய நெறிகளும் வைதீக நெறிகள் ஆகும். வேத உபநிடதங்களின் அதிகாரத்தினை மறுதலித்து வைதீக நெறியினை எதிர்பார்ப்பதற்காக தோற்றம் பெற்றிருந்தவை அவைதீக நெறிகள் எனப்படும். அவைதீக நெறிகளாவன சமணம், பௌத்தம், உலகாயுதம் என்பனவாகும்.

சண்மதம் என்பது வடமொழியில் சட் + மதம் எனப் பிரிந்து ஆறு சமயங்கள் எனப் பொருள் தரும். சங்கரர் வகுத்த ஆறு சமயங்களும் காணாபத்தியம், கௌமாரம், வைணவம், சௌரம், சாக்தம், சைவம் என்பனவாகும். கணபதி என்னும் விநாயகப் பெருமானுக்குப் பிரபாவங் கூறுவது கௌமாரம், விஷ்ணு எனும் திருமாலுக்குப் பிரபாவங் கூறுவது வைணவம், சூரியன் எனும் ஞாயிற்றுக்குப் பிரபாவங் கூறுவது சௌரம், சக்தி என்னும் தேவிக்குப் பிரபாவங் கூறுவது சாக்தம், என்னும் தேவிக்குப் பிரபாவங் கூறுவது சாக்தம், சிவன் என்னும் ஈஸ்வரனுக்குப் பிரபாவங் கூறுவது சைவம்.

## விநாயகரினுடைய திருவுருவத்துவம்



### கணபதி உருவ அமைப்பில் அமைந்துள்ள தெய்வங்கள்

01) நாவி - பிரம்மரூபம் - பரமன்
02) முகம் - விஷ்ணுரூபம் - திருமால்
03) கண் - சிவரூபம் - சிவபெருமான்
04) இடபக்கம் - சக்திரூபம் - சக்தி
05) வலப்பக்கம் - சூரியரூபம் - சூரியன்

# வடமொழி நூல்களில் விநாயகர் வழிபாடு

**சிந்து வெளி**

சிந்து வெளியிலே சிவன், சக்தி வழிபாடு இருந்தமையால் விநாயகர் வழிபாடும் இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

**வேதம்**

விநாயகர் பற்றிய மிகப் பழைய குறிப்புக்கள் வேத இலக்கியங்களிலே "கணனாம் த்வா" என்றும் யசுர் வேதத்தில் உள்ள சதருத்திரியம் வாஜசநேய சங்கிதையிலும் கணபதி பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றிலே ஒன்று கணபதிக்கு வணக்கம் என்று காணப்படுகிறது.

ஐதரேய பிராமணத்திலே விநாயகர் விக்கினங்களை ஏற்படுத்துபவராகவும் அவர்களை சாந்தப்படுத்துபவராகவும் கூறப்படுகிறார்.

நீயே எல்லாமாய் உள்ள பிரம்மம். உன்னிடத்திலிருந்தே பிரபஞ்சம் உன்னிடத்திலே பிரபஞ்சம் தோன்றுகின்றது. நீயே பிரம்மா, விஸ்னு, உருத்திரன்" என கூறுகின்றது.

இவ்வாறு சிந்துவெளி, வேதகாலங்களிலே விநாயகர் பற்றிய மூலங்களை அறிந்தோம் விநாயகரின் தோற்றம், பிறப்பு, வழிபாடு என்பன எவ்வாறு இருந்து என்பதை உற்று நோக்கும் போது புராண, இதிகாச காலங்களிலே மிகப்பிரசித்தி பெற்று காணப்படுவதை அறியலாம்.

**புராணங்கள்**

விநாயகப் பெருமானின் தோற்றம் பற்றி பல புராண வரலாறுகள் உண்டு. அவற்றுள் சிவபுராணத்திலே உலக மாதாவாகிய உமாதேவியார் ஒரு குழந்தையைப் பெற்று குலாவ வேண்டும். என விரும்பினார். உடனே மண்ணினால் உருச்சமைத்தார் அதனை தன் மடியிலே வைத்து இன்புறுவதைக் கவனித்த சிவபெருமான் அவ்வண்ணமே திருநோக்கம் செய்து புதல்வப்பேற்றைக் கொண்ட தேவர்கள் அனைவரையும் அழைப்பித்தனர். அத்தருணம் சனியனும் வந்திருந்தான். அவன் பார்வை குழந்தையின் மேல் விழுந்தது அதனால் அவன் தலை அறுபட்டுப் போய்விட்டது. அன்னை வருந்தியதை கண்ட சிவன் பூதகணங்களைப் பார்த்து வடக்கே சென்று முதல் காணும் விலங்கினது தலையை கொண்டு வாருங்கள் என்றார். அவர்கள் யானையினது தலையைக் கொண்டு வர அதனைப் பொருத்தி குழந்தையை உயிர்ப்பித்தார்.

காஞ்சிப் புராணத்திலே திருக்கைலாயத்தில் சிவனும் உமையும் மந்திர சாரா எனும் பூஞ்சோலை சித்திர மாடத்திற்கு சென்றனர். அங்கே ஒரு பிரணவம் எழுதப்பட்டிருந்தது. இருவரும் அதனையே உற்று நோக்கினர். பிரணவமாக அது பிரிந்து இறைவன் எழுத்தாகிய அகரம் களிறாகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பிடியாகவும் தோன்றியது. அவை இரண்டும் கூடி விநாயகர் தோன்றினார். என விநாயகரது பிறப்பு பற்றிக் கூறப்படுகின்றது.

சிவன் முப்புரங்களை எரிக்கச் சென்ற பொழுது சிவனது தேர்ச்சில்லு முறிவடைந்து விட்டது. காரணம் விநாயகரை வழிபடாமல் சென்றமையால் ஆகும். இதில் இருந்து சிவனே விநாயகரை வழிபடும் அளவிற்கு விநாயகர் வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை அறியலாம். வியாசர் மகாபாரதத்தை இயற்றியிருந்த காலத்தில் வியாசர் சொல்ல விநாயகர் மகாபாரதத்தை எழுதினார்.

## விநாயக வழிபாட்டின் பரம்பல்

கணபதி வழிபாடு பாரத நாட்டிலும் மாத்திரமன்றிப் பர்மா, தாய்லாந்து, யாவா, பாலி, போர்ணியோ, சம்பா, கம்போடியோ, சீனா, யப்பான் முதலிய நாடுகளிலும் பரவியிருந்தது இவற்றை விட தென் அமெரிக்கக் கண்டத்து நாடுகளிலும் கணபதி வழிபாடு பரவியிருந்தது.

இந்து நாகரிகம் தூரகிழக்கு நாடுகளிலும், தென் அமெரிக்க நாடுகளிலும் வெகுவாக விஸ்தாரமாகப் பரவுவதற்குக் காரணமாயிருந்தவர். இந்திய வர்த்தகர்அவர்கள் திரை கடலோடித் திரவியத்தேடச் சென்ற போதெல்லாம் ஆபத்சகாயனாய ஆனைமுகனின் திருவுருவம் ஒன்றையும் வழித் துணைவராக எடுத்துச் சென்று தாம் தாம் வர்த்தகஞ் செய்த இடங்களிலெல்லாம் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்தார்கள். இதனை ஓர் உதாரணம் வாயிலாக விளக்குவதாயின் இலங்கையில் திருகோணமலையில் வட இந்திய படை வீரர் துறைமுகத்துள் நிறுவிய பழைய பிள்ளையார் கோயிலைக் குறிக்கலாம்.

பர்மாவின் மேற்குப்பிரதேசங்களில் மகாயன பௌத்தர்கள் கணபதியை மகா பின்னே என்று வழிபட்டார்கள். தாய்லாந்துக் கோயில் அங்கே புத்த சமயம் பரவிய பின்னரும் அவர்கள் தங்கள் பழைய பிள்ளையாரை மறக்காமல் வழிபட்டு வருகிறார்கள்.

கம்போடியாவில் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் பிரதிட்டை செய்யப்பெற்ற அழகிய திருவுருவங்கள் பலவுள்ளது. கம்போடியாவில் முற் காலத்தில் சைவப் பேரரசு நிலவியது என்பது வரலாறு கண்ட உண்மை ஜாவா, பாலி முதலிய நாடுகளில் விக்கினேஸ்வரரை இடையூறுகளைக்களையுங் கடவுளாக வழிபட்டார்கள் யாவாவில் மண்டையோடுகளை மாலையாக கோர்த்து அவருக்கு அணியும் வழக்கமும் நிலவியது. அங்கே கபால கணபதியுருவங்களும் உள்ளன. அவற்றில் ஒன்று அண்மையில் இலங்கைக்கு எடுத்துவரப்பெற்றது. மத்திய கிழக்கு நாடுகளிலும் கணபதி வழிபாடு நிலவியது பண்டைக்கால எகிப்தில் கேனேசு, குனீசு என வழங்கியது திருநாமங்கள் கணேசனையே குறிப்பனவாகும்.

## சோடச மூர்த்தங்கள்

01) பாலகணபதி
02) தருண கணபதி
03) பக்த கணபதி
04) வீர கணபதி
05) சக்தி கணபதி
06) துவிச கணபதி
07) பிங்கள கணபதி
08) உச்சிட்ட கணபதி
09) விக்கின கணபதி
10) ஷிப்ரகணபதி
11) ஏரம்ப கணபதி
12) இலட்சுமி கணபதி
13) மகாகணபதி
14) விஜய கணபதி
15) நிருத்த கணபதி
16) ஊர்த்துவ கணபதி

## விநாயகப் பெருமானின் திருநாமங்களும் அவற்றிற்கான காரணங்களும்

01) கஜானனன் - யானை முகத்தையுடையவர்
02) விக்னராஜன் - இடைஞ்சல்களுக்கு அரசன்
03) ஸித்திப்ரதன் - எடுத்த கருமத்தை நிறைவேற்றுபவர்
04) கணபதி - கணங்களுக்குத் தலைவர்
05) பார்வதி தனயன் - பார்வதியின் மைந்தன்
06) ஹேரம்பன் - போற்றுதலுக்குரிய வீரர்
07) ஏகதந்தன் - ஒற்றைத் தந்தத்தையுடையவர்
08) வரப்பிரதன் - விரும்பியதைக் கொடுப்பவர்
09) அக்ரபூஜ்யன் - முதற் பூசைக்குரியவர்
10) பாலகப்பிரியன் - பிள்ளைகளுக்கு அன்பர்
11) பிரமச்சாரி - பெண்களைத்தாயாக மதிப்பவர்
12) அச்வத்த மூலவாசன் - அரசமரத்தடியில் இருப்பவர்
13) யோகி ஹருந்நிவாசன் - யோகியர் உள்ளத்திருப்பவர்
14) மோதகபஷகன் - கொழுக்கட்டையுண்பவர்
15) தூர்வாங்கு நாராத்யன் - அறுகம்புல்லால் அருச்சிக்கப்பெறுபவர்
16) வித்தியராஜன் - கல்விக்கு அரசர்
17) மூஷக வாஹனன் - பெருச்சாளி வாகனர்
18) விநாயகன் - தலைமை வகிப்பவர்
19) அஞ்ஞானநாசகன் - அறியாமையை நீக்குபவர்
20) பித்ருபக்திமான் - தந்தையிடம் பக்தியுள்ளவர்.

விநாயகப் பெருமான் ஓங்கார மூர்த்தி அவர் பிரணவ வடிவினர் அவர் பிரணவப் பொருளினர். பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் அவரின் திருவடிவம் அகரம், உகரம், மகரம் என்னும்சிவம், சக்தி, நாதம் அடங்கும் ஓங்காரம் ஒலிக்கெல்லாம் மூலம். விநாயகரின் முக்கண்களும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களாகும். இவரிடம் ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியா சக்தி அடங்கும். இவர் அத்தனை பெரிய விசுவரூபி இவர் மும்மதத்தவர் அம்மதங்கள் முறையே ஞானமதம், அறக்கருணை, மறக்கருணை என்பனவாகும்.

கணபதியை வழிபடும் காணாபத்திய மதத்தவரின் கனிந்த உள்ளத்தில் பஞ்சபூதங்களின் அதிபதியாகவும், அனைத்திற்கும் மூல சக்தியான நிர்க்குணப் பிரமத்தின் சகுண வடிவமாகவும், அனைத்தையும் தம்முள் அடக்கிய பிரணவ மூர்த்தியாகவும் விநாயகப் பெருமான் விளங்குகின்றார்.

திருமால் அன்னமய கோசத்துக்கு அதிபதி என்றும், பரமேஸ்வரன் பிராணமய கோசத்துக்கு அதிபதி என்றும், சூரியன் விஞ்ஞானமய கோசத்துக்கு அதிபதி என்றும், கணபதி ஆனந்தமய கோசத்துக்கு அதிபதி என்றும் "அன்னஸ்யாதிபதிர் விஸ்ணு," என்று தொடங்கும் சுலோகம் கூறுகிறது. இது ஆனந்த மயத்தைப்பற்றிக் கூறவந்த சுலோகமாகும்.

முற்காலத்தில் முக்கலர், ஹேரண்டர், மரீஷி, மீனநாதர், தாத்தாத்திரேயர் முதலான மகரிஷி முனிவர் வழிபட்ட கணபதியே வல்லபகணபதி எனப்பெயர் பெற்றுள்ளவராவர்.

எனவே சைவசமயத்தவர்கள் அனைவரும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வழிபட்டு பேரின்ப பெருவாழ்வு வாழ் வோமாக.

"தத்புருஷாய வித்ம ஹே வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி பிரசோதயாத்"

# சங்கரரும் அத்வைத வேதாந்தமும்

வேதங்களைப் பிரமாணங்களாக ஏற்றுக்கொண்ட மெய்யியற்கோட்பாடுகள் இந்து தத்துவங்கள் எனப்படுகின்றன. சங்கரர் இந்து சமயப்பிரமாண நூல்களில் உள்ள கருத்துக்களை வெளிப்படுவதில் முதன்மையானவராக இருந்தார். பிரஸ்த்தான திரயங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தத்துவக்கருத்துக்களை உருவாக்கினார். எனவே வேதாந்தங்களில் சங்கரரே முதன்மையானவராகக் காணப்படுகின்றார்.

அத்வைத வேதாந்தத்தை உருவாக்கிய சங்கரர் வரலாறு பள்ளியறிவது முக்கியமானதாகும். சங்கரர் கி.பி 8ம் நூற்றாண்டில் (கி.பி 788 - கி.பி 829) கேரள மாவட்டத்தில் காலடி என்னும் கிராமத்தில் ஆதி கேசவருக்கும் ஆரியாம்பாள் என்பவர்களுக்கும் மகனாகப் பிறந்தார்.

சங்கரர் கல்வி கற்ற ஆசிரியர்களாக கோவிந்த பாதரும் கௌட பாதர் என்போர் இருந்தனர் என்கின்றது. வரலாறு இளமையில் கடவுள் பக்தியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய சங்கரர் இந்து சமயத்திற்கே தனது வாழ்வை அர்ப்பணித்தார். என்பது இவர் எழுதிய இந்து சமய உரை நூல்களையும் சமயத் தோத்திரப் பாடல்களையும் வைத்து அறிந்து கொள்ளலாம். பிரமசூத்திரம், பகவக்கீதை, தசோபநிடதம் என்னும் உரை நூல்களோடு சிவானந்தலகரி, சௌந்தர்யலகி, சுப்ரமணிய புஜங்கம், ஆரியா சரிதம், பஜகோவிந்தம் முதலான தோத்திரப்பாடல்களையும் கூறிக்கொள்ளலாம்.

இந்து சமய தத்துவ நெறியினை வளர்த்துச் செல்வதற்காகப் பல வேதாந்த மடங்களையும் உருவாக்கினார் பொதுவாக அவருடைய மடங்கள் பூரி, துவாரகை, சிருங்கேரி போன்ற இடங்களில் இருந்து சமயப் பண்பையும் இந்து தத்துவப் பணிகளையும் செய்து வருவது கண் கூடாகும்.

அவர் இந்து சமயம் பல்வேறு தெய்வங்களை வழிபட்டு முண்பட்டு இருந்த வேளையில் அம் முரண்பாட்டை நிக்கு முகமாக இந்து சமயவழிபாடுகளை நெறிப்படுத்தி அறுவகைச் சயங்களாக வகுத்தார் (காணாபத்தியம், வைணவம், சாக்தம், சைவம், கௌமாரம், சௌரம்) என வகுத்த பெருமையும் இவருக்கு உண்டு. இந்து சமயத்தை மெய்ச்சமயம் என நிருபிப்பதற்காகப் பல அற்புதங்களையும் நிகழ்த்தினார். தங்க நெல்லிக்கனி பொழியச் செய்தமை பூர்ணா நதியை திசைமாறி ஓடச் செய்தமை தாய்க்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கச் செய்தமை தம்சீடர்கள் குளிப்பதற்காக வெந்நீரூற்றை உண்டாக்கியமை தானே நெருப்பை உண்டாக்கி தாயின் தகனக்கிரியைதானே செய்தமை என்பன அவர் செய்த அற்புதங்கள் ஆகும்.

சங்கரர் தனது வேதாந்தத்தைத் தோற்றுவிப்பதற்கு பிரமாண நூல்களாக இருந்தமை உபநிடதம் பகவக்கீதை, பாதநாராயரின் பிரமசூத்திரம், கௌடபாதரின் மாண்டுக்கிய காரிகை என்பனவாகும் மேற்க்கூறிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு தமது அத்வைத வேதாந்தத்தை சங்கரர் நிறுவினார்.

அத்வைதம் என்பதற்கு சங்கரர் தரும் விளக்கம் அரீதுவைதம் எனப்பரித்து இரண்டல்ல ஒன்று எனப் பொருள் கொள்கின்றார். அவர் இதனை வைத்துப் பார்க்கும் போது சங்கரர் ஒருமை வாகியாகின்றார். பிரமமும் ஆன்மாவும் வேறுபட்டதல்ல ஒன்றே என்பதை நிலை நாட்ட முனைகின்றார்.

பிரமம் உண்மையான பொருள் இந்த உலகம் ஒரு தோற்றமே ஒவ்வோர் ஆன்மாவும் என்பதை விளக்க "பிரமம் சத்தியம் ஜகத்மித்யா பிரமம் ஏவரா அபர" என்ற சுலோகம் மூலம் விளக்கி நிற்கின்றார்.

அவர் பிரமம் பற்றிக் கூறிய கருத்துக்களை பின்வருமாறு நோக்குவோம் பிரமம் ஆன்மா ஆகிய மூன்று பொருட்களில் பிரமமே முதன்மையானது பிரமம் மட்டுமே உண்மைப் பொருள். ஏனையயாவும் அதன் தோற்றம் எனப்படுகின்றது. பிரமம் அநாதியானது அந்த மற்றது அழிவில்லாதது எங்கும் செழித்து நீக்கமற நிலைந்திருப்பது பிரமம் எதனைப் போன்றதாக இல்லை எனக் கூறலாமே ஒழிய எதுவாக உள்ளது. என விளங்க வைப்பது கடினம் என்கின்றார். அவர் பிரமத்திற்கு இரண்டு நிலைகள் கூறுகின்றார் ஒன்று நிர்குண நிலை அதாவது மாயையோடு சேராத நிலை, குண மாற்ற நிலை சகுண நிலை மாயையோடு சேர்ந்த நிலை இதனையே குணங்களோடு கூடிய நிலை என்பார். இந்நிலையில் ஈஸ்வரன் என்றும் அழைப்பர் ஒரேயொரு மூலப் பொருளாய் உள்ள பிரமம் பல சீவன்களாகின்றது. பிரமம் ஒன்றே அஞ்ஞானத்தின் காரணமாக அது பலவகைப் பொருட்களாகக் காட்சியளிக்கின்றது. ஆன்மாவே பிரமம் என்பதற்கு தத்துவமஸி, அகம்பிரம்மாஸ்மி சோகம் அஸ்ம் என்னும் உபநிடத மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படையாகின்றன. அவித்தையாகிய அஞ்ஞானத்தினின்றும் விடுதலை பெறுமிடத்து பிரமமே எங்கும் பரந்திருக்கும் பரிபூரணப் பொருளாகும்.

மேற்கூறியவற்றைப் பார்க்கும் போது பிரமம் ஆன்மா உலகு என்பவற்றுள் பிரமத்திற்கே முதன்மை வழங்கப்படுகின்றது.

ஆன்மா பற்றிச் சங்கரர் எவ்வாறு கூறுகின்றார் என்பதை நோக்குவோம். ஆன்மாவுக்கு இருநிலைகள் பற்றிக் கூறுகின்றார். ஒன்று பரமாத்மா என்றும் உள்ள பொருள் மற்றையது ஜீவாத்மா அவித்தைக்கு உட்பட்டது ஜீவாத்மாக்கள் பலவாகத் தோன்றும் என்பதை பின்வரும் வாதங்கள் மூலம் அவர் நிறுவுவார்.

அவச்தேசவாத மென்பது ஒரு ஆன்மா பாதிக்கப்பட்டு பல ஆன்மாக்களாகத் தோன்றுவதையே அவச்சேதவாதம் குளித்து நிற்கிறது. உதாரணமாகப் பூமியில் வியாபித்துள்ள பரந்த வெளி அடைப்புக்களாலும் தடுப்புக்களாலும் தனித்தனிக் கூறுகளாகப் பிரிகிறது. ஒரு அறையை நிரப்பும் வெளி அறையின் வடிவத்தையும் குடம் முதலிய பாத்திரங்களையும் நிரப்பும் வெளி பின்னர் குடத்தை உடைத்து விட்டால் ஏனைய வெளியோடு சேருவது போல ஒரு பிரமந்தான் பல ஆன்மாக்களாகத் தோன்றி நிற்கிறது. குடத்திற்கு உள்ளே உள்ள வெளியும் குடத்திற்கு வெளியும் குடத்திற்கு வெளியே உள்ள வெளியும் ஒன்று தான் ஆனால் தற்காலிக தடுப்பினால் அது வெவ்வேறாகிறது அதுபோல ஒன்றான பிரமமும் அவித்தை காரணமாக பல ஆன்மாக்கள் ஆகத்தோன்றுகின்றது. தடுப்பினை நீக்கி விட்டால் எல்லாம் ஒரு வெளியாவதைப்போல பாதிக்கப்பட்ட ஆன்மாவும் தன்னைப்பந்தித்து நிற்கும் அவித்தையை உணர்ந்து முத்தி நிலையில் பரமான்மாவாகின்றது என்கின்றார்.

ஏகான்ம வாதத்தை விளக்குவதற்காக சங்கரர் பிரகிவிம்ப வாதத்தை முன்வைக்கின்றார் பிரதி விம்பவாதம் என்பது ஒன்றின் விம்பம் பல இடங்களில் பிரதிபலிப்பதாகும் உதாரணமாகச் சந்திரனின் பிரதி விம்பம் பூமியில் உள்ள பல்வேறு நீர் நிலைகளில் காட்சியளிப்பதைப்போல் ஒவ்வொரு ஆன்மாவையும் பற்றி நிற்கும் அவித்தையின் இயல்பிற்கு ஏற்ப ஆன்மாக்களின் இயல்பு வேறுபடும் சீவனின் சீவத்துவம் நீங்கிய நிலையிலேயே அதுவும் பிரமமும் ஒன்று என்பதே சங்கரர் கூற்றாகும்.

சங்கரர் கூறும் உலகம் உண்மையல்ல அது தோற்றம் ஆகும். பிரமம் உலகமாகமாறுகிறதே ஒழிய உண்மையில் பிரமத்தில் மாற்றம் எதுவும் இல்லை இதனை விவர்த்த வாதம் மூலம் நிறுவுகின்றார் விவர்த்த வாதம் என்பது ஒரு பொருள் மற்றொன்றாக மாறாமல் இருந்த படியே மாறிவிட்டதாக தோன்றுவதே விவர்த்த வாதம் ஆகும் கயிறு பாம்பாகத் தோன்றுவது போல பிரமம் உலகமாகக் காட்சியளிக்கின்றது என்கின்றார் அவர்.

மாயைக்கோட்பாட்டின் மூலம் பிரமம் உலகைத் தோற்றுவிக்கின்றது என்றார் மாயையே உலகத்தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம் என்றார் மாயைக்குப் பல விதமான பொருள் கொள்ளப்படுகின்றது. மாயையை சொல்லால் விபரிக்க முடியாது அதனால் அநிர்வசநீயம் எனப்படுகின்றது. மாயைக்கு இரண்டு இயல்புகள் உள்ளன ஒன்று ஆவரணம் மற்றையது மற்றையது விஷேபம் ஆவரணம் என்றால் உள்ளதை மறைக்கும் இயல்பு என்றும் விஷேபம் என்பது இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு எனப்படும். ஈஸ்வரத்துவம் என்பது பிரமத்தை மாயை மறைப்பதால் தோன்றுவது என்கின்றார்.

சங்கர[illegible] [illegible]ப்பனை அடையும் வழியாக ஞானத்தைக் குறிப்பிடுகின்றார் ஞானமே [illegible] கூறி[illegible]. அவர் கூறும் விடுதலை என்பது ஆன்மா அவத்தையினின்று விடுபட்டுத் தன்னைப் பிரமம் என்று உணரும் நிலையே விடுதலை என்கின்றார்.

ஆன்மா அடையும் முத்திகளாக அத்வைத முத்தி சீவன் முத்தி விதேக முத்தி என மூன்றையும் கூறினார். ஆனால் அத்வைத முத்திக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார் தன்னைப்பிரமமாக உணரும் அனுபவமே அத்வைத முத்தி என்கின்றார் ஞானத்தைப் பற்றியே உயிர்கள் முத்தி பெறலாம் என்பதையும் உணர்த்துகின்றார்.

முடிவாக மூன்று வேதாந்தங்களில் முற்பட்டவர் என்பதனாலும் அவரது அத்வைத வேதாந்தத்தின் சிறப்பும் அவரை வேதாந்தங்களில் சிறப்பானவராக்குகின்றது.

## உசாத்துணைகள்

| | | |
|---|---|---|
| 01) இந்தியதத்துவ ஞானம் | - | சி.இலட்சுமண ஐயர் |
| 02) உபநிடதப்பலகணி | - | இராஜஜி |
| 03) இந்து சமய தத்துவம் | - | ரி.எம்.பி மகாதேவன் |
| 04) இந்துப்பண்பாட்டு மரபுகள் | - | டாக்டர் இராதகிருஷ்ணன் |

ஆக்கம்
திரு.கோபாலபிள்ளை கோணறஞ்சன்
(ஆசிரி[illegible]/விக்னேஸ்வரக்கல்லூரி)

# இந்து சமய வழிபாட்டு முறைகள் - ஓர் அறிவியல் நோக்கு

வித்யா பூஷணம், பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா B.A (Hons)
(கோப்பாய் சிவம்)

ஆதிகாலத்திலிருந்தே நமது முன்னோர்கள் இயற்கைப் பொருட்களைத் தெய்வங்களாக மதித்துப் போற்றி வணங்கினர். உலகத்தில் கிடைத்துள்ள ஆதி இலக்கியங்களிலேயே மிகப் பழமையானதாகக் கருதப்படும் இருக்கு வேதத்தில் இயற்கைச் சக்திகளைப் பலவிதமாக வர்ணித்துப் போற்றிப் பாடுகின்ற அழகிய பாடல்கள் பல காணப்படுகின்றன.

நிலம் (பூமி) நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் ஏனைய இயற்கைச் சக்திகள் யாவற்றுக்கும் அடிப்படையாக அமைவதால் பஞ்சபூதங்கள் என இவற்றை அழைத்தனர். இந்த ஐந்தும் மூலப்பொருட்களால் உருவானதே பிரபஞ்சம் எனப்படும்.

மனிதனால் ஆக்கி அழிக்க முடியாமலிருக்கும் இவற்றை ஓர் ஒழுங்கு முறையில் நிர்வகிக்கும் ஒருவன் இருப்பதை இதனால் உணர்ந்து அவரே நமது தலைவன் என்று வணங்கினர். அவரே நமது கடவுள் ஆவார்.

சூரியன் என்ற மிகப்பெரிய அக்கினிக் கோளமே இந்தப் பெரிய பிரபஞ்சத்தின் மத்திய சக்தி என இன்றைய விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டறிந்துள்ளனர். சூரியன் எந்த நேரமும் பேரொளியையும், பெரு வெப்பத்தையும் வீசியபடி சுழன்று கொண்டே இருக்கிறது. சூரியனைச் சுற்றிப் பல நட்சத்திரங்களும், கோள்களும் வலம் வருவதுடன் தம்மைத் தாமேயும் சுற்றுகின்றன.

நாம் வாழும் பூமியில் இவ்வாறுதான் சூரியனை வலம் வருகிறது. நமது பூமியைச் சந்திரன் வலம் வருகிறது. பூமி கோளவடிவாக இருப்பினும் அதிலுள்ள பொருட்கள் விழாமல் இருப்பதற்கு அதன் மத்தியிலுள்ள ஈர்ப்புச் சக்தியே காரணமாக உள்ளது. அதே போல இரவு - பகல், வெப்பம் - குளிர், மழை - வெயில் முதலிய மாற்றங்கள் ஏற்படுவதற்குப் பிரபஞ்சத்தின் சுழற்சி இயக்கமே காரணமாக உள்ளது.

இயங்கும் பொருட்கள் எப்போதும் சக்தியுடையவை ஆகின்றன. இயக்கம் இல்லாவிட்டால் சக்தி இல்லை அதனால் இறைவன் என்றும் இயங்கிக் கொண்டிருக்கிறார் என்று நமது முன்னோர் கருதினர் அதனால் அவரை நடராஜ வடிவத்தில் கண்டு மகிழ்ந்தனர்.

ஆனந்த நடனம் என்னும் அவரது கடனமே இந்தப் பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. இயங்கும் போது சக்தி உண்டாகிறது. சக்தி என்பதை ஒரு பெண்ணாக உருவகித்தனர். அந்தச் சக்தியே நடராஜரின் அருகில் சிவகாமி என்ற பெயரில் காணப்படுகிறாள்.

இறைவன் எல்லாப் பொருட்களினுள்ளும் மறைந்திருக்கிறார். எல்லாச் சக்திகளாகவும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். அதனால் அவர் உருவமற்றவராகக் கருதப்பட்டாலும் அவரை நினைத்து வழிபட ஓர் அடையாளச் சின்னம் தேவை என நம் முன்னோர்கள் கருதினர். அதனால் சிவலிங்க வடிவம் உணரப்பட்டது.

அக்கினிச் சுடராக, நெருப்புக் கோளமாக, பேரொளி வடிவமாக இறைவனைக் கண்டு வழிபடும் மரபு இந்துக்களாகிய நமது முன்னோர்களிடம் மட்டும்மல்லாமல் வேறு பல மக்களிடமும் நீண்ட காலம் காணப்பட்டது. அத்தகைய பேரொலி பொருந்திய அக்கினிச்சுடரின் இறுகிய வடிவமே சிவலிங்க வடிவமாகிறது. அது ஒரு கோள வடிவமாகக் காணப்படுவதால் தொடக்கம் முடிவு எதுவும் இல்லாதது.

இந்தச் சிவலிங்க வடிவத்தில் மேற்பகுதியாகிய லிங்கம் சிவன் என்று ஆண் தெய்வமாகவும், கீழ்ப் பகுதியாகிய பீடம் (ஆவுடையார்) சக்தி வடிவாகிய பெண் தெய்வம் என்றும் உருவகம் செய்வர்.

அன்னையும், தந்தையும் இணைந்து செயற்படும் போது தான் நமது குடும்பம் என்ற இல்லற வாழ்க்கை இனிமையாக நகருகிறது. இந்தத் தத்துவமே சிவலிங்க வடிவம், நடராஜர் - சிவகாமி வடிவங்களில் புலப்படுத்தப்படுகின்றது. இன்னொரு வடிவத்தையும் இந்துக்கள் போற்றி வணங்குகின்றனர். அர்த்தநாரீஸ்வரர் அல்லது மாதொரு பாகர் என அழைக்கப்படும் இவ்வடிவம் பாதி ஆணும் பாதி பெண்ணும் சேர்ந்த வடிவமாகும்.

விஞ்ஞான அடிப்படையிலும், நேர்முனைவும் (+) எதிர் முனைவும் (-) சேரும் போது தான் சக்தி பிறக்கிறது. காந்தி சக்தியானது வடமுனையையும், தென் முனையையும் கொண்டுள்ளது. மூலப் பொருட்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படை மூலப்பொருட்களாக இன்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ள அணுக்களும் நேர் முனைவாகிய புரோத்தன்களையும் எதிர் முனைவாகிய இலத்திரன்களையும் கொண்டவை அல்லவா?

நமது பரம்பொருள் அங்கிங்கெனாதபடி இப் பிரபஞ்சம் எங்கணும் பரந்து நிறைந்து கரந்திருப்பினும் அவனோடு நாம் கலந்துறவாடுவதற்கு வாய்ப்பாக ஆலயங்களை அமைகின்றோம்.

இவ்வாறு அமைக்கும் ஆலயக் கட்டடங்களும் அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்களும் "இறைவன் நூல்" ஆகிய ஆகமங்கள் என்னும் மிகப்பழைய நூலில் சொல்லியிருக்கும் முறைகளில் கட்டப்பட்டிருப்பினும் இன்றைய நவீன அறிவியல் நோக்கிலே பார்க்கும் போது அவை இப்பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் சக்தியைத் தேக்கி எமக்கு வழங்கும் முறையிலே அமைந்திருக்கின்றன என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

மின்சார சக்தியை நாம் மின்கலங்களில் சேமிப்பது போல இறை சக்தியாகப் பிரபஞ்ச சக்தியாக கருவறையிலுள்ள விக்கிரகத்தில் சேமிக்கின்றோம். மின்கலத்தில் சேமிப்பதற்கு வேண்டிய மின்சாரத்தை உண்டாக்குவதற்கு சில செயற்பாடுகளைச் செய்ய வேண்டி இருப்பதைப்போல இறை சக்திச் சேமிப்பதற்குச் சிவாகமக் கிரியைகள் தேவைப்படுகின்றன.

பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் சக்தியை ஒருங்கு குவிப்பதற்கு ஐம்பூதங்களினூடாக படிமுறைக் கிரியைகள் உதவுகின்றன. சூரிய சக்தியைப் பூதக் கண்ணாடியூடாகக் குவித்து அதன் சக்தியை ஒருங்கு சேர்ப்பதன் மூலம் பஞ்சினை எரிப்பது போன்றதே இது என விளக்கிக்கொள்ளலாம்.

"பிரம்மண ஆகாசாத் சம்பூதஹ<br>
ஆகாசாத் வாயுஹி<br>
வாயோர் அக்னிஹி<br>
அக்னோ ஆபஹ<br>
அத்ப்யஹ் ப்ருதுவீ" என்பது உபநிடத வாக்கியம்.

"பிரம்மமானது ஆகாயத்திலிருந்து தோன்றி, வாயுவுக்கும் வாயுவிலிருந்து அக்னிக்கும், அக்னியிலிருந்து தண்ணீருக்கும், தண்ணீரிலிருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கி வருகிறது" என்பதே இதன் விளக்கமாகும்.

சிவபிரானது நெற்றிக்கண்ணில் தோன்றிய அக்னிச் சுடராகிய முருகப்பெருமான் ஆகாயமார்க்கமாக வாயுபகவானிடமும் பின்னர் அக்னி பகவானிடமும் அதன் பின் கங்கையாகிய தண்ணீரிடமும் சென்று இறுதியில் பிருதுவி என்னும் நிலத்தின் அம்சமாகிய தாமரைப் பூவில் தங்கிக் குழந்தை வடிவம் பெறுகிறார். என முருகப்பெருமான் திருவவதாரம் கூறுவது இந்தத் தத்துவைத்தான்

இங்கு ஆகாயம், வாயு, அக்னி, தண்ணீர், நிலம் எனக்கூறப்பட்ட ஐந்தும் நிலம், நீர், தீ காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களாகும். பூதம் என்றால் உண்டாக்குவது எனப் பொருள் (பூ - பவ் - உண்டாக்கும் - என்பது வினையடி ஆகும்.) இப்பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டதனால் பிரபஞ்சம் எனப் பெயர் ஏற்பட்டது.

ஆகாயம் என்பது காட்சிக்கும் தொடுகைக்கும் அப்பாற்பட்ட பரவெளி மட்டுமே. அதன் அடுத்த நிலையாகிய காற்று தொடுகைக்கு உட்படுமெனினும் கட்சிக்கு அடங்காதது. அடுத்த நிலையாகிய தீ தொடுகைக்கும் காட்சிக்கும் உட்பட்டதே எனினும் தொட்டுணர்வதற்கு அப்பாற்பட்ட சக்தியை உடையது. நான்காம் நிலையிலுள்ள நீர் தொடுகைக்கும் காட்சிக்கும் உடன்படுவதாகவும் நமது இலகுவான பயன் பாட்டுக்குரியதாகவும் இருப்பினும் நிலையான வடிவத்தை அது பெறுவதில்லை. இறுதி நிலையாகிய பூமி (நிலம் என்னும் தரையில் பெறப்படும் மண், கல், உலோகம்) என்பன. எல்லா வகையிலும் எமக்கு உகந்ததாக, வேண்டிய உருவைப் பெறவல்லதாக உள்ளது.

ஆகாய வெளியில் பரந்து நிறைந்து மறைந்திருக்கும் பிரபஞ்ச சக்தியாகிய இறையருட்சக்தியை மேல்நோக்கிக் குவிந்து கூர்மையாக நிற்கும் உலோகப் பொருளாகிய கலசங்கள் தாங்கிய விமானம் என்னும் ஸ்தூபி ஈர்த்துக் கீழேயுள்ள திருவுருவத்தில் சேமிக்கின்றது. (மான என்பது அளவு. வி என்பது சிறப்பான. குறித்த பிரமாணத்தில் சிறப்பாக அளந்து உருவாக்கப்பட்டதே விமானம்)

இதேபோல மந்திரங்களின் அதிர்வுகள் பிரபஞ்ச சக்தியை ஈக்கும் தன்மையுடைய ஒத்த அதிர்வுகளைக் கொண்டிருக்கின்றன. அவை கதிர்வீச்சுப் போல பேரருட்சக்தியைக் கும்பத்திலும் அக்கினியிலும் விக்கிரகத்திலும் கொண்டு வந்து சேர்க்கத்தக்கன.

மஹோற்சவத்தில் தம்பம், கும்பம், விம்பம் என்னும் மூன்று இடங்களில் திருவருட்சக்தி விளக்குவதாகக் கூறுவர். அதே போல பிரதிஷ்டையில் அக்கினி, கும்பம், விக்கிரகம் ஆகிய மூன்று இடங்களில் திருவருட்சக்தி பொலிவுற்று விளங்குகிறது. இறுதியில் அக்கினியிலுள்ள சக்தி கும்ப நீரில் சேர்க்கப்பட்டு அது அபிஷேகத்தின் மூலம் விக்கிகத்திலே சேர்க்கப்படுகிறது.

அக்கினி அளவற்ற சக்தி வாய்ந்தது. ஆக்கவும் அழிக்கவும் வல்லது அது நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உருவாக்கித் தருவதும் அது. நம்மையே அழித்துவிடுவதும் அக்கினியே. எந்த அசுத்தத்தையும் தூய்மையே செய்யும் சக்தியும் அதற்குண்டு. பிரபஞ்சத்தையே இயங்கச்செய்யும் மூலப்பொருளாக நடுவில் நின்று சுழன்று கொண்டிருக்கும் சூரியன் ஓர் அக்கினிக் கோளமன்றோ? அதனால்தான் ஆதியிலிருந்து இன்றளவும் அக்கினி ஓர் தெய்வ சக்தியாக யாவராலும் வணங்கப்படுகிறது. அத்தகைய அக்கினி மூலமாகவே நாம் அருட்சக்தியைச் சேகரிக்க முற்படுவது பொருத்தமானதல்லவா?

ஆகம அடிப்படையிலமைந்த ஆலய அமைப்பும், அங்கு நடைபெறும் திருவுருவ வழிபாடும் கலித விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், மனோத்துவ விஞ்ஞானம் ஆகியவற்றின் இணைப்பையும் தனக்குள் கொண்டிருப்பது வியப்புக்குரிய ஒன்று.

ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான அளவுப் பிராமணங்களில் ஆலயம் கட்டப்படுகின்றது. அதன் பாகங்கள் ஒவ்வொன்றும் அதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள திசைகள், கோணங்கள், ஸ்தானங்கள் என்பன சரியாக அமையும் படி அமைக்கப்பட்டிருக்கும். சிவாகம்மங்களின் வழிநூல்களாகிய சிற்ப சாஸ்திரங்கள் ஆலயங்களை அமைக்கும் முறைகளை எடுத்துக் கூறுகின்றன.

வான் நோக்கி உயர்ந்து, குவிந்து கூம்பியிருக்கும் கோபுரங்களை அவை கொண்டிருக்கும் கருவறை அல்லது மூலஸ்தானம் எனப்படும் முக்கிய பகுதி சற்சதுரமாக மூன்று பக்கங்கள் முழுமையாக மூடப்பெற்று முன்புறம் மட்டும் திறக்கப்பட்டிருக்கும் அதுவும் திரைச்சீலை ஒன்றினால் மறைக்கப்பட்டிருக்கும் வழிபாட்டின் போது மட்டும் திறக்கப்படும். அவ்வேளையில் அங்கு தீபம் ஏற்றிக் காட்டப்படும்.

இவ்வமைப்பு முறை, செயற்பாடு ஆகியவற்றில் சைவசித்தாந்த தத்துவக் கருத்து உள்ளடங்கி இருக்கும் அதே நேரத்தில் அறிவியல் விளக்கமும் இருக்கிறது.

மேல் நோக்கிக் குவிந்து உயர்ந்திருக்கும் கலசத்தினூடாகப் பிரபஞ்ச சக்தி உள்ளீர்க்கப்பட்டுப் படிப்படியாகப் பரந்து கீழிறங்கி மறுபடி கருவறையின் மயத்தில் அதற்கென விதிக்கப்பட்ட இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருவுருவத்தில் சேகரிக்கப்படும் வழிபாட்டு வேளையில் இறைவனின் திருவருட் சக்தியாகிய பிரபஞ்ச சக்தியின் கதிர் வீச்சு அங்கிருந்து நம்மிடம் வருகிறது.

ஆலயத்தின் அமைப்பு மனித உடலை ஒத்திருப்பதாக அறிஞர்கள் விளக்குகின்றனர். நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் ஒரு மனிதனைக் கற்பனை செய்து பாருங்கள்.

சிரசு எனப்படும் தலைதான் கருவறை சக்தியை உள்ளீர்த்து உயிர்ச் சுவாசத்தை நடத்தும் மூக்குத்தான் ஸ்தூபி முளையின் இடத்தில் தான் திருவுருவம் இருக்கிறது. கழுத்தைக் குறிப்பது அர்த்த மண்டபம்.

மார்பைக் குறிப்பது மஹாமண்டபம் மார்பின் இடது புறத்தில் இதயம் உண்டு அதே போல மஹாமண்டபத்தின் இடப்புறத்தில் சக்திக்குரிய சந்நிதானம் அமைகிறது.

இதயம், கழுத்து ஆகிய பகுதிகள் தான் நினைவு, செயற்பாடு, ஓசை என்பவற்றுக்கு ஆதாரமாகின்றன. மஹாமணடபம், அர்த்த மண்டபம் ஆகியவற்றினால் கிரியைகள், மந்திரம் ஓதல் முதலியன நடைபெறுகின்றன.

வயிற்றைக் குறிப்பது ஸ்நபனமண்டபம். வயிற்றிலுள்ள ஜடராக்கினியைக் குறிக்க ஓமகுண்டத்தில் அக்கினி வளர்க்கப்படுகிறது. ஜடராக்கினி என்பது வயிற்றினுள் மறைந்திருக்கும் வெப்ப சக்தி இதுவே உணவைச் சீரணிக்கச் செய்து சக்தியை உடல் எங்கும் பரப்புகிறது.

கால்கள் ஏனைய மண்டபங்களையும், கைகள் உள்வீதியையும், பாதங்கள் ராஜகோபுரத்தையும் குறிக்கின்றன.

"அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்பர் அண்டம் என்பது பிரபஞ்சம் பிண்டம் என்பது நமது உடல் பிரபஞ்ச வடிவிலேயே நமதுடல் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வுடல் வடிவிலே கோவில் உருவாகியுள்ளது. இது அற்புதமான ஒரு தொடர்பாகும்.

கருங்கல்லினால் அமைக்கப்பட்ட விக்கிரகம் கருவறையின் உள்ளே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கருங்கல் அதிர்வுகளை உள்ளீர்த்து அதனைப் படிப்படியாக வெளிவிடும் தன்மை வாய்ந்தது. அங்கு வைக்கப்படும் திருவுருவங்கள் ஆகமங்களில் சொல்லபட்ட விதி முறைப்படி அமைக்கப்பட்டிருக்கும்.

நடேசர், சண்முகர் மற்றும் தாம்ர விக்கிரகம் எனப்படும் பஞ்சலோகத் திருவுருவங்கள் ஸ்நபன மண்டபத்தில் "சபை" என்ற பெயரில் தனியான சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும். இவை எழுந்தருளிகள் அல்லது உற்சவ மூர்த்திகள் எனப்படும்.

இவை விழாக்களின் போது வீதி உலாவுக்கு எளுந்தருளுகின்றன. சக்தியைத் தற்கலிகமாகச் சேகரித்து உடனுக்குடன் வெளிவிடுவதன் மூலம் எல்லா வெளிடங்களிலும் சக்திக் கதிர்வீச்சினை இவை ஏற்படுத்துகின்றன.

ஸ்தம்ப மண்டபமும் வீதியில் சேர்ந்து பிரதான பகுதி மிகவும் பெரிதாக அகன்று, அடியார்கள் பலர் ஒன்று சேர்ந்து வழிபாடு செய்யக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கும்.

கிராம மக்கள் யாவரும் விழாக் காலங்களில் ஆலயத்திலே ஒன்று கூடி ஒற்றுமையாக வழிபாடுகளில் ஈடுபட்டு மனச்சாந்தி பேணுவதுடன் சுவாமியை வீதி உலா எடுத்து வருதல் தேர் இழுத்தல் போன்றவற்றில் ஒன்று சேர்ந்து ஈடுபட்டு உற்சாகமும், எழுச்சியும் அடைவர் சமூக ஒற்றுமையும், மகிழ்ச்சியும், எழுச்சியும் ஆலயம் சார்ந்து உருவாகுதல் குறிப்பிடத்தக்கது.

ஆலயம் சென்று வழிபடுதல் என்பது இந்துக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. தினமும் ஆலயம் செல்வது சாலச்சிறந்தது. இயலாதவர்கள் செவ்வாய், வெள்ளி மற்றும் விசேஷ விரத, விழாக்கங்களில் சென்று வழிபடுவது அவசியம்.

ஆலயம் செல்லும் போது ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து விபூதி தரித்துக் கொண்டு செல்ல வேண்டும். இன்னொரு சிவசின்னமாகிய உருத்திராக்கம் அணிதலும் நன்று.

பசுவின் சாணத்தைக் காயவைத்து வீராட்டியாக்கிய பின் நல்ல நெருப்பிலே அவற்றைச் சுட்டு வெண்ணிறச் சாம்பலாக வரும் போது அதனை எடுத்து அரித்து வாசனைப் பூக்கள் சேர்த்து விபூதி (திருநீறு) தயாரிக்கப்படுகிறது. பட்டுப்பையில் அல்லது தேங்காய்ச் சிரட்டையிலே உருவாக்கப்பட்ட குடுவையில் அல்லது விபூதி மடலில் திருநீற்றினைச் சேகரித்து வைத்திருக்க வேண்டும்.

இந்த விபூதியை நாம் பூசுகின்ற வேளையெல்லாம் இறைவனை நினைத்துக்கொள்கிறோம். நாம் சைவர்கள் என்பதை எப்போதும் நமது நினைவில் கொள்வதோடு மற்றவங்களுக்கு முன் நம்மை இனங்காட்டும் ஓர் அடையாளச் சின்னமாகவும் விபூதி அமைகின்றது.

திருநீறு நமது உடலில் பூசப்படும் போது உடலுள்ள தீய நீர்த்தன்மைகள் உறிஞ்சப்பட்டு உடல் இறுக்கமான கட்டமைப்பைப் பெறுகின்றது.

ஆலயம் செல்லும் போது அதற்கே உரிய வகையில் நமது பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கேற்ற வகையில் நம்மைத் தயார்படுத்துதல் அவசியம்.

சாத்வீகமான உணர்வுகளையும் தூய்மையான மன எண்ணங்களையும் ஏற்படுத்தக்கூடிய தோற்றம் மிகவும் அவசியம் "ஆள் பாதி ஆடை பாதி" என்பார்கள் அதற்கிணங்க, நம்மைப் பார்க்கும் போதே பிறர் மனதில் ஒரு மரியாதையுணர்வை உருவாக்கக் கூடியதாக நமது ஆடை அலங்காரங்கள் இருக்க வேண்டும்.

வெண்மை நிறமான வேட்டி சால்லையே ஆண்களுக்கு உகந்தது. குளிர் தேசங்களில் வாழ்வோர் மேலங்கி அணிய வேண்டிய அவசியம் ஏற்படுமாயின் வெண்மையான "ஷேட்" உகந்தது.

பெண்கள் உடலை முழுமையாக மூடியிருக்கும் கீழைத்தேய பண்பாட்டுணர்வுக்குகந்த ஆடைகளை அணிய வேண்டும். முக்கியமாகப் பிறர் மனத்தில் விகாரமான சிந்தனை தூண்டப்படாத வண்ணம் சேலை, அல்லது அரைத்தாவணி போன்றவை விரும்பத்தக்கது. இளவர்ணங்கள் கொண்டவையாகவும், எளிமையானவையாகவும் இருத்தல் நன்று.

இளம் நிறங்களும், எளிமையும் எப்போதும் சாத்வீக உணர்வைத் தூண்டி மன அமைதி தரக்கூடியவை. சாந்தியையும், அருளையும் நாடி ஆலயம் செல்லும் போது நமக்கும் பிறர்க்கும் நலம் பயக்கும் ஆடைகள் அவையே ஆகும்.

பெண்கள் அவசியம் திலகம் எனப்படும் பொட்டு அணிதல் வேண்டும். கல்யதணமாகாத கன்னிப் பெண்கள் கறுப்பு நிறமான பொட்டு அணிவர் கல்யாணமான சுமங்கலிப் பெண்கள் சிவப்பு நிறக் குங்குமப் பொட்டு அணிவர் சுமங்கலிகள் நெற்றியில் மட்டுமல்லாமல் உச்சி வகிட்டின் ஆரம்பத்திலும் திலகம் அணிய வேண்டும். அங்கு இலக்குமி வாசம் செய்கிறாள்.

ஆண்கள் சந்தனப்பொட்டு அணிதல் வரவேற்கத்தக்கது மஞ்சள் நிறச் சந்தனம் சிவனையும், சிவப்பு நிறக் குங்குமம் சக்தியையும் குறிப்பவை சக்தி உபாசகர்களாகிய ஆண்களும் குங்குமம் விரும்பி அணிவதுண்டு.

பூஜைகளை நடத்துகின்ற சிவாசாரியார்கள் சிவ - சக்தி ஐக்கயத்தை உணர்த்தும் வகையில் சந்தனம், குங்குமம் இரண்டையும் அணிவதுண்டு.

பொதுவாக நெற்றிப்பொட்டு என்ற இடம் மூன்றாவது கண் ஆகிய அறிவுக் கண்ணுக்குரிய இடமாகும். அந்த இடத்தில் பல நரம்புகள் சந்திக்கின்றன அந்த இடத்தைக் குளிர்மையாக வைத்திருப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம் பேணப்படுகிறது. மேலும் ஹிப்நொட்டிசம் என்னும் வசியக்கலை மூலம் நம்மைப் பிறர் வசப்படுத்த முனையும் போது நெற்றியில் புருவ மத்தியே பயன்பாட்டுக்குரிய இடமாகிறது. அதனைத் தடுக்கும் காவலாகவும் திலகம் அமைகிறது. கைவளைகளும், கழுத்து, காது, மூக்கு முதலிய அங்கங்களில் தங்க நகைகளும் அணிவது பெண்களுக்கு அவசியமானதே. அது லஷ்மிகரமாக அமைகிறது. ஆடம்பரமில்லாமல், பிறர் பார்த்து ஏங்கும் வகையில்லாமல் இவற்றை அணிவது நன்று.

கிரியைகள், சிறப்புவதும் பயனளிப்பதும் நான்கு முக்கிய அம்சங்களில் தங்கியிருக்கின்றன. சரியான மந்திரங்களைச் சரியான உச்சரிப்புடன், பயன்படுத்துவது முதலாவது அம்சம். இரண்டாவது அம்சம் மனோசக்தி. செய்யப்படும் எந்தக் காரியமும் வெற்றியடைவதும், தோல்வியடைவதும் செய்பவர்களின் மனோபலத்தைப் பொறுத்ததே கிரியைகளைச் செய்பவரும் செய்விப்பவரும் சலனமில்லாத நம்பிக்கையும் பரிபூரணமான இறைபக்தியும் உடையவர்களாகச் சிரத்தையுடனும் லயிப்புடனும் அவற்றில் ஈடுபடவேண்டும். கயிற்றின் மேல் நடப்பவன் தன் கவனத்தை வேறெங்கும் சிதறவிடாமல் கயிற்றிலேயே தனது மனத்தை ஒரு முகப்படுத்தி

வெற்றி பெறுகிறான். சங்கீத சாதகன் பாடிக்கொண்டிருக்கும் போது தனது கவனத்தை வேறிடத்தில் செல்லவிட்டால் லயம் தப்பி விடுகிறது. லயிப்பு இல்லாவிட்டால் லயம் தப்பி விடும்.

இதே போல கிரியைகளில் ஈடுபடும் போது ஆத்மார்த்தமான ஈடுபாடும், தன்னம்பிக்கையும், இறைநம்பிக்கையும் மன ஒருமைப்பாடும் இருந்தால்தான் பூரண பலனைக் காணமுடியும்.

மனோசக்தியின் பயன்பாடுகள் பற்றியும், சாதனைகள் பற்றியும், மனோதத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ செய்திகளை ஆதார பூர்வமாகக் கூறுகிறது. வைத்திய போதனைகளில் மனோவசிய முறை நன்கு பயன்படுத்தப்படுகிறது. ஒரு வைத்தியின் போதனைகளால், அவரிடம் நோயாளி வைக்கின்ற நம்பிக்கையால் அரைப்பங்கு நோய் குணமாகிவிடுகிறது. மேலும், சுயவசிய முறைப்படி தனது உடலுறுப்புக்களைத் தானே வசப்படுத்திச் சில நோய்களை மாற்றிவிடக்கூடிய சக்தி மனவலிமைக்கு உண்டு. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தால் நமது கிரியைகளில் மனோசக்தி எவ்வளவு தூரம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பது விளங்கும்.

கிரியைகளில் வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது அம்சம் தலச்சிறப்பு கிரியை நிகழும் ஸ்தானம் அதன் சூழல் என்பன கிரியைகள் நிகழ்வதற்குகந்த முறையில் சாஸ்திர விதிப்படி அமைந்திருப்பது அவசியம். வீட்டிலே நிகழும் கிரியைகளுக்காக அதற்கேற்ற வகையில் இடத்தை ஒழுங்கு செய்வதைக் காண்கின்றோம். ஆலயங்களில் நிகழும் கிரியைகளுக்கும் யாக மண்டபங்கள், வேதிகைகள், கும்பங்கள் முதலியன விதிப்படி அமைய வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல ஆலயமே ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தால்தான் அங்கு நிகழும் கிரியைகள் நாம் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரும்.

நான்காவது அம்சம் நமது சைவசமயிகளுக்கும், தமிழருக்கும் மிகச் சிறப்பாகக் கருதப்படும் சதாசாரமும், தூய்மையுமாகும் ஆசாரம் என்றால் ஒழுக்கம், ஒழுக்கம் என்பது வாழ்க்கையை முறைப்படி நடத்த வேண்டிய நல்வழி.

கிரியைகளை நடத்தும் சிவாச்சாரியார்கள் எப்படி இருக்க வேண்டும். அவர்கள் எப்படி ஒழுகவேண்டும் அவர்கள் எத்தகைய அநுஷ்டானங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று சிவாகமங்களில் ஆசார்ய லட்சணம் என்ற பகுதியில் விதந்துரைக்கப்பட்டிக்கின்றன. அவற்றை அநுசரிக்க வேண்டிய கடமை சிவச்சாரிகளுக்குண்டு. அதே போல் அவர்களைக் கொண்டு கிரியைகளைச் செய்விக்கும் எஜமானர்களும் தத்தமக்கு விதிக்கப்பட்ட ஆசார ஒழுக்கங்களைக் கடைபிடிக்க வேண்டியவர்களாவார்.

ஒழுக்கம் மட்டுமன்றித் தூய்மை என்னும் சுத்தமும் கிரியைகளுக்கு மிக முக்கியமான அடிப்படையாகும் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் (நினைவு, சொல், செயல்) இந்தத் தூய்மை பேணப்பட வேண்டும்.

விஞ்ஞானப் பரிசோதனைகளை ஆய்வுகூடங்களில் நடத்தும் போது குறித்த விதிமுறைகளின் சிறு தவறு நேரினும் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகள் ஏற்படுவதை மாணவர்கள் அவதானித்திருப்பர். நமது சைவகிரியைகளிலும் இந்த நான்கு அம்சங்களும் சீரான முறையில் அநுகரிக்கப்படும் போது மாத்திரமே அபரிதமான அருட்சக்தி பிரவகித்து ஆனந்த வாழ்வை அளிக்கும். இவற்றில் ஏற்படும் தவறுகள், குறைபாடுகள் நாம் எதிர்பார்த்த அளவு பலனைக் கொடுக்காது என்பதுடன் சில எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

வேத மந்திரங்கள் மிகுந்த அர்த்த புஷ்டியுடையவை. அவை வடமொழியாகிய சம்ஸ்கிருத மொழியிருப்பதால் நம்மில் பலர் அதன் முக்கியத்தைப் புரிந்துகொள்வதில்லை.

அவற்றின் உச்சரிப்புக்கள், சப்தங்களில் ஆற்படும் அதிர்வுகள் சூழலிலும், சம்பந்தப்பட்டவர்களின் உள்ளங்களிலும் சில நல்லதிர்வுகளை ஏற்படுத்தவல்லன.

அதுமட்டுமல்லாமல், அந்த மந்திரங்கள் அக்கிரியைகளில் ஈடுபடும் தனிமனிதனுக்குரியதாக இல்லாமல், பரந்துப்பட்ட உலக நன்மைகளுக்குரிய வேண்டுதலாவும் கூட அமைந்திருப்பது வியப்புக்குரியது.

மிகப் பழைய காலத்திலிருந்தே இந்துக்கள் பரந்த மனப்பாண்மையுடனும் விரிந்து பரந்த உலக உயிர்கள் அனைத்தையும் தன்னுடன் ஒன்று சேர்த்துப் பார்க்கின்ற உளப்பாங்குடனும் இருந்து வருகிறார்கள் என்பதை உணர்ந்து நாம் பெருமைப்படலாம்.

# சைவத்தில் திளைக்கும் விக்னேஸ்வரக் கல்லூரி

எனது பாடசாலையாகிய யா/விக்னேஸ்வரக் கல்லூரியிலே சைவ ஒழுக்கமானது மேன்மையான நிலையிலே காணப்படுகின்றது. சைவ மரபுகளைப் பின்பற்றி பல நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. அவையாவன.

01) வெள்ளி ஆராதனை
02) நவராத்திரி விரதம்
03) நாயன்மார்களின் குரு பூசைத்தினம்

அது மட்டும் அல்லாது சுற்றுப்புறச் சூழலில் உள்ள ஆலயங்களின் தேர்த்திருவிழாக்களுக்கு விடுமுறையும் விடுவதுண்டு.

அதாவது வெள்ளி ஆராதனை பற்றி நோக்குவோமாயின், ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இந்து மாமன்றத்தினால் கொடுக்கப்படும் அறிவுறுத்தலிற்கேற்ப ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் தமது பூசை நிகழ்வினைச் செய்வார்கள். உதாரணமாக இன்று வெள்ளிக்கிழமை என்றால் அனைத்து மாணவர்களும் பிரார்த்தனை மண்டபத்தின் கீழ் அமர்வார்கள் மேலும் இறைவன் எழுந்தருளி இருக்கும் மேடையில் கோலம் போடப்பட்டு இருக்கும், கும்பம் வைக்கப்பட்டு இருக்கும், அதுமட்டுமல்லாது மாவிலை, தோரணம், பூமாலை கரும்பு கட்டப்பட்டு இருக்கும் அடுத்து மாணவர் மேடையிலே நின்று தேவார, திருவாசகங்களைப் பாடுவார்கள். பின்பு பூசை நிகழ்த்திய மாண்வர்கள் வேட்டி அணிந்து நிற்பார்கள். தேவாரம் முடிந்ததும் பூசை வைக்கத் தொடங்குவார்கள். இவ்வாறு பூசை நிகழ்வு முடிவடைந்ததும் மாணவர்கள் நிகழ்ச்சிகளை செய்வார்கள் நற்சிந்தனை, பேச்சு, பாட்டு என்று இவை மட்டு மன்றி மாணவர்களின் சைவ அறிவினை விருத்தி செய்யும் முகமாக சைவ வினாவிடைகள் கேட்டு பரிசில்களும் வழங்கப்படும். இவ்வாறு அன்றைய வகுப்பு மிகவும் சிறப்பாக தமது பூசைகளைச் செய்யும். மாணவர்களின் நிகழ்வுகள் முடிவடைந்ததும் அந்த வகுப்பின் ஆசிரியர் மாணவர்களுக்கு சைவ ஒழுக்கம் பற்றி கூறுவார்கள். இவ்வாறாக வெள்ளி ஆராதனையானது சிறப்பாக முடிவுறும் மாவிலை தோரணங்களை அலங்கரிக்கப்பட்டு நிறை குடம் வைக்கப்பட்டிருப்பதை பார்க்கும் போது எமது மனமே பூரிப்படையும்.

அடுத்து நவராத்திரி விரதம் பற்றி நோக்குமாயின், எமது பாடசாலையில் இவ்விரதமானது மிகவும் சிறப்பானதாகவும், பக்தியுடனும் கொண்டாடுவார்கள். முன்னர் கூறப்பட்டது போல (பிரார்த்தனை மண்டப) ஒவ்வொரு வகுப்பும் என இவ் 9 நாட்களையும் ஒதுக்கிக்கொடுப்பார்கள் அன்றைய வகுப்பிற்குரிய மாணவர்கள் அதிகாலையிலே பாடசாலை வந்து மாவிலை, தோரணம், வாழை, இளநீர் போன்ற பொருட்களைக் கொண்டு வெளிப்புறம் அதாவது மண்டபத்தின் வெளிப்புறம் அனைத்தும் மிகவும் அழகாகவும் அற்புதமாகவும் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். முக்கியமாக இவ் அலங்காரம் இயற்கையான பொருட்களாலே செய்யப்பட வேண்டும். என்பது இந்து மாமன்றத்தினரது கோரிக்கை ஆகும்.

இறைவன் இருக்கும் மண்டபத்திலே கோலம் போட்டு இருக்கும். சிட்டி விளக்குகள் ஏற்றப்பட்டு இருக்கும். கும்பம் வைக்கப்பட்டு இருக்கும் இறைவன் இருக்கும் இடமும், இறைவனும் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டு இருக்கும். பின்னர் மாணவர்கள் வெள்ளை நிறத்திலான ஆடைகளை அணிந்து தலையிலே பூமாலை வைத்து, விபூதி தரித்து, பொட்டு வைத்து மிகவும் அழகாக மேடையில் ஏறி சகலகலா வல்லி மாலையைப் பாடுவார்கள் குறிப்பாக ஒவ்வொரு பூசைக்கும் பூசகரை வரவழைத்து பூசை நடாத்தப்படும். பின்பு பூசகரும் உதவி புரியும் மாணவர் ஆசிரியர்களும் விபூதி, சந்தனம், பூ என்பவற்றைக் கொடுப்பார்கள்.இறுதிநாளான விஜயதசமி அன்று வெற்றி பெற்ற

மேலும் அன்று எமது பாடசாலையில் ஒரு தொடக்கம் நிகழ்வும் இடம் பெறும் இவை மட்டுமல்லாமல் பாடசாலை விட்டு நீங்கிச் செல்லும் உயர்தர வகுப்பு மாணவர்களினால் விஜயதசமி அன்று அனைத்து மாணவர்களுக்கும் கடலை, அவல், கற்கண்டு போன்ற உணவுப் பண்டங்களை மாணவர்களுக்கு கொடுத்து மகிழ்வார்கள். இவ்வாறு பல சிறப்புக்களோடு நவராத்திரி விரதமானது. எமது பாடசாலையில் கொண்டாடப்படுகின்றது.

மேலும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவும் வெள்ளை உடை அணிந்த மாணவ மாணவியர் மேடையில் வந்து நிகழ்ச்சிகளைச் செய்வார்கள். பாடல், பேச்சு, நடனம் (அகற்கேற்ற உடையில்) என்று இவ்வாறு நிகழ்ச்சிகள் இடம் பெற்று முடிந்ததும். எமது அதிபரின் வேண்டு கோளிற்கிணங்க யாராவது ஒரு ஆன்மீக நாட்டம் கொண்ட பெரியோரை அழைத்து மாணவர்களுக்கு சொற்பொழி ஆற்றச் சொல்லி எமக்கு பல அரிய கருத்துக்களை அவர்களின் வாயிலாக அறியச் செய்வார்கள். இந்த நாள் இவ்வாறு நடைபெறும் பூசைகள் அனைத்தும் மாணவர்களின் அடுத்து நோக்கும் போது நாயன்மார்களின் இரு பூசைத் தினங்களும் இங்கு இடம் பெற்று வருகின்றன. 63 நாயன்மார்களில் சிறப்பானவர்களான திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிகவாசகர் என்பவர்கள் மோட்சம் பெற்ற அந்நாட்களே குரு பூசைத்தினமாகக் கொண்டாடப்படுகின்றன.

பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவில் உலக உணவு திட்டமானது என சைவ உணவுகளை வழங்கிய போதும் எமது பாடசலை இவற்றை விடுத்து சத்துள்ள சைவ உணவுகளை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளில் நடைபெறும் விருந்துபசார நிகழ்வுகளிலும் சைவ உணவுகள் வழங்கப்படாமை எமது பாடசாலை சைவத்தில் திளைத்திருப்பது சிறப்புக்குரிய விடயமாகும். மேலும் எமது பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தரும் போது விபூதி, சந்தனம் என்பவற்றை அணிந்து வருவது எமது பாடசாலையின் சைவக்கலாசாரத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

எமது பாடசாலையில் இறுதி வருட மாணவர்கள் எமது இந்து மாமன்றத்திற்கு பல அன்பளிப்பு பொருட்களை அம் மாணவர்கள் வழி வகுக்கின்றனர் அந்த வகையில் காளாஞ்சி, தாம்பாளம், நிறைகுடம் இறைவனின் திருவுருவங்கள் என்பவற்றை அன்பளிப்பு செய்துள்ளனர். எமது இந்து மாமன்றத்தை வழி நடத்திச் செல்லுகின்ற ஆசிரியர்கள் அதனை மிகவும் செம்மையாகச் செய்து வருகிறார்கள்.

இவ்வாறாக எமது பாடசாலையில் நடைபெறும் சமயகலாசார நிகழ்வுகளில் சைவசமய ஒழுக்காறுகள் சிறப்பாக கடைப்பிடிக்கப்படுவது எமது பாடசாலை சைவத்தில் திளைத்திருப்பதற்கு சான்றாகும். விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனின் நாமம் கொண்ட எமது கல்லூரி விக்கினங்களை அகற்றி மேன்மை பெற்று விளங்கும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

"வாழ்க சைவம்
வளர்க விக்னேஸ்வரா"

இ.தாட்சாயினி
கலைப்பிரிவு (2010)
யா/விக்னேஸ்வரக் கல்லூரி

# இந்து நாகரிகத்தின் சிறப்பு

இந்து மக்களது வாழ்வியல் முறைமைகளை எடுத்தியம்பும் இந்துப் பண்பாட்டுப் இந்து நாகரிகம் பல சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டு ஒரு நிறைகுடமாக திகழ்கின்றது. உலகிலுள்ள பல வகையான சமயப் பண்பாடுகளிலே இந்துப் பண்பாடானது தனித்துவமானதும் மேன்மையானதும் ஒப்புவமையற்ற சிறப்பானதும் ஆகும். அத்தகைய தனித்துவமான 'பண்பாட்டுக் கூறுகளே இந்து மதம் என்னும் பெருவிருட்சம் இன்று உலகம் புகழ் பெறுவதற்கு காரணம் எனலாம்.

இந்து நாகரிகமானது தொன்மையானது, சனாதனமானது, சமயம் பொறுமையுடையது பிற சமயக் கருத்துக்களை தன்னகத்தே ஏற்று சமய ஒருமைப்பாடுடையதாகவும் விளங்குகின்றது. வைதீக நெறியின் அடிப்படையில் இறை உண்மை, இறை நம்பிக்கை என்பவற்றை ஏற்று வாழும் சிறப்புடையது. மானிட ஆற்றலை விட இறையாற்றலே மேலானது எனும் கருத்துக்களை கொண்டுள்ளது.

வாழ்வியல் தர்மத்தை மனித வாழ்க்கையின் விதிகளாக இந்து நாகரிகம் எடுத்துரைக்கின்றது. இதற்கு சான்றாக பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் வாழ்க்கையின் படி நிலைகளாகளாகிய நால் வகை ஆச்சிரமங்களையும் வாழ்வின் உறுதிப் பொருட்களாக விளங்கும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடார்த்தங்களையும் குறிப்பிட்டு கொள்ளலாம்.

பண்பாட்டின் பரிணாமங்களாக விளங்கும் சமூகம், சமயம், தத்துவம், கலை, அரசியல், கல்வி, அறிவியல் என்பவற்றினை இந்துப்பண்பாட்டின் சிறப்பம்சங்களாக அவதானிக்க முடிகிறது இந்துப்பண்பாடு திடமான மூல நூல்கள் சாஸ்திர மயப்படுத்தப்பட்டு அமையப் பெற்ற சிறப்பு வாய்ந்துள்ளது. இதற்கு சான்றாக அரசியல், பொருளாதார சிந்தனைகளை கூறுகின்ற கௌடில்யரது அர்த்த சாஸ்திரம் எனும் நூலினை கூறலாம்.

இந்து தத்துவங்கள் வாழ்வியலை இணைத்து கூறுகின்ற முறைமை மேலும் சிறப்பானது அதாவது மனித வாழ்வினையும் அவ் வாழ்வானது செம்மையாக வாழ்வதனால் கிடைக்கின்ற முத்திப் பேறு பற்றியும் ஆன்ம விடுதலை பற்றியும் இந்து நாகரிகம் தத்துவங்களினூடாக எடுத்துரைக்கின்றது. இதற்கு சான்றாக சைவத்தின் முடிந்த முடிவாக காணப்படும். சைவ சித்தாந்தமானது சமய வாழ்வியல் தத்துவத்தையும் மற்றும் அறிவியல் உளவியல் கருத்துக்களையும் உள்ளடக்கி இருப்பதனை அவதானிக்க முடிகிறது மேலும் இந்து நாகரிகமானது அறிவியல், வானியல், சோதிடவியல், உளவியல், கணிதவியல் மருத்துவவியல் முதலிய துறைகளை உள்ளடக்கி இருப்பதனால் உகளாவிய ரீதியில் இதற்கு பெருமை உண்டு.

இந்து நாகரிகம் அனைவருக்கும் அனைத்து காலத்திற்கும் பொருத்தமான விடயங்களை கூறுவதால் சனாதன தர்மமாக விளங்குகின்றது. மண்ணிலே நல்ல வாழ எண்ணங்களை பதிவு செய்த இலக்கியங்கள் இந்துக்களால் படைக்கப்பட்டுள்ளன. பிறர் நலம் பிறருக்கான பிரார்த்தனைகள் விருந்தோம்பல் உணர்வுகள் என்பன சமய வாழ்வாதாரமாக தர்மமாக இந்துப் பண்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளன.

இந்திய தேசத்திலே பல பண்பாட்டு சங்கத்தை எடுத்துக்காட்டும் பெருமையும் இந்தும் பண்பாட்டிற்கே உண்டு இதற்கு சான்றாக வடமொழிக்கலாச்சாரம், தமிழ் மொழிக்கலாச்சாரம் என்பவற்றின் பிணைப்பை அங்கு காணலாம் இந்தியாவிற்கு உரியதாக விளங்கும் இந்து நாகரீகம் இன்று இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, கனடா, சுவிஸ், பிரான்ஸ், அவுஸ்ரேலியா தென்கிழக்காசிய நாடுகள் போன்ற பல நாடுகளிலே பரவலடைந்திருப்பதும் இந்து நாகரிகத்தின் சிறப்பினையே பறை சாற்றுகின்றது.

இந்து சமுதாயத்திலுள்ள பிரம்மசமாஜம், ஆரியசமாஜம், காந்தியம், இராமகிருஷ்ணமிஷன் போன்ற சீர்திருத்த இயக்கங்களினதும் சைவ பரிபாலன சபை சைவ வித்யா அபிவிருத்தி சங்கம், விவேகானந்த சபை போன்ற அமைப்புக்களினாலும் மேற்கொள்ளப்படும் சமய சமூக கல்விப் பணிகளும் இந்து நாகரிகத்தின் சிறப்பினையே புலப்படுத்துகின்றன. உலகளாவிய இலக்கியங்களிலே இசைப்பாடல் வடிவங்களையும் உள்ளடக்கிய சிறப்பும் இந்து பண்பாட்டில் உண்டு காலம் காலமாக வளர்ந்து வரும் கலைப் பண்பாட்டை கூறுவதுடன் **"கலைகள் கலைக்காவே"** என்பதை விட **"கலைகள் ஆன்மீக அனுபவத்திற்காகவே"** எனும் கலைத்தத்துவத்தையும் ரசனையினையும் அரவணைத்து கொண்டுள்ளது.

இந்து நாகரிகமானது இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள் என்பவற்றின் ஊடக அறக்கருத்துக்களையும் புராணங்களின் ஊடாக தத்துவக் கருத்துக்களையும் எடுத்துக்கூறும் வகையிலும் சிறப்பு பெறுகின்றது மேலும் பிற மதக்கருத்துக்களை ஏற்றும் மதித்தும் போற்றும் தன்மை இந்துப் பண்பாட்டின் மற்றுமொரு சிறப்பம்சம் ஆகும்.

உலக விடுதலைக்கும் நன்மைக்கான வேண்டுதல்கள் நாளாந்தம் ஆலயங்களில் ஒலிக்கின்றன. எவ் வித குறைகளும் இன்றி உயிர்கள் வாழ வழிகாட்டும் சைவ நீதிக் கருத்துக்கள் பிரதானமானவை மேலும் பயன்கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்துப் பண்பாடு கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்றும் **"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்றும் பணிவான தொண்டினை உயர் நெறியாக கொண்டுள்ளமை சிறப்பம்சமே ஆகும்.

உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு இந்து நாகரிகத்தில் உன்னதமானது. இம்மை உலகம் மறுமை உலக வாழ்வையும் அந்த உலக வாழ்வில் இருந்து விடுபடும் ஆர்வத்தை தூண்டும் தன்மை இம் பண்பாட்டின் சிறப்பே ஆகும்.

இவ்வாறு பல சிறப்புக்களையுடைய இந்து நாகரிகம் இன்றைக்கு கிட்டத்தட்ட 5000 ஆண்டுகள் பழமையானதாக கருதப்படுகிறது. தனக்கு சமகாலத்தில் தோற்றம் பெற்ற பிற பண்பாடுகளின் சுவடுகள் அழிந்து போக கால தேச வர்த்தமானங்களை கடந்து இன்று வரை நிலை பெற்றுள்ளது இதுவும் இம் பண்பாட்டின் சிறப்பே ஆகும்.

இவ்வாறாக பல சிறப்புக்களை உடைய இந்து பண்பாடானது எமது நாடான இலங்கையிலும் ஏனைய உலக நாடுகளிலும் அழியாது பேணப்பட்டு வருகிறது. இலங்கையிலே இந்து நாகரிகமானது க.பொ.த உயர்தரத்திலே ஒரு பாடமாக கற்பிக்கபடுகின்றமையும் பல்கலைக்கழகங்களிலே பட்டப்படிப்பிற்குரிய ஒரு பாடமாகவும் இந்து நாகரிகம் விளங்குகின்றமையும் அதன் சிறப்பை பெருகூட்டுவதாக அமைகின்றது.

**ஆக்கம்**
**கி. பானுரேகா**
**A/L 2010**

# கரவெட்டியின் சமயப்பாரம்பரியம்

திருமூலரால் 'சிவபூமி' எனப் போற்றப்பட்ட ஈழமணித் திருநாடு சிவபூஜா துரந்தரனாகிய இராவணனால் ஆளப்பட்ட நாடு என்பதால் அண்டு தொட்டு சிவமணம் கமழும் சமயப்பற்றும் சமயநெறியும் மேன்மை பெற்று விளங்கிய நாடாகவும் உள்ளது. இத்திருநாட்டின் சிரமென விளங்கும் புண்ணிய பூமியாகிய யாழ்ப்பாணத்தின் சைவப்பாரம்பரியம் மிகு பதிகளுமா ஒன்றாகத் திகழும் பெருமை மிக்கது கரவெட்டி "கற்றோர் மிகுந்த கரவெட்டி" என ஆன்றோரால் புகழப்படும் இக்கிராமம் சைவமும் தமிழும் கலந்த நற்கல்விக்கோர் தனமாகத் திகழ்கின்ற தெனில் மிகையாகாது

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்ந்தது நாடு"

என்ற வள்ளுவர் கருத்திற்கமைய குறைவற்ற விளை பொருளும் நல்லாரும் கேடில்லா செல்வமுடையாரும் கூடிப் பொருந்திய பதியாக திகழ்வது மேன்மையாம் இதனை 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த நல்லூர் சின்னத்தம்பி புலவர் கரவெட்டியின் நிலப்பிரபுவும் சேர்ந்து நிலையிட்ட யாழ்ப்பாண முதலியாரின் மகனுமான வேலாயுத பிள்ளை மீது பாடிய கரவை வேலன் கோவை தூலமாய் உரைக்கும் இது ஈழத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் உள்ளூர்ப் பிரபுத்துவ பரம்பரையைப் பாடும் முதல் இலக்கிய மெனினும் அதனூடாக கரவெட்டியின சமூகப் பின்னணியையும் பண்பாட்டு ஆளுமையையும் வெளிக் கொணரும் ஆவணமாகத் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது. தேசியப் பண்புடைய இவ் இலக்கியத்தில் சைவ சமயமே மேலோக்கியமதமாக திகழ்ந்தமைக்கு சான்றுகள் உள்ளன.

மந்திர நேரும் கரவையில் வேலன்

பிறை சூடியைத் தொழும் கரவை வேலன்
233
வேலாயுதனை வணங்கும் கரவையில்
208
விடையண்ணல் பதம் முடிப்பூவென வைத்த வேலன்
196

எனும் கரவை வேலன் கோவை பாடல் அடிகள் ஆகமரபுக் கோவில் பொருந்திய ஊரென்பதையும் சிவபிரான் முருகன் தெய்வ வணக்கங்கள் உடைய சைவ மரபில் உயர் பதி என்பதையும் எடுத்துரைக்கின்றன.

## கரவெட்டியின் அமைவு

வடமராட்சியின் மிகப்பெரிய கிராமம் ஆகிய கரவெட்டி பல கிராமங்களின் தொகுதி அது கிழக்கு, வடக்கு, மேற்கு, மத்தி, தெற்கு எனப் பல உட்பிரிவுகளையும் கட்டைவேலி, மத்தொணி, நெல்லியடி, கன்பொல்லை, கிழவித்தோட்டம், யார்க்கரு எனச் சிறு அலகுகளைக் கொண்ட பரந்த ஒரு ஊராகும். இங்கு தெலுக்கன் கோட்டை என்றழைக்கப்படும் தெலுங்கன் கோட்டை காணப்படுவது வலராற்றுச் சிறப்பைத் தருகிறது.

இவ்வூரில் தென் எல்லையாக விளங்கும் உப்பளம் இயற்கை அரண் என்றே கூறலாம் தெற்கிலு கிழக்கிலும் காணப்படும் கழனிகளும் குடியிருப்புகளும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படாதிருக்க கரையிலிரு [illegible] பெரிய மணற் குன்றை வெட்டி அமைத்த அதன் எச்சமாக ஊர் எல்லையிலுள்ள வயல்களை அடுத்து [illegible] வரப்புகள் இன்றும் உள்ளன.

இவ்வூரின் எல்லையில் சோழராட்சியில் அரச வரியைக் கட்டும் இடமாகிய ஆயம் அமைந்துள்ளதும் பரவைக் கடல், கண்டல் தில்லை செறிந்த காட்டுப் புதர்ப்பகுதியாகிய கும்பிக்காடு அதாவது [illegible] காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இங்கு கி.பி 15ம் நூற்றாண்டினைச் சேர்ந்த பிள்ளையார் [illegible] பெற்றமை சைவ மரபின் தொன்மைக்குச் சான்றாகும்.

இப்பிரதேச அமைவுகள் யாவும் பாரம்பரியப் பழமை போன்ற உணர்வுடன் இயங்கும் அதே வேளை புதுமையை ஒதுக்காது உள்வாங்கி தமக்கென ஓர் வரையறை வகுத்து வாழும் பண்பினைக் கொண்டு விளக்குகின்றன. மேலும் தமக்கென ஓர் கருத்து நிலையை பேணும் செயற்பாடுகளால் சிறப்புற திகழ இயற்கையே அரண் அமைத்துப் பேணுவது காரணம் எனலாம். இக் காரணங்களால் கரவெட்டி சைவபாரம்பரியத்தின் மரபு பேணுகை சார் நிறுவனமாகவே முத்திரை பதிக்கிறது.

## கரவெட்டியின் பின்புலம்

கரவெட்டியில் ஆழ்ந்த இறை பக்தி கோவில் தொண்டுகள், தமது உடைமைகளை ஆலயங்களுக்கு தர்ம சாதனமாகக் கொடுத்தல் தமது குல தெய்வங்களில் குளிர்ச்சி கண்டு அகமகிழ்தல் ஆகம வழி நின்று வழிபடல் நின்று வழிபடல் ஆலய குருவின் வழி காட்டலை சிரமேற்கொண்டு செயற்படல் ஆலயக் குருவிற்கு தொண்டு செய்தல் ஆகிய உயர் பண்புகளை பாரம்பரியமாகக் கொண்டு ஒழுகியமையால் அவை மக்களுக்குரிய பண்பாடாயிற்று. அதற்கு இக் கிராமம் மருத நில மையத்திலே அமைந்திருந்தமையும் அதனோடு தொடர்புடைய விவசாய வாழ்வும் நிலப் பிரபுத்துவ ஆளுகையுமே ஆரம்பத்தில் அடிக்கட்டுமானம் ஆயின.

## கரவெட்டி தெய்வ வழிபாடு

கரவெட்டியில் திராவிட மக்களுக்குரிய இருவகை வழிபாடுகளும் பேணிபட்டு வந்தமை பிரதேசங்க கோவில்களினூடே கண்டு கொள்ள முடிகின்றது. இதில் ஆகம வழிபாட்டு முறைமையாவது திராவிட மக்களுக்குரிய மந்திரங்களால் பூசித்து வழிபடும் முறையாகும் இந்து மதத்தில் பல்வேறு கடவுள் வழிபாடு இருந்த போதும் முழு முதற் கடவுள் எனப் போற்றப்படும் பிள்ளையாரே கண்கண்ட தெய்வமாக போற்றப்படுவதற்கு நாற்றிசைகளிலும் உள்ள பெருங்கோவில்களாக தச்சந் தோப்பு சிந்தாமணி விநாயகர், கிராய் வெல்லன் விநாயகர், கிழவி தோட்டம், ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளை விநாயகர், கப்புதூ வீரகத்தி விநாயகர் கோவில்களுடாக அறிய முடிகிறது.

இக் கோவில்களும் 300 வருடப்பழமையான கோவிலாக கப்புதூ வீரகத்தி விநாயகர் கோவில் உள்ளது. மூல மூர்த்திகளுடன் பரிவார மூர்த்திகளும் நாயன்மார்களுமுடைய இக் கோவிலுக்கு கோயில் புராணமும் ஊஞ்சல் பாட்டும் உள்ளமை சிறப்பாகும். கிராய் வெல்லன் விநாயகருக்கு 200 ஆண்டு கால வரலாறு உண்டு. 1879ல் நடந்த தீவிபத்தைத் தொடர்ந்து பெரிய வாயில்களுடன் அமைக்கப்பட்ட இக் கோவிலில் மூல மூர்த்தியுடன் பரிவார மூர்த்திகளும் உள்ளனர். பரிவார மூர்த்திகளாக சிவன் நாகதம்பிரான் வேல் என்பவை விளங்குகின்றன. இக் கோவிலுக்கும் ஊஞ்சல் பாடல்கள் உள்ளன மேலும் இக் கோவிலில் பெரியபுராண கந்தபுராண படிப்பும் தேவார பாரயண வகுப்பும் இன்றும் நடைபெறுவது சிறப்பாகும் தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் கோவில் 1856ல் கொற்றர் பரமர் புண்ணிய மடம் என்ற பெயரில் இருந்த மடத்தில் வணங்கிய பிள்ளையாருக்கு அமைக்கப்பட்ட கோவிலாகும். இக் கோவிலுக்கு காசியில் இருந்து கொண்டு வரப்பட்ட பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டமை சிறப்பாகும். 1918ல் இராஜகோபுரம் அமைக்கப்பட்டதுடன் இன்று இவ்வாலயத்தில் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளும் மூர்த்தியாக உள்ளனர். இக் கோவிலின் மேல் பாடப்பட்ட தச்சைச் சிலேடை வெண்பா தனிச் சிறப்பாகும் இத்தலத்தின் மீது ஊஞ்சற் பாடல்களும் பாடப்பட்டுள்ளன. இங்கு கந்த சஷ்டி, பிள்ளையார் கதை நாட்களில் புரான நடனம் வாசிப்பது தனித்துவ பண்பாடும். மேலும் இக் கோவிலின் மகோற்சவம் நடைபெறும் நாட்களில் இடம் பெறும் பிரசங்க மரபும் அதனை ஆர்வமுடன் செவி மடுக்கும் அடியார் கூட்டமும் பழமையின் சாயலாகும் கரவெட்டி கிழக்கு ஸ்ரீமகாப்பிள்ளையார் கோவிலும் தோம்புக் காலத்துக்கு முற்பட்டதாகும் இங்கும் ஏனைய கோவில்களின் மரபே பேணிப்படுவது குறிப்பிடத்தக்கது.

இன்று சமய விழிப்புணர்ச்சி இயக்கம் ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்டதன் தாக்கமாக ஆகமக் கோவில்களாக பல புத்துயிர்க் கொன்டுள்ளன. இவ் வகையில் முருகன் கோவில் அம்மன் கோவில் போன்ற கோவில்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றின் வழிபாட்டு முறைகள் அவ்வச் சமூகங்களின் வழங்களுடன் ஒன்றுபட்டுத் திகழ்கின்றன. தற்போது பிரசித்தி பெற்ற ஆகமக் கோவில்களாக தடங்கன் முருக மூர்த்தி ஆலயம், அந்திரான் முருகன் ஆலயம், உச்சில் புவனேஸ்வரி ஆலயம் என்பவையும் முடக்காடு ஞான வைரவர், பிராமணத்தோட்டம் வைரவர் முதலான ஆலயங்களும் திகழ்வது சைவப் பாரம்பரியச் செழுமையைக் காட்டுகின்றது.



சுயம்பு

## கிராமிய தெய்வ வழிபாடு

கிராமத்துக்கேயுரிய உயிரோட்டமான வழிபாடாகிய கிராமியத் தெய்வ வழிபாடும் எமது பிரதேசத்தின் சிறப்பு என்றே கூறலாம் கிராமிய தெய்வங்களாக கண்ணகி, அம்மன், காளி, வைரவர், நாகதம்பிரான், ஐயனார், அண்ணமார் போன்றன காணப்படுகின்றன.

### கண்ணகி

பத்தினித் தெய்வமாகிய கண்ணகி வழிபாடு இயற்கை அரண்களால் மரச்சோலையிலே அத்துளு எனும் வருகின்றது. இக் கோவிலில் வைகாசிப் பொங்கல் நடக்கும் எனினும் பங்குனித் திங்களில் நீர்ப்பாளையம் எனப்படும். மரக்கறி கலந்த சோறுபடைத்து வழிபடுதல் தனிச்சிறப்பாகும் இறுதித் திங்களன்று இரவினிலே காத்தவராயன் கூத்து இக் கிராம பல சாதிக்குழமங்களாலும் நேர்த்திக் கடனாக வெள்ளியில் கண் மலர்கள் செய்து கொடுப்பதும் ஆயிரம் கண் பானையில் விளைகற்பூரம் எரிப்பதும் வழக்கமாகும். ஆதியில் இத்தலத்தில் தீக்குளித்தல் வழிபாடும் நடைபெற்றது.

### காளி

காளி இக்கால கிராம மக்களின் குல தெய்வமாக வீடுகளில் இருந்து அருள் பாலிப்பதனால் பெரும்பாலான வீடுகளில் தோறும் வீட்டின் ஒரு மூலையில் உள்ள மரத்தின் கீழ் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பழம், பாக்கு, வெற்றிலை படைத்து கற்பூரம் ஏற்றி பூசை செய்து வழிபடுவர்கள். இதற்கு வீட்டு மூதாட்டியே விளக்கு வைப்பார் ஆண்டுக்கொரு முறை பொங்கல் பொங்கி படை வைப்பார்கள். நோய் நொடி வந்தால் வருத்தம் மாறியபின் பொங்கல் பொங்கி படைக்கும் மரபும் இங்கு உண்டு.

மேலும் வேறு தெய்வக்குறை, செய்வினைகள் பிரிவு முதலிய துன்பங்களிலிருந்து காக்கும் தெய்வமாகவும் காளி விளங்கப்படுகின்றது. இதனோடு தொடர்புடையதாக வேறுபட்ட குலமங்களில் வைரவர், கழவேறி, காத்தவராயர் முதலிய தெய்வங்களும் வணங்கப்படுகின்றனர். வேள்வியில் அம்மனுக்கு பழங்களால் மடைபரப்புவர் காத்தவராயர் கழவேறி ஆகிய காவல் தெய்வங்கட்கு இறைச்சி, மீன், முட்டை, சாராயம் ஆகியவற்றோடு சுறாபிட்டு முதலியவைகளும் சேர்த்துப் படைப்பர் பறை மேளம் அடிப்பர் ஊர் எல்லை வரை நள்ளிரவு வேளையில் தெய்வமேறிய மூவரும் சென்று சுற்றி வருவதையும் காணலாம்.

காளி, வைரவர் கோவில்களில் பறையடித்து உருவாடி பூசை நடக்கும் உயிர்ப்பலியாக கோழி வெட்டுவர் பின் ஊரை வலம் வருவர் ஒரு நாற் சந்தியில் பூசை பண்ணி இளநீர் வெட்டி கிழக்குத் திசை நோக்கித் தேசிக்காய் எறிவர் பலி வெட்டுக் கோவில்களில் ஆடு, மாடு வெட்டும் மரபும் காணப்பட்டது. இன்று மஞ்சள் நீர் தெளித்து விடுவது சடங்காக மாறி இருப்பது போற்றத்தக்கதாகும். எனினும் இன்று சில வைரவர் கோவில்கள் சமூக மரபு மாற்றங்கட்கேற்ப ஆகம முறைமையான கோவிலாக மாற்றம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

### பெரிய தம்பிரான்

கரவெட்டி சண்டிக்குளத்துக்கருகில் பெரிய தம்பிரான் கோயில் உள்ளது. இங்கு நடக்கும் மடையின் போது தாழங்காய்களையும் வைப்பர் இவை அருகிப் போகும் வரை அங்கேயே விடப்படும் சித்திரைப் பௌர்ணமி அன்று சித்திரபுத்திரனார் கதைப்படிப்பும் சித்திரைக் கஞ்சி காய்ச்சி எல்லோர்க்கும் வழங்குவதும் சிறப்பாகும் மண்கொட்டிலில் வழிபட்டு வந்த இத் தெய்வம் இன்று கோவில் அமைப்பிற்கு மாற்றம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

### ஐயனார் வழிபாடு

இதை தவிர பேய், வன விலங்கு கண்டு அஞ்சும் வேளையில் ஐயனாரை வழிபட்டால் துன்பம் நீங்கும் எனும் நோக்குடன் ஐயனார் அண்ணமார் வழிபாடு நடைபெறுகிறது. சில இடங்களில் பாம்பு புற்றை மையமாகக் கொண்டு நாகதம்பிரான் வழிபாடுகளும் காணப்படுகின்றன. இவ் வழிபட்டால் பாம்புகளால் வரும் துன்பம் நீங்கி விடும் எனும் என்பது ஐதீகம் நாச்சிமார் வழிபாடு எனப்படும் சப்த கன்னிகள் வழிபடும் தோட்டக் கிணறு பொதுக்கிணறு என்பவற்றிற்கு அருகாமையில் மேற்கொள்ளப்படுகிறது. இது ஆடிப்பூரநாளில் மேற்கொள்ளப்படுகிறது. அன்று ஏழு கல் எடுத்து கிணற்றருகே கும்பம், பழங்களின் மடை என்பவற்றால் பூசை செய்து பின் அக் கற்களை கிணறுகளில் இறக்கி விடுவார். இதன் மூலம் வற்றாத கிணறுகளாக விவசாயவளம் தரும் என்பது ஐதீகம் விவசாய வாழ்வின் தன்மைக்கேற்ப கிராமிய வழிபாட்டு மரபினைப் பின்பற்றி வந்த மக்களிடம் ஆகம மரபினை பின்பற்றிய கோவில் வழிபாட்டு முறைகளும் சமத்துவப் பாங்குடன் இடம் பெற்றமை கவனிப்புக்குரியதாகும்.

## வழிபாட்டு முறை/கலை வடிவம்

தமிழர்களுடைய மரபு வழிக் கலை வடிவங்களை வழிபாடுகளுடன் இணைத்ததாக இங்கு காணமுடிகிறது. காவடி கரகம் எனும் கலை வடிவங்கள் இங்கு மக்களின் நேர்த்திக் கடன் தீர்க்கும் முறைகளாக காணப்படுகிறது. எனினும் மகோற்சவ காலங்களில் ஆனந்தக் காவடியாக, ஆட்டக் காவடியாக இடம் பெறுவதுண்டு.

கூத்துக் கலையும் சமயச் சடங்காக நேர்த்திக் கடனுக்காகவும் பொழுது போக்கிற்காகவும் ஆடப்படுகின்றது. கூத்துக்கலை எமது பிரதேசத்தில் காத்தவராயன் மரபே காணப்பட்டது. கூத்துப்பழக்கம் முதல் கூத்து மேடையேற்றம் வரையான காலப்பகுதி வரை இடம் பெறும் சடங்குகளில் சைவ சமய கிரியை முறைகள் இடம் பெறுகின்றது.

கிராம சிறு தெய்வ வழபாட்டில் உருவேறிய ஆட்டம் தெய்வீகமும் கலைப் பாங்கும் நிறைந்த ஆட்டமாகக் காணப்பட்டது. பொங்கல், வேள்வி, மடை, குளிர்த்தி விழாக்களில் உருவேறி ஆடுவர் ஆழ்ந்த தெய்வ பக்தியினை ஆடலாம் வெளிப்படுத்தும் சக்தியும் ஒருங்கே கொண்ட ஆடல் வடிவம் இதுவாகும். மனதில் ஏற்பட்ட உணர்ச்சி வெளிப்பாடு இவ் வழிபாட்டு முறைகளாக அமைத்தது.

## பிரசங்கம்

கரவெட்டியிலுள்ள ஆகம ரீதியாக இயங்கும் பெரிய கோவில்களில் பேச்சு கலை வடிவமாக கோவில்களில் பிரசங்க மழையாகப் பொழிந்தது. பாலர் முதல் பண்டிதர் வரை கேட்டுப் பயனடைந்தனர். சைவம் எனும் பயிரை வளர்க்கவும் பேருதவியாய் அமைந்தன. இப் பிரசங்கங்கள் மகோற்சவ காலங்களில் தொடருரையாக அமைந்து புராண இதிகாச மரபையும் மக்கள் மத்தியில் வளர்த்தன இது ஏனைய பிரதேசங்களில் வழக்கிலிருந்த போதும் தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய மகோற்சவத்தில் ஏக நிகழ்வாக இடம் பெறுவது சிறப்பாகும் ஆரம்பகாலத்தில் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் தற்போது ஈழத்தின் புகழ் பூத்த பேச்சாளர்களும் பிரசங்கியராகவும் செயற்பட்டமை தேசிய பண்புடைமை நோக்கி நகர்வதாகும்.

## புராணபடன மரபு

ஈழத்தின் சைவப்பண்பாட்டு மரபுகளுடன் புராணபடனம் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. இங்கு சாதாரண பொதுமக்கள் புராணத்தைக் கேட்டுப்பயன் பெறுவது செய்யுலானன்றி உரையாலேயே நிகழ்ந்தது எழுதப்படிக்க தெரியாத மக்களுக்குச் சமயச் செய்திகளையும் அறிவுப் பிரதேசங்களையும் கொண்டு செல்லும் சிறந்த ஊடகமாக புராணபடனம் பயன்பட்டது. எமது பிரதேசத்தின் கந்தபுராணப்படனமே சிறப்பானதாகும். இது மூன்று மாதங்கள் தொடர்ந்து படிக்கப்படுவதுண்டு பிள்ளையார் கதைக்காலங்களில் பிள்ளையார் கதை சாதாரண பக்தர்களினால் வாசிக்கப்படும். புராண பாடல் வாசிப்பவர் திருச்சிற்றம்பலம் கூறி ஆரம்பித்து குறிப்பிட்ட பாடலை இசையுடன் வாசித்ததும் அதற்கேற்ப பொருள் உரைப்பவரும் இசையுடனேயே கூறுவர் இன்றியமையாத இடங்களில் விரிவான கருத்துரை, வியாக்கியானங்கள் செய்வர் இதன் மூலம் பெண்கள், முதியோர், கல்வி விருத்தி பெற்றது சமயக்கல்வி, ஆன்மீகக்கல்வி போன்றன கரவெட்டியில் வளர்ச்சி பெற்றன இதனூடாக கந்தசஷ்டி விரதம், பிள்ளையார் கதை விரதங்கள் மக்களால் பெரும்பாலும் அனுஷ்டிக்கப்பட்டன. மக்கள் நினைத்தது நடக்க துன்பங்கள் நீங்க நேர்த்திக்கடனாக புராணபடன காரருக்கு உணவு வழங்கும் முறையில் உண்டு இது இன்றும் இங்கு மங்காது தொடர்வது தனிச்சிறப்பாகும்.

## மரபு சார் இலக்கிய மரபு

கரவைத் தமிழறிஞர்களிடமும் சைவசமயம் பாரம்பரியம் ஊறியிருந்த தன்மையினால் இவர்கள் ஆக்கங்கள் யாவும் சமய சார்பைப் பெற்றிருந்தன இதனை இம் மண்ணில் தோன்றிய மரபு சார் இலக்கியப் பொருள் மரபினூடாக கண்டு கொள்ள முடிகிறது. இதற்கு 1955 இல் கார்த்திகேயப்பிள்ளையினதும் கந்த புராணம் விளக்கக் குறிப்புகளும் அவற்றைத் தொடர்ந்து க.சிற்றம்பல உபாத்தியாயரின் யார்க்கரு விநாயகர் அந்தாதியும் திரு.க.பொன்னம்பல உபாத்தியாரியின் சந்தான சரித்திரமும் பண்டிதர் க.சின்னத்தம்பி திருச்செந்தூர் திருவிரட்டை மணிமாலையும், தச்சை செல்வச்சந்நிதி மான் விடுதூதும், தச்சை விநாயகர் பிள்ளைத் தமிழும், பண்டிதர் க.வீகத்தியின் சிவதி புராணம், அன்னை நவநீதம், கந்தனே என் சிந்தனை எனும் இலக்கியங்களும், ஈழத்து கருகம் பனையூர் சதகம், ஊரெழு சிவபூரணி கவிதாஞ்சலி, தெய்வப் பதிகங்கள் என்பவையும் பண்டிதர் த.பொ.கார்த்தி கேசுவின் செல்வச் சந்நிதி வேற்பெருமான் தோத்திரம், செல்வச்சந்நிதி வேற்பெருமாள் பாமாலை, ஒருபா ஒருபஃது எனும் நூல்களும் க.கணபதிப்பிள்ளையின் கரவை தச்சைச் சிலேடை வெண்பா, அத்துளு அம்பாள் அந்தாதி, திருச்செந்தூர் சிலேடை வெண்பா எனும் செய்யுளிலக்கியங்களும் சான்று பகர்கின்றன. மேலும் ஆங்கிலப் பட்டதாரியான வ.சிவராசசிங்கம் எழுதிய நயினை நாகபூசணி பிள்ளைத்

தமிழ் பலதல தெய்வ திருவூஞ்சல் பதிகங்கள் எனும் நூல்களும் ஸ்ரீ வல்லிபுர ஆல்வார் கோயில் பற்றி எழுதிய கட்டுரைகளும், புராண உரைகளும் குறிப்பிடத்தக்கது இம் மண்ணில் தோன்றிய சைவமரபு வழி இலக்கியங்கள் இப் பிரதேச மதச் செல்வாக்கினை காட்டுவது உண்டு குறிப்பிடத்தக்கது.

### பிறமதப்பரம்பல்

இலங்கையில் 17ம் நூற்றாண்டில் இடம் பெற்ற போர்த்துக்கேயராட்சி பாரதூரமான சமய பண்பாட்டு மாற்றங்களைத் தோற்றுவித்தன. அவர்கள் மிக மோசமான முறையில் வழிபாட்டிடங்களை இடித்தமையால் இந்து மதம் தளர்ச்சியுற்றதுடன் வழிபாட்டு ரீதியான பாதிப்பும் உண்டாயிற்று இவர்களின் ஆதிக்க அலைகள் சுதேச மரபுகளை அன்னிக் கொண்டு செல்லும் நிலை காணப்பட்டது. அரச ஆதரவு காரணமாக வறுமையில் வாழ்ந்த மக்கள் உயர் கல்வி தொழில் வாய்ப்பு பெறும் நோக்குடன் மதம் மாறும் நிலை காணப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஒல்லாந்தர் ஆட்சியில் சுதேசிய மக்களுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படா விடினும் சமயப் பாரம்பரியத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தினர். பெரும் பான்மையான மக்கள் கட்டாயமாக மதம்மாற்றப்பட்ட போதும் நடித்தார்களே ஒழிய உண்மைக் கிறிஸ்தவர் ஆகவில்லை என்றே பலராலும் குறிப்பிடப்படுகின்றது.

அடுத்து இடம் பெற்ற ஆங்கிலேயராட்சியில் சுதேசிய மதங்கள், மொழிகள் கலாசார பண்பாட்டு அடையாளங்கள் என்பன பாரியளவிலான நெருக்குதல்களுக்கு உள்ளாயின ஈழத்தின் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பினை மாற்றியதன் மூலம் ஆங்கிலேயர் தமது மதம், மொழி என்பவற்றை பரப்புவதற்கேதுவான சூழலை உருவாக்கினர் கிறிஸ்தவ மதப் பரப்புகைக்காக வெஸ்லியன் மிசன், அமெரிக்கன்மிசன், போன்ற சங்கங்களும் இலங்கைக்கும் வந்தன கிறிஸ்தவ மிரனரிமாரின் நிறுவனமயப்படுத்தப்பட்ட திட்டமிட்ட பிரசாரம் ஒரு புறமும் அதற்கு அனுசரணையாக இருந்த ஆட்சியாளர் போக்கு மற்றோர் புறமுமாக எம் சுதேசமரபை அல்லல் படுத்தின.

## கல்வி நிறுவனங்களின் தோற்றமும் மதச்செல்வாக்கும்

கட்டைவேலி கோவில் பிற்ப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய மெதடிஸ்ற் மிசனரிமாரால் இயல்பிலேயே ஆர்வமுடைய கரவெட்டி மக்கள் கல்விக்காக மதம் மாறினர் இது கிராமத்தின் உட்பகுதிகளிலும் வியாபிக்கும் நிலை காணப்பட்டது. மேலும் விபூதி அணிந்தவர்களால் கிறிஸ்தவப் பாடசாலைகளில் கற்க வேண்டி இருந்தமையும் ஓர் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியது. தமக்கு மரபு ரீதியான கல்வி நிறுவனம் இன்மையாலேயே மதமாற்றத்திற்கு உள்ளாக வேண்டியிருப்பதை உணர்ந்தமையால் சைவ சமயச் சூழலில் சிறுவர்க்கு கற்பிக்க வென சைவப்பாடசாலைகள் நிறுவும் பணியில் தென்மராட்சி மணியகாரரான வீரபாகு சிற்றம்பலம் ஈடுபட்டார். இவருக்கு இராச்சிய பரிபாலன அனுபவமும் சமுதாய செல்வாக்கும் இராணுவ சேவை ஆகிய பொறுப்புகளாலால் மேல்மட்ட அடி நிலை மட்ட மக்களின் தொடர்பும் காணப்பட்டமை சைவப்பாரம்பரியத்துடனான கல்வி உலகினை விரிவாக்கியத்துடனான கல்வி உலகினை விரிவாக்கியது இவருக்கு உடையாரின் பங்களிப்பும் கிடைத்தது.

இந்நிலையில் சைவத்தமிழ்க்கல்வி நிறுவனங்களாக யா/கரவெட்டி விக்கினேஸ்வரக்கல்லூரியல், மாணிக்கவாசகர் வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம், விநாயகர் வித்தியாலயம் எனும் நான்கு பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் வடமராட்சிப்பகுதியில் முக்கிய இடம் பெற்ற கிறிஸ்தவம் கரவெட்டிக்கிராமத்துள் பெரிதும் வரமுடியவில்லை. இதற்கு சிற்றம்பல முதலியாரும் அவர் குடும்பத்தினருமே காரணம் எனலாம். அவர்கள் ஆங்கிலேருக்கு இணையாக வடமராட்சியின் பிரதான சைவ மரபு ஆங்கிலப் பாடசாலையாக விக்கினேஸ்வராவை ஆதரித்தமையால் நவிண்டில், உடுப்பிட்டி, வதிரி, புலோலி, மந்திகை, துன்னாலை, குடத்தனை, வறணி, கரணவாய் முதலிய கிராமங்களிலிருந்து வந்து ஏறத்தாழ 1950 வரை கற்றனர். கரவெட்டியின் சைவப்பாடசாலையான இக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட குழுமங்களைச் சேர்ந்த மாணவர்கள் 1946லேயே சேர்க்கப்பட்டமை சைவமரபுக்கு மேலும் வலுச் சேர்த்தது இது சைவ சமய தாராண்மைக் கொள்கைக்கும் சான்றாயிற்று.

சைவக்கல்வி நிறுவன உருவாக்கத்துடன் சைவப் பாரம்பரியம் மீண்டும் தனக்குரிய இடத்தைப் பெற்றது பிறமதத் தாக்கங்களிலிருந்து சைவப்பாரம்பரியம், தனித்துவத், பேணப்படும் செயற்பாடுகள் இடம் பெற்றதே ஒழிய கண்மூடித்தனமாக போக்கி இடம் பெறவில்லை மேலும் சைவக்கல்வி, ஆங்கிலக்கல்வி மூலமான மேலைத்தேய அறிவியல் கருத்துக்களையும் உள்வாங்கி புதுமையோடு நடைபயின்றது.

கரவெட்டியின் பண்பாட்டுச் சின்னமென விளங்கிய இக்கல்லூரிகளுக்கு சைவசமய நம்பிக்கையை உறுதிப்படுத்தி இளந்தலை முறையினரை சைவத்துக்கு கொண்டு வருவது முதன்மைச் செயற்பாடாயிற்று மேலும் பாடசாலைகளில் இடம் பெற்ற பிரசங்கங்கள், சொற் பொழிவுகள், சைவ சமய ஈடுபாடு, அறிவு வழிப்புணர்வு என்பவற்றுக்கு வழிவகுத்தன. இதற்கு இக்கல்லூரிகளில் இடம் பெற்ற திருமுருக கிருபானந்த வாரியார் அ.ச.ஞானசம்பந்தன் வித்துவான் வேந்தனார் ஆகியோரின் சொற்பொழிவுகள் சான்று பகர்கின்றது.

இன்றும் கரவெட்டியில் தமிழ்க் கல்வியும் சைவ சமய மரபும் விருத்தி பெறக்கருவிகளாக கல்லூரி கோவில் ஆகிய பண்பாட்டு நிறுவனங்கள் திகழ்கின்றன. இவை காலத்தின் புதிய தேவைக்கேற்ப நவீன துவத்தை உள்வாங்கிய போதும் ஒன்றிணைந்து சைவப் பண்பாட்டின் நிலைக்களனாக நிகழ்வது இக்கிராமத்தின் தனித்துவமென்றே கூறலாம் இதனால் இப்பிரதேசத்தில் வாழும் கிறிஸ்தவ மதத்தினரிடமும் இந்து கலாசார பாரம்பரியத்தின் ஆசார அனுஷ்டானங்கள் மரபுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இம்மண்ணின் தோன்றிய மரபு வழி இலக்கியங்களுக்கும் நவீன இலக்கியங்களுக்கும் இந்துப் பாரம்பரியமே ஊற்றாக நிகழ்வதனை கரவை வேலன் கோவை முதல் கோசலை வரையான இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. என்றே கூறலாம்.

ஆக்கம்
திருமதி.நாளினி கணபதிப்பிள்ளை
ஆசிரியர்

# சத்குரு ஸ்ரீ ஷீரடி சாயி பாபாவின் வாழ்வும் சகலருக்கும் அது கற்றுத் தரும் பாடமும்

ஷீரடி என்பது வட இந்தியாவில் மகாராஷ்டி மாநிலத்தில் அகமத்நகர் என்ற தாலுகாவில் அமைந்துள்ள மிகச் சிறிய கிராமம் இது மும்பாய் பூனே ஆகியு பெருநகர்களுக்கு கிழக்காக சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

### அவதாரம்

இங்கு 1858 முதல் 1418 வரை ஒரு பாழடைந்த மசூதியை வாழ்விடமாகக் கொண்டு கடவுள் அவதாரமாக ஏழைகள் மேல் கசிவு கொண்டு ஆறுதல் தந்தவரே "ஷீர்டி [illegible] பாபா" பிரம்மம் தந்தை என்றும் மாயை தாய் என்றும் தாமே கூறியுள்ளார்.

### உடை

முகம்மதியாரைப் போல உடுத்திருந்தார் ஆயினும் வாழ்ந்த மசூதிக்கு "துவாரகாமாயி" (துவாரகைத் தாய்) என பெயரிட்டார் கண்ணபிரான் வாழ்ந்த இடம் துவாரகை நாராயணுக்கு பிரதியான துளசிச் செடியை துவாரகா மாயியில் வளர்த்தார்.

### குரு

தம் குரு உடன் பன்னிரண்டு ஆண்டு வேப்பிலையை மட்டும் உண்டு வாழ்ந்து குரு தொண்டே தவமாகக் கொண்டார் குருவை வழிபட்டால் போதும் என்று வழிகாட்டி உள்ளார்.

### குரு மேன்மை

குருவைத் தவிர வேறு வழி எது? என்பார் கபீர் தாசர் கிருபானந்தாவாரியார் சுவாமிகளுக்கு குரு முருகன் தேவர்களுக்கு குரு வியாழ பகவான் கண்ணபிரானும் குசேலரும் சாந்தீபமுனிவர் என்ற குருவிடம் தான் கல்வி பயின்றனர் இராமநுஜருக்கு குரு யாதவப் பிரகாசர். வசிட்டர் ஸ்ரீ ராமபிரானுக்கு குருவாய் அமைந்தார் அபிராமி பட்டருக்கு குரு, தெய்வம் யாவும் திருக்கடவூர் அபிராமி தான் இராமகிருஷ்ணருக்கு தட்சணேஸ்வர அன்னையே வழிகாட்டியாக அமைந்து கோதாபுரி பைரவி பிராம்மணி ஆகியோரை சில மார்க்கங்களை கற்பிக்க அனுப்பினார் பன்னிரண்டு சீடர்கள் யேசுவுக்கே வாய்ந்தார்கள் சீக்கிய குரு கோவிந்த சிங்கம்தமக்காக உயிரையும் அர்ப்பணிக்கக் கூடியவர்கள் யார் என்று பார்த்து பத்து சீடரை தெரிவு செய்தார். ஒரு இஷ்ட தெய்வத்தையோ கடவுள் அவதாரங்களையோ முழுமையாக நம்பி தம்மை அர்ப்பணிந்து வாழலாம் இது மேன்மை தரும். குருவே பிரம்மா அவரே விஷ்ணு அவரே மகேஸ்வரன்.

### நாமஸ்மரணை

ஷீர்டி சாயி, இறை நாமத்தையே எப்போழுதும் உச்சரித்தவர் கடவுளை நாடும் பாதைகளில் பக்தி மார்க்கமே சுலபமானது எப்பொழுதும் எங்கும் அவர் நாமம் உச்சரிப்பது மனதுக்கு சாந்தி தரும் "நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்பது தேவாரத்தில் ஒரு வரி அன்னை மீரா பிரஹலாதன் இராமகிருஷ்ணர் சைதன்ய மகாபிரபு, தியாகராய பிரம்மம் - இறைநாம உபாசகர்கள் தியாகராயசுவாமிகள் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் இராமநாமபம் செய்வார் ஆஞ்ச நேயரின் உரோமக் கால்களில் கூட இராம நாமம் இருக்கு மரும் ஷீர்டி சாயி அல்லா மாலிக் (இறைவன் பெரியவன்) அல்லா பலா கரேகா இறைவன் அருள் செய்வான் என்று கூறிக்கொண்டே இருப்பார்.

சர்வம் விஷ்ணு பயம் ஜகத் என்பர் இறைவன் எங்கும் உள்ளான் திருமதி தார்க்காரு என்ற பெண், நாய் ஒன்றுக்கு ரொட்டி அளித்தான் மசூதிக்கு சென்ற பொழுது பாபா "அம்மா நீ இன்று எனக்கு உணவு அளித்தாய் என் புலன்கள் அமைதி அடைந்தன" என்றார் பாரதியார் "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்பார் எல்லா உயிர்களும் இறைவன் வடிவமே என்று நேசிப்பது இறைவனுக்கு பிரியமானது இதை ஷீர்டி சாயி வாழ்ந்து காட்டினார். யேசுவின் "நீ உன்னை நேசிப்பது போல அயலவனையும் நேசி" என்று கூறி உள்ளார்.

### உபநிடதம்

கணபதி உபநிடதங்களிலே "ஓம் கணபதியே வணக்கம் நீயே காணும் உண்மை நீயே படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனுமாய் இருக்கின்றாய்".

## அகம்பாவம் நீக்குதல்

ஷீர்டி சாயி அகம்பாவம் சற்றும் இன்றி நான் உங்கள் மலத்தில் உள்ள புழு என்று கூட கூறியுள்ளார். நிம்மதியைக் கெடுப்பது எமது அகம்பாவம் தான் செருக்கு, ஆணவம், திமிர் என்றெல்லாம் கூறுவோம் (ஹாஜி) சிதிக்/பால்கி என்பவரை ஒன்பது ஆண்டுகள் ஷீர்டி சாயி புறக்கணித்தார் காரணம் அவரிடம் கல்விச் செருக்கு இருந்தது. செல்வச் செருக்கும் விரும்பத்தக்க நல்ல புகழுக்கு ஆசைப்பட்டால் கவலையும்
கூடவே வரும் **"செத்தாரைப் போல திரி"** என்று கூறுவார் பட்டினத்தார் இரணிய கசிபு, மகிடாசுரன், சூரன் இராவணன் போன்றோர் செருக்கு மிருந்தவர்கள் அகந்தை தெய்வத்தால் நீக்கப் பெற்றவர்கள் பள்ளம் நாடி வெள்ளப் போகும் 15000 அடி கீழ் இறங்கி கங்கை அமைதி அடைகின்றது. துலா தாழ்ந்து போய் தண்ணீரை மொட்டு மேலே கொண்டு வருகிறது. மனிதன் ஆவியில் எளிமை உடையவனாக வாழ பழகவேண்டும். ஷீர்டி சாயியிடம் ஒரு போலி மதகுரு **"ஜவாஹர் அலி"** தன்னோடு வந்து இஸ்லாமிய கிரந்தங்களை கற்குமாறு கூறினான். ஷீர்டி சாயி ஆறு மாதம் அவனுடன் சென்று தங்கினார். அவர் எமக்கு கற்றுத் தருவது தாழ்ச்சி நான் எனது என்றும் செருக்கு அறுத்து வாழவேண்டும். நானா சந்தோர்க்கர் என்பாரின் கல்விச் செருக்கை ஷீர்டி சாயி அகற்றினார். அகந்தைக்கிழங்கை வேரோடு அறுக்க வேண்டும். யேசு சீடர்களின் பாதங்களை தாமே கழுவி சுத்தப்படுத்தியதை நிறைவு கூருவோமாக.

## குறை கூறுவதைத் தவிர்த்தல்

பிறரிடம் குறை காண்பதும் எம்மிடம் உள்ள தவறு ஒரு விரலை குற்றம் சுமத்தி நீட்டும் போது மூன்று விரல்கள் எம்மைச் சூட்டுகின்றன. மகான்கள் பிறரிடம் குறை காண்பதை விரும்புவதில்லை எம்மை நாம் அறிந்து கொள்வதே வாழ் நாள் முயற்சி ஆக இருக்க வேண்டும் இதையே உன்னையே நீ அறிவாய் என்பார்கள் இதை ஆத்ம விசாரம் என்றும் கூறுவர் நீ யார் பற்றியும் குறை கூறும் போது நான் வேதனை அடைகிறேன் என்று ஷீர்டி பாபா கூறி உள்ளார். யேசுவை குறை கூறிய பக்தர் "டிக்ஸிற்" மசூதிக்கு வந்த போது பாபா அவரை தமது காலை வருட அனுமதிக்க வில்லை உலகில் தவறு செய்யாதவர்கள் மிக மிக அருமை காந்திஜி கூட தாம் இமாலய தவறுகள் செய்யுள்ளதாக கூறி உள்ளார். பிறரிடம் குறை காணாமல் நம் நிறைகளை இனங்கண்டு வாழ்வது நன்மை அளிக்கும் பிறர் கண்ணிற் தூசைக் காண்பதை விட எம் கண்களில் பிழையை கண்டு அகற்றுவது மேல் அல்லவா?

## முற் பிறவிகள்

ஷீர்டி சாயி முற்பிறவிகள் நம்பிக்கை கொண்டவர் இரு ஆடுகளை மந்தைக் கூட்டத்தில் இனங்கண்டு விலைக்கு வாங்கி உணவு வைத்தவர் அவை முற்பிறவியில், தமக்குள் சண்டை இட்டு இறந்த இரு சகோதரர்கள் என்றார். சந்தோர்க்கள் உடன் 4 பிறவித் தொடர்பு ஷாமா என்பவருடன் 72 பிறவித் தொடர்பு இப்படி கூறி உள்ளார். இந்து மதம் இதை நம்புகிறது புத்தருக்கு தியானத்தின் 500 பிறவிகள் தென்பட்டன இஸ்லாமியர், கிறிஸ்தவர், முற்பிறவி, பிற்பிறவி இவற்றை ஏற்றுக்கொள்வதில்லை இது பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே என்று பட்டினத்தார் புலம்புவார். ஒருவன் பல்லக்கில் இருக்கின்றான் இன்னொருவன் பல்லக்கு சுமர்க்கிறான் இவை அவனவன் வினைப்பயன் என்பார். வள்ளுவர் கற்பகத்தைச் சார்ந்தாருக்கு கிடைப்பதும் ஊழ்வினைதான் **"வெறும் பானை பொங்களது"** அது போல முற்பிறவிப் புண்ணியந்தான் இப்பிறவியில் வரும் ஆசேவே தருமம் செய்யவேண்டும் என்று நீதி நூல் ஒன்று கூறுகிறது. ஷீர்டி சாயிக்கு காடு மேடு எல்லாம் நுழைந்து உணவு படைத்தவர் பாய் பாய் என்ற அம்மையார் ஷீர்டி சாயி அவரை முற்பிறவியில் சகோதரி என்றார். நாங்களும் முற்பிறவிகளை நம்புவோம் இனி வரும் பிறவிகளுக்கு நன்மைகள் கிடைக்க நல்லன செய்வோம் இராமண மயூரிஷிஅருளாகலம் நோக்கி செல்ல முற்பிறவி வழி வகுத்தது. அருணாசலம் என்றார் என்ன என்றே தெரியாது இருந்தவர் அருணாசலேஸ்வரரை நாடிச்சென்று யாவும் விட்டெறிந்து பாதாளசிங்க குகையில் பல்லாண்டுகள் 11 ஆண்டுகள் கடுந் தவம் செய்தார் பிறவியிலேயே இருதயத்தில் துவாரம், சிறு நீரக அமைப்பில் வித்தியாசம் இவற்றுடன் பிறப்பவர்களுக்கு என்ன விளக்கம் கூறலாம்? மன வளர்ச்சி குற்றியவர்களாக சில குழந்தைகள் பிறக்கின்றனவே அது ஏன் யோசிப்போமாக.

விதி வலியது

விதியின் வலிமை குரு அருளால் குறைய வாய்ப்பு உண்டு ஆயினும் விதி வலியது ஷீர்டி சாயி, ஒரு தடவை நீகோஜ் என்ற ஊரைச் சேர்ந்த படேல் என்ற பெண் பிளேக் நோயினால் இறப்பாள் என்று உணர்ந்தார். இரவு முழுவதும் அல்லாஹ் இடம் அப் பெண்ணுக்காக வேண்டிக் கொண்டு இருந்தார். ஆனால் ஒருவர் வந்து சத்தமிட்டு அந்த நாம ஸ்மரணையை குழப்பிவிட்டார். அப் பெண் இறந்து விட்டாள். ஷீர்டி சாயி வருந்தினார். இராமரும் நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை என்று விதியினால் ஆறும் வற்றி விடுகிறது என்பார்.

ஷீர்டி சாயி வாழ்வும் பாடமும்

எப்பொழுதும் கடவுள் நாமம் உச்சரிப்பது மேன்மையானது குருவிடம் பூரண சரணாகதி அடைய வேண்டும் இராமலிங்கம் சுவாமி போல "வாடிய பயிரைக் கண்ட போது எல்லாம் வாடும்" மனம் வரை முயற்சிக்கு வேண்டும். ஏழைகளிடம் கசிவு ஏற்பட வேண்டும். வன்சொல் தவிர்த்து இன்சொல் பேசவேண்டும் "அது இனிது ஈனும்" பிறரிடம் குறை காண்பதை தவிர்க்க முயல வேண்டும். எம்முடன் நாம் போராட வேண்டும். சுயராஜ்ஜியம் உனக்குள்ளே இருக்கிறது. என்பார் யோகச் சுவாமிகள் சாகரடீஸ் போல நாம் யார் எனக் காண எம்மை இடை போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். மன நிலையை இறைவன் தர வேண்டவேண்டும். விவிலிய நூலில் யோபுவின் கதை உண்டு. வாழ்விலும் தாழ்விலும் அவர் இறைவனையே போற்றினார். ஆண்டவன் அவரைக் கைவிட வில்லை நகம் எல்லாம் தேய கையால் நாண்மலர் தொழுது தூவி, முகம் எல்லாம் கண்ணீர் மல்க முன் பணிந்து ஏத்தும் தொண்டர் அகம் அலாற் கோயில் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே என்று.

மன நிறைவு திருப்தி அடைதல்

இறைவன் அருளியது போதும் என்று எண்ணி சந்தோசிப்பது நிம்மதி தரும் ஷீர்டி சாயி ஏழ்மையாக வாழ்ந்தவர் சாக்கில் படுத்தவர், வெறுங்காலுடனே பெரும்பாலும் நடந்து திரிந்தவர், ஆசைகள் வேரறுத்தவர் பேராசை என்றும் பணியிற் பிணிபட்டு ஓரா வினையேன் உழலத் தருமோ என்று அருணகிரிநாதர் முருகனிடம் முறையிடுவார். ஷீர்டி சாயி உடலை உகுத்த போது அவரிடம் ஒன்பது வெள்ளிக்காசுகளே இருந்தன. அவற்றையும் லஷ்மிபாய் என்ற அன்னையிடம் கொடுத்தர். நரிகளுக்காவது வளைகளுண்டு கடவுள் குமாரனுக்கு அதுவும் இல்லை என்று யேசு கூறி உள்ளார். மதீனாவிலே "குடத்து நீரிலே" முகம் பார்த்துக் கொண்டவர் நபி பெருமானார் அவ்வளவு எழ்மை நிறைவே அவர்கள் செல்வமாக அமைந்தது. "நாரையின் நீண்ட கால்கள் எனக்கு இல்லையே" என்று வாத்து கவலைப்பட வேண்டியதில்லை என்னாலும் தண்ணீரில் மிதக்க முடியும் என்று வாத்து மகிழ்வு அடையலாம் என்பர்

"வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டு இல்லை
யாண்டும் அஃது ஒப்பது இல்"

என்று வள்ளுவர் கூறுவதை நோக்கலாம் ஷீர்டிசாயி பிச்சை ஏற்றே உண்டார் ஏற்றத்தையும் பகிர்ந்து அளித்து மகிழ்தார் இது அவர் கற்றுத் தந்த ஒரு பாடம்.

சரணாகதி

இறைவன் அல்லது குருவிடம் நாம் சரணாகதி அடைய வேண்டும். நன்றே வரினும் தீதே விளைகினும் நான் அறிவது. ஒன்றேயுமில்லை - உனக்கே பழம், எனக்கு உள்ளது எல்லாம் அன்றே உனக்கு என்று அளித்து விட்டேன் அறியாத குணக்குன்றே, அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே என்று அபிராமி பட்டர் பாடுவார் "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

இன்பம் துன்பம் எல்லாம் இறைவன் தருபவை இவை இரண்டையும் மகிழ்ச்சியுடனும் கசிப்புத் தன்மை உடனும் ஏற்றுக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். கண்ணன் ஊதும் புல்லாங்குழலுக்கு அதற்கு என்று ஓர் இசை இல்லை அதனால் அவன் விரும்பிய கீதம் புல்லாங்குழலில் இருந்து வருகிறது. நாமும் எம்மை சூன்யமாகவும் தூசாகவும் எண்ண வேண்டும். இதனால் சாந்தி கிடைக்கும்.

ஏற்படும் எதுவும் எங்களுக்கு இது கடவுள் சித்தம் என்று வாய் கூற முற்படும். உணர்ந்து இறைவனிடம் அல்லது குருவிடம் மாறாத பக்தி செலுத்தி வாழவேண்டும். விண்மாரி என இரு கண்மாரி மெய்யவேண்டும். செய்த தவறுகளை இறைவன் பாதத்தில் வைத்து மன்னித்து இரட்சிக்க வேண்ட வேண்டும். நிம்மதியும் சாந்தியும் எமக்கு கிடைக்கும் நான் செத்தால் நீ நல்லாய் இருப்பாய் என்று குரு சீடனும் கூறிய உபதேசத்தை நோக்க வேண்டும். தாழ்ச்சியை வளர்க்க வேண்டும். பூமா தேவி போல பொறுமையை வளர்த்து எல்லா உயிர்களிடமும் இயன்ற அளவு அன்பும் பாசமும் காட்டி வாழ வேண்டும். எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே என்ற மனநிலை வளர முயற்சிக்க வேண்டும். முயற்சியின் பயனை இறைவனிடம் விட்டு விட வேண்டும்.

இவை ஷீர்டி சாயியின் வாழ்வு காட்டும் நெறி. அந்த அவதார புருஷர் யாருக்கும் போதனை என்று செய்தவர் அல்லர். ரோஜா போல மசூதியில் இருந்து கொண்டே மணம் பரப்பிய தத்தாத்ரேயர் அவதாரம் அவர் மாணவர்களுக்கு அவர் வாழ்வே மௌன உபதேசம் ஆகும்.



# அபரக்கிரியை

## அஸ்தி சஞ்சயனம்

அஸ்தி சஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலில் இருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்து புண்ணிய நீரில் சேர்ப்பதாகும். அஸ்தி, எழும்பு, சஞ்சனம் கரைத்தல் இ்.து கால், தொம்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எழும்புகளைச் சாம்பலுடன் எடுத்தும் பால் உள்ள மாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலும் அஸ்தியையும் புண்ணிய தீர்த்தத்தில் இடுபதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் பொருள் சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

## நகன தானம்

ஒரு நீர்க் கரையை அடைந்து ஒரு குடத்தில் அரிசியை நிரப்பி அக்குடத்தினை சுற்றி வஸ்திரம் கட்டி வெண்கலப்பாத்திரத்தில் நெய் ஊற்றி பரமசிவனை நினைத்தவாறு இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டு அந்தணருக்கு தானமாக கொடுக்கப்படுவதை நக்னதானம் எனச் சொல்ப்படுகின்றது.

## அந்தியேட்டி

அந்திய என்பது இறிதியாகும். இஷ்டி என்பது யாகம் எனப்படும் சமய சாரங்களில் உண்டான குறை குற்றங்கள் நீங்கும் பொருட்டு உடலை விட்டு நீக்கிய உயிர் சபிண்டீகரணத்தின் பின்பு மோட்சம் பிராப்தி அடைய வேண்டும். என்று இறுதியாக செய்யப்படும் யாகம் அந்தியேட்டி எனப்படும்.

## அந்தியேட்டியின் வகைகள் 3வகைப்படும்

1) தீட்சை பெறாத சிவனடியார்களும் சமய தீட்சை பெற்றவர்களுக்குமான சமய அந்தியேட்டி ஓர் வகையாகும்.
2) சமய தீட்சையுடன் விசேட அந்தியேட்டி பெற்றவர்களுக்கான விசேட அந்தியேட்டியாகும்.
3) சமய, தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, முதலிய தீட்சைகள் பெற்றவர்களுக்கான அந்தியேட்டியாகும்.

## அந்தியேட்டிக்குரிய கிரியைகள்

விக்கினேஸ்வர பூஜை
பஞ்சகவ்விய பூஜை
சிவகும்ப பூஜை
வர்த்தன கும்ப பூஜை
சிகாஸ் தானத்தில் விருத்தி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனும் பஞ்ச பூத தத்துவங்களுக்கான பூஜை திரி ஆலயம் மூலம் தசாயுதங்களின் பூஜை, அக்கினி வழிபாடு எனும் பல கிரியைகள் நடைபெறும்.

## பாஷான ஸ்தாபனம்:

ஒரு கல்லை வைத்து இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்கு செய்யும் பூஜை இதனால் பிரிந்த ஆன்மாவானது சிவபகுதியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும் மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும்.

## ஏகோத்திர விருத்தி

ஏகோத்திர விருத்தி என்பது ஒவ்வொன்றாக அதிகரிப்பது எனப்பொருள்படும். அதாவது வீட்டில் இரு சார்மாக விதிப்பது கல்லை நாட்டி பூசிப்பதாயின் முதல் நாளில் மூன்று தர்பணமும் இரண்டாம் நாள் முதல் தர்ப்பணத்தின் எண்ணிக்கையை ஒவ்வொன்றாகக் கூட்டியும் தர்ப்பணம் செயதிலே ஏகோத்திர விருத்தி எனப்படும்.

## திலோதகம், வாசோதகம் என்பதன் விளக்கம்.

எள்ளுடன் நிரினால் செய்யப்படும் தர்ப்பணம் திலோதகம் என்னும் சீலையை நீரில் நனைத்து பிழிந்து செய்யப்படும் தர்ப்பணம் வாசோதகம் என்றும் சொல்லப்படும்.

பாஷாணமாகிய கல்லு சேர்க்கப்படும் இடம்

ஆன்மாவையும் பூஜித்த இலையையும் அதற்குப் படைத்த பலி பொருட்களையும் நீர் நிலைகளில் சிறப்பாக புனித புண்ணிய தீர்த்தமான சமுத்திரத்தில் சேர்க்கப்படுகின்றது. குறிப்பாக கீரிமலை, வில்லூன்றி முகத்துவாரம் போன்ற தூய்மையான கடற் பகுதிகளில் விடப்படுகின்றது.

உருத்திர பலி

இறந்தவருவரையும் ஆன்மா உருத்திர பதவி அடைய வேண்டும். என்பதற்காக சிவனை வேண்டி நடாத்தப்படுகின்ற பூஜை, பலியிடல் என்பன உருத்திர பலி எனப்படும்.

பிரபூத பலி

உடல் அக்கினியால் தடுக்கப்பட்டதால் ஆக்கம் தேகமாகிய பிரேதம் அதன் வெப்பத்தினை தாங்க முடியாது வருகின்றது. அதனால் அதற்கு அதிகமான பசி, தாகம் எடுக்கின்றது. அவற்றை நிவர்த்தி செய்யவும் சந்தோஷப்படுத்தவும். செய்யப்படும் நிகழ்வு பிரதி பூதமலி எனப்படும் இதுவே சுட்டும் எனச் சொல்லப்படுகின்றது.

ஏகோதிட்டம்

ஏக என்றால் ஒன்று திட்டம் நினைத்தல் என்பதாகும். இறந்தவருடைய ஆன்மாவின் பிரேத்துவ நிலை நீங்க நினைத்து ஒரு அந்தணரை வரவழைத்து வழங்கப்படுகின்ற தான நிகழ்வு ஏகோதிட்டமாகும். இது மகா ஏகோ திட்டம் எனவும் திறம்மிக்கப்படுகின்றது. இறப்புடன் செய்யப்பட்ட வேண்டிய ஏகோ திட்டத்தில் 24 வகைத்தானங்கள் அவரவர் சக்திக் கேற்ப அந்தணருக்கு ஒரு வருடம் முடியும் வரை அவரை பிதிர் கொள்ளாமல் செய்தல் வேண்டும்.

தானமாகக் கொடுக்கப்படுகின்ற பொருட்கள்

பத்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், மிதியடி, தண்டம், விபூதி, தொம்பி, குடை, சால்வை, ஆடை, பொன், மோதிரம், இரத்தினம், நெய், நல்லெண்ணை, பசு, பூமி, உணவுப்பொருட்கள் அலங்காரப் பொருட்கள் என்பர்.

சபீண்டி கரணம்

இறந்தவரை பிதிர் உயிர்களோடு சேர்ப்பதற்கான பிண்டமிட்டுச் செய்யப்படும் கிரியை சபீண்டிகரணம் எனப்படும். சபீண்டிகரணததால் ஆன்மா சுத்தி பெற்று சிவலோகம் சேரும். பிண்டத்திற்குரிய பொருட்கள் அரிசி, எள்ளு, உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை என்பனவே ஆகும். மிதிர்களுக்குச் செய்யும் இக்கிரியை பிதிர் தேவர்கள் பெற்று இறந்தவர்களுக்கும் அமரது தலை முறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிர்களைக் படைத்துள்ளார்.

மாசியங்கள் - 4வகைப்படும்

1) ஊனமாசியம் - இறந்த நாள் முதல் இருபத்தேழாம் நாளின் மேல் மூன்று நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.
2) திரைபட்சமாகவும் - நாற்பதாம் நாள் முதல் 45 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.
3) ஊனஷான் மாசியம் - 170 நாளின் மேல் 10 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.
4) ஊனாப்திக மாசியம் - 345 நாள் மேல் 15 நாட்கள் செய்யப்பட வேண்டும்.

இறந்தவர்கள் மேற் கூறப்பட்ட கிரியைகளை செய்வதன் மூலம் அவர்களது ஆத்மா பூரண சாந்தி அடைகிறது. எமது அன்புடையவர்களின் ஆத்மா சாந்தி அடைய நாம் இவ் அபரக்கிரியைகளை மேற்கொள்வது அவசியம். இவ்வாறு கிரியைகள் செய்து பிதிர்களை சாந்தி அடையச் செய்வோமாக.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் - தான்
என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்மல் தலை"

ச.அகல்யா
13B
(2009) A/L

# கிராமியத் தெய்வங்களும் வழிபாடுகளும்

சைவ மக்களினதும் வழிபாடுகளை இரு வகைப்படுத்தலாம். அவையாவன ஆகமஞ் சார் வழிபாடு ஆகமஞ் சாராத வழிபாடு ஆகமஞ் சார்ந்த வழிபாடுகள் ஆகமத்திலே சொல்லப்பட்ட விதிகளுக்கு ஏற்ப இடம் பெறும் ஆகமஞ் சாரா வழிபாடு என்பது பக்தி நம்பிக்கை பயம் போன்றவற்றின் மூலம் கட்டி யெழுப்பப்படுகின்றது. அந்த வகையிலே கிராமிய தெய்வ வழிபாடு இவ்வாறே அமைகின்றது. இத் தெய்வங்கள் குல தெய்வங்களாகவும் காவற் தெய்வங்களாகவே வழிபட்டு வருகின்றன. ஒரு கிராமத்திலே மரத்தடி, குளக்கரை, சந்திகள் போன்ற இடங்களில் அமைவு பெற்றுள்ளன. ஆகம வழிபாட்டினிலேயிருந்த மாறுபட்ட இலகுவான வழிபாடாக இது அமைகின்றது. இதனால் தான் கிராமியத்தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் பல பெருகின. இத் தெய்வங்களஇன்றும் நிலைத்திருப்பது அவ்வவ் பிரேதேசங்களிலுள்ள மக்களின் நம்பிக்கைகளினாலே தான் என்பது சிறப்பானது.

கிராமியத் தெய்வங்களாக வைரவர், காளி, வீரபத்திரன், பெரியதம்பிரான், முனியப்பர், காத்தவராயன், ஐயனார், அண்ணமலர், நாச்சியார், கண்ணகியம்மன், மாரியம்மன், நாகதம்பிரான், சீதையம்மன் போன்ற பல தெய்வங்கள் காணப்படுகின்றன. வைரவர், காளி போன்ற தெய்வங்கள் காவற்தெய்வங்களாகவும் கண்ணகி, சீதை, நாச்சிமார், பத்தினி தெய்வங்களாகவும் முனியப்பர், வீரபத்திரர் போன்ற தெய்வங்கள் *வீர வணக்கத்திற்குரிய தெய்வங்களாகவும் அமைகின்றன*. மாரியம்மன் நோய் தீர்க்கும் தெய்வமாக அமைகின்றாள். இத் தெய்வங்கள் யாவும் என்றுமே எமக்கு அருள் பலிக்கும் வண்ணமாக ஆலயக் கதவுகள் என்றுமே திறந்திருக்கும் இத் தெய்வங்களை பலவேறு வழிபட்டு வருகின்றனர். வைரவர், காளி, அண்ணமார் போன்ற தெய்வங்கள் தம்மை வணங்காதவர்களுக்கு குறைகளை ஏற்படுத்துவார் என்பது நம்பிக்கையாகும். இதனால் பலியிடல் ஆலயம் செய்து கொடுத்தல் கல்விக்கு பொருட்களை வழங்கல் போன்ற நிபர்த்திகளைச் செய்தார்கள்.

கிராமியத் தெய்வங்களில் வைரவர் சிறப்பிற்குரிய ஒரு தெய்வமாவர். இவரை மக்கள் திரி சூலத்தினாலோ அல்லது சிற்பத்திலை வடிவமைத்து வழிபடுவார்கள். வைரவர் திருட்டு போன்ற குற்றச் செயல்களைச் செய்பவரைத்தண்டிப்பார் என்பது நம்பிக்கை இவரை சில இடங்களில் மரத்தின் கீழ் அல்லது சிறிய கட்டிடம் கட்டி வைத்து வழிபடுவார்கள் வைரவர் சிவந்த கண்களையும் கொடூர தோற்றத்தையும் கையிலே திரி சூழத்தையும் தாங்கிய வண்ணம் நாயினை வாகனமாகக் கொண்டு அமைவு பெற்றிருப்பார் "சூலவைரவா சுற்றிப்பிடியடா" என்ற சொற் பிரயோகம் மக்களிடம் காணப்பட்டு வருகின்றது. இவரை மக்கள் பொங்கி மரிடபரவி வடை, மாலை சாத்தி வழிபடுவார்கள். இவர் மக்களுக்கு வரக்கூடிய இன்னல்களை யெல்லாம் தவிர்த்து அவர்களைக் காப்பாற்றுவார்கள் என்பது அசையாத நம்பிக்கையாகும்.

மாரியம்மன் என்ற தெய்வம் பற்றி நோக்குகையில் தாய்த் தெய்வமாக விளங்குகிறாள். இவள் அம்மை, சின்னமுத்து, கொப்பளிப்பான் போன்ற நோய்களைத் தீர்க்கின்ற தெய்வமாக போற்றப்பட்டு வருகிறாள். இதனால் மக்கள் இவளை பயபக்தியுடன் வழிபடப்பட்டு வருகிறாள். இத்தகைய நோய் ஏற்படுகின்ற போது பொங்கல் செய்து படைத்தல், கூத்தாடுதல், தீக்குளித்தல் போன்ற நேர்த்தி கடன்களை செய்கின்றனர். இவள் கொடிய தோற்றத்தோடு சூலாயுதம் தாங்கி நிற்பாள். கயவர்களை தண்டித்து நல்லவர்களை வாழ்விப்பாள் என்பது உறுதியான நம்பிக்கையாகும்.

வீரபத்திரனின் மூர்த்தங்களில் ஒன்றான பூதவராயர் கோயில்களும் ஈழத்தில் பலபாகங்களில் உள்ளன. வீரபத்திர சிவனது உக்கிர தாண்டவ வடிவம் நீலத்திருமேனி மண்டையோட்டு மாலை இரத்தம் ஏந்திய சட்டி புலித்தோலுடன் கூடிய ஆடை கொடிய வீரத்தோற்ற என்ற அமைவு பெற்றிருப்பார். கண்ணகியம்மன் பொங்கல் பெரும்பாலும் வைகாசி மாதத்தில் இடம் பெறுகின்றது. பொங்கலுக்கு சில தினங்களுக்கு முன்பாக விளக்கு வைப்பு இடம் பெற்று கதவு பூட்டப்படும் கண் நோயுற்றவர்கள் அது மாறுவதற்கு நேர்த்திக்கடன் வைத்து கண்மடல் செய்து கொடுப்பர்.

நாச்சிமார் வழிபாடு பற்ற நோக்குகையில் வன்னி நாட்டை ஆண்ட சப்த கன்னியர்கள்தான் இந்த நாச்சிமார்கள் இவர்கள் ஒல்லாந்தருடன் போர் செய்து தோல்வியுற்றனர். இதனால் மாற்றான் கை படக்கூடாது என்பதற்காக நஞ்சு உண்டு இறந்து போனார்கள் இதனால் தான் மக்கள் இவர்களை வீரத்தெய்வமாக வழிபடுகின்றனர். பெரிய தம்பிரான் வழிபாடு பல இடங்களிலும் உள்ளன. சூழும் வைத்து வழிபடும் இங்கிலியம் என்னும் தெய்வ வழிபாடு நடைபெறுகின்றது. ஐயானாரை சந்தனக் காப்பிட்டு பயனை செய்து வழிபடுவார்கள்.நாக தம்பிரான் வழிபாடும் இடம் பெறும் நாகம் இருக்கும் இடத்தைச் சுற்றி வெள்ளை கட்டி பால் பழம் வைத்து பயபக்தியுடன் வழிபடுவார்கள்.

இவ்வாறாக கிராமியத் தெய்வங்கள் பயபக்தியுடனும் நம்பிக்கையோடும் இன்றும் போற்றப்பட்டு வழிபட்டு வருகின்றது. ஒவ்வொரு பிரதேசத்துக்கு ஒவ்வொரு தெய்வம் சிறப்பிற்குரிய தெய்வமாக அமைகின்றது. அந்த தெய்வங்கள் இவற்றை முன்னர் நூற்றாண்டு காலமாக வழிபட்டு வருகிறது. எனினும் இவ்வாலயங்கள் பல்கிப்பெருகி இன்றும் நிலைத்துள்ளன. இலகுவான வழிபாட்டு முறையாகவும் எல்லோரும் கடைப்பிடிக்கக்கூடிய வழிபாடாகவும் இக்கிராமியத் தெய்வவழிபாடு அமைகின்றது. இவை என்றென்றும் எமக்கு அருள் பாலித் ஆசிர்வதித்த வண்ணம் வீற்றிருக்கின்றன. அவற்றை என்றும் ஆதரித்து நாமும் நல்லருள் பெறுவோம்.

ஆக்கம்
சி.வினோதன்
A/L (2010)



# இந்து மதத்தில் நடனக்கலை

கலைகள் பலவற்றிற்கும் அடிப்படையாகவும் ஆதியாகவுள்ளது ஆடற்கலையாகும் உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உடற்கூறுகள் வாயிளாகப் புறத்தார்க்குப் புலப்படுத்துவதே இக்கலையின் நோக்கமாகும் என்று பரத நாட்டியத்தில் கூறப்படுகிறது. தொன்மையான இக்கலையானது ஆத்மீக சிந்தனை கொண்டது.

பரதம் என்ற சொல்லானது பரத நாட்டியத்தின் மிக முக்கியமான அடிப்படை அம்சங்கள் அல்லது இலட்சணங்களைக் குறிக்கின்றது. அவையாவன உயிர்த்துடிப்புள்ள பாவமும், உணர்வுகளை மீட்கும் ராகமும் உயிர்நாடியான தாளமும் ஒன்று சேரும் போது பரதக்கலை பூரணத்துவம் அடைகின்றது.

உருவமும், அருவமுகமாக நின்று அண்டசராசரங்கள் எல்லாவற்றையும் இயக்கும் பரம் பொருளின் ஆடலை புலப்படுத்தி நிற்கும் கலைவடிவம் நடனமேயாகும். நாட்டியத்தின் மூலம் புலப்படுத்த முடியாத ஞானமோ, சிற்பமோ, கல்வியோ, செயலோ, யோகமோ ஒன்றுமில்லை சகல சாஸ்திரங்களும் திறன்களும் பலவகையான செயல்களும் நாட்டியத்தில் ஒன்று சேர்ந்துள்ளன என நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது.

சாதாரண பரதக்கலை பற்றிய ஆராய்ச்சியானது பரத சாஸ்திரதுடனே ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கூட பரதருக்கு முற்பட்ட புராண வரலாற்றை அறிவதன் மூலம் அதனுள் அடங்கியிருக்கும் தெய்வீகக் கலை அம்சங்களை அறிய வாய்ப்பளிக்கின்றது. இந்திய நடனப்பாரம்பரியம் சிவனிடமிருந்தே ஆரம்பிக்கின்றது. சிவனார் ஆடிய ஆடலை நாட்டிய தேவனாகிய பிரம்ம தேவன் பரதமுனிவருக்குப் போதித்தான். பரதமுனிவர் கந்தர்வர்கள், தேவமாதர்கள் ஆகியோருடன் சிவன் முன்பாக நடன மாடினார். ஆன்மீக விளக்கம் கொண்ட இக்கலையை பூவுலகிலுள்ள ஆன்மாக்கள் கண்டு களிப்பும் வண்ணம் இப்பூவுலகில் பரப்ப பிரம்மதேவர் எண்ணினார். எனவே பக்தியும் சக்தியும் மிகுந்த பரத முனிவரை அழைத்து சாஸ்திர ரீதியாக முறைப்படி கற்பித்தார். இந் நடனத்தையே பரதமுனிவர் தன் குழுக்களுடன் இறைவன் முன் ஆடினார். ஆட அழகான சிவன் நாட்டியத்தின் இடம் பெறாத லாஷ்யத்தை பார்வதி தேவி மூலமும் தான் ஆடிய தாண்டவத்தை தாண்டு என்னும் முனிவர் மூலமே கற்றுக் கொடுக்கச் செய்தார். பரத முனிவர் இவற்றை யெல்லாம் விளக்கி நாட்டிய சாஸ்திரத்தை செய்தார்.

நடனக்கலையானது ஆடற்கரசனான சிவனை ஆதி கடவுளாகக் கொண்டு விளங்குகின்றது. இக்கலையானது தெய்வத்தினால் அருளப்பட்டதால் அவனுக்கே அர்ப்பணம் செய்து தொடங்குவதை காணலாம். குருகுல முறைப்படி கற்றால் அன்பு, குருபக்தி, பணிவு, பெரியோரை மதித்தல், தன்னம்பிக்கை, ஒழுக்கம், கட்டுப்பாடு நெறிகளை கடைபிடிக்க உதவும் சிற்றின்பமான உலக மாயைகளை விடுத்து பேரின்பமாகிய தெய்வஒளியில் சங்கமித்து கொள்ள நல்வழியை அமைத்துக் கொடுக்கின்றது. மனதில் ஆன்மீக நெறியை உணர்த்தி உள்ளத்தினை தூய்மைப்படுத்தும் கலையறிவு இதனால் மேம்படும். பிறவியின் பயனை அடையச் செய்யும் இந்த அற்புதக்கலை தெய்வக்கலையாக மிளிர்கின்றது.

பரத நாட்டிய சாஸ்திரம் என்னும் நூலே நாட்டிய சாஸ்திரமரபை அறிவதற்கான சிறந்த நூலாக திகழ்கின்றது. இந் நூலில் குறிப்பிடப்படும். நாட்டியத்தினதும் நோக்கம் புருடார்த்தங்களை அடைவதே ஆகும். நாட்டியம் ஒரு யோகமாகவும் வழிபாட்டிற்குரிய சாதமாகவும் யந்திரமாகவும் கருதப்படுகின்றது.

கோயில்களில் இடம் பெறும் நைமித்திய கிரியைகளில் குறிப்பாக துவஜா ரோகணம் துவஜாவரோகணம் ஆலயவற்றில் இடம் பெறும் நவசந்தி கிரியைகள் குறிப்பிடற்பாலான. கொடியேற்ற தொடக்கக் கிரியைகளின் சகல இடையூறுகளையும் நீக்குபவரும், தாளத்தின் தலைவருமான கணபதிக்கு சமர்பிக்கப்படும் தாளம், நிருத்தம், வாத்தியம் ஆகிய குறிப்பிடற்பாலன. இதுபோலவே நவசந்திகளிலும் அவ்வவ் சந்திகளுக்குரிய தெய்வங்களைக் குறித்து கொடியேற்ற கொடியிறக்க திருவிழாக்களின் போது அவரவர்க்குரிய தாளம், இராகம், பண், நிருத்தம், வாத்தியம் நன்கு அமைய வேண்டுமென ஆகமங்களும் அவற்றின் வழி நூல்களான பத்ததிகளும் எடுத்தியம்புகின்றன.

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானும் அவருடைய சக்தியாகிய பார்வதியும் பிள்ளைகளாகிய விநாயகர், முருகன் ஆகியோரும் சக்தியின் சகோதரராகிய திருமாலும் நடனக்கலையில் மிக்க ஈடுபாடுள்ளவர்களாக கூறப்படுகின்றனர். நடனத்தின் வடிவமாகவும், முடிவாகவும், பிரதான இலட்சியமாகவும் நடனமூலமான வழிபாட்டினை விரும்பி ஏற்பவர்களாகவும் விளங்குகின்றனர்.

சைவ ஆலயங்களை அமைப்பதற்குரிய வழிகளை கூறுவன ஆகமங்கள். நடனக்கலை ஒரு தெய்வீகம் பொருந்திய கலை என்பதால் இக்கலையை வளர்ப்பதற்கு ஏற்ற இடம் தேவசந்நிதி என்ற நோக்கில் இறைவனே தன்வாக்கால் வெளிப்படுத்திய ஆகம நூல்களில் கீத மண்டபம், நிருத்தமண்டபம், ஆலய மண்டப அமைப்புக்கள் பற்றிக் கூறப்படுகிறது.

ஆலயங்களில் நடனமாடுவதற்கு இடம் வகுக்கப்பட்டது. போன்று நடன சிற்பங்கள், நடன ஓவியங்கள் இடம் பெற்றன. இக் கோயிலின் சிற்பங்கள் ஓவியங்கள் நடனக்கலையின் தொன்மையினையும் அதன் தெய்வீகத்தையும் பிரதிபலிக்கும் கலைக்கூறுகளாகத் திகழ்கின்றன.

கலை வடிவினாய், கலைப்பிரியினால், கலை ஆதரவானனாய் விளங்கும் இறைவனை வழிபாடு செய்யும் முறைகளில் முக்கிய இடத்தை கலைகள் பெறுகின்றன. ஆலயக்கிரியைகளில் சோடச உபசாரங்களில் 14வது உபசாரமாக கீதம், வாத்தியம் என்பன இடம்பெற்றற் 15வது உபசாரமாக நிருத்திய உபசாரம் இடம் பெறுதல் வேண்டுமென பூஜா பத்தியில் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடுவதற்கு மலர், நைவேத்தியம் ஆகியவற்றிலும் பார்க்க நிருத்ததானமே இறைவன் சந்நிதியின் பிரயோகித்து வணக்கம் செய்தல் சிறந்தது என விஷ்ணுதர்மோத்திர புராணம் கூறுகின்றது.

"புஷ்ப நைவேத்ய தானேவ்யோ
நிருத்த தானம் விஷிஷ்யதே"

இங்கு மலரினாலும், இலையினாலும் மானசீகமாகவும் இறைவனை வழிபடுதல் போன்று நடனத்தினாலும் வழிபடும் முறை நன்கு போற்றப்படுகின்றது. என்பதை நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்கள் மூலமும் அறிய முடிகிறது. கோயில் வளர்த்த கலைகளில் முன்னனியில் நின்றதும் அங்கு பரம்பரை பரம்பரையாக நெடுங்காலமாக பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்ததுமான கலை நாட்டியக்கலையே என நாட்டிய சாஸ்திரம் பகர்கின்றது.

இவ்வாறு சிறப்பு பெற்று விளங்கும் நடனக்கலையானது வரலாற்று ரீதியாகவும் சமயச் சார்புடன் வளர்ந்துள்ளதை அவதானிக்கலாம். புரதான இந்திய வரலாற்று ரீதியிலே நோக்கும் போது காலத்தால் முந்திய இந்துநாகரிகமான சிந்துசமவெளி நாகரிகச் சின்னங்களிலே கிடைத்துள்ள வெண்கலத்திலான நடனமாதின் சிலை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் நடனக்கலை ஓரளவு வளர்ச்சியடைந்திருந்தமைக்கு சான்றாகும்.

இந்து சமய மூல இலக்கியமான வேத இலக்கியத்திலும் கேள்விகளின் போதும் வழிபாட்டின் போதும் வேதமந்திரங்களுடன் ஆடலும் இசையும் இடம்பெற்றன. தெய்வங்கள் நடன விற்பன்னர்களாகவும் கூறப்படுகின்றார்கள். எடுத்துக்காட்டாக இருக்கு வேதத்திலே சித்தரிக்கப்பட்ட தெய்வங்களிலே ஒருவரான உஷை சிறந்த கருணையுள்ளம் கொண்ட நடனமாது எனவும் சரிகை புடைவைகளைக் கொண்டு தன்னை அலங்கரிப்பவளாகவும் சித்தரிகாப்படுகின்றான். நாட்டியமானது ஐந்தாவது வேதம் அல்லது காந்தர்வவேதம் எனவும் அழைக்கப்படுகிறது. மேலும் இருக்கு வேதத்திலிருந்து பொருளும், யசுர் வேதத்திலிருந்து அபிநயமும், சாமவேதத்திலிருந்து இசையும், அதர்வ வேதத்திலிருந்து நவரசங்களும் தோன்றியதாகவும் கூறப்படுகின்றது. இருக்கு வேத தெய்வங்களில் ஒருவனான இந்திரனும் சிறந்த நடன ஆசான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதிகாசங்களும் நடனம் பற்றிய குறிப்புக்களை வெளிடத்தறவில்லை, பாரதத்தில் வாசு தேவனின் வேள்வியால் கூடியிருந்தவர்களை பத்ர என்ற நடிகன் தனக்கிருந்த கலைப் பயிற்சியினால் அவர்களை மகிழ்வித்தான் என்ற குறிப்பு உண்டு. புராணங்களில் ஊர்வசி, மேனகை, ரம்பை,போன்ற ஆடல் அணங்குகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. மேலும் சாந்தோக்கிய உபநிடதத்திலே அக்கால வைதிகக்கல்வி பயின்ற மாணவன் கற்க வேண்டிய பாடங்களில் ஒன்றாக தேவஞான வித்யா (நுண்கலை) எனக் குறிப்பிட்டுள்ளமையும் கவனித்தற்பாலது எனவே வேத, இதிகாச, புராண உபநிஷத காலங்களிலும் நடனக்கலையானது சமயச்சார்புடனும், சமயவளர்ச்சிக்கு ஆதாரமாயும் அமைந்துள்ளதை அவதானிக்கலாம்.

சங்க கால நடனக்கலை பற்றியறிய எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் உதவுகின்றன. அக்கால மக்கள் மேற்கொண்ட கூத்துக்களாக குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, வள்ளிக்கூத்து போன்ற பல கூத்துக்கள் காணப்பட்டன. குறிஞ்சி நில மக்கள் அந்நிலத்திற்குரிய தெய்வமான முருகனால் ஏற்படும் திமைகளைப்போக்க குன்றக் குரவை ஆடினார்கள். இதே போன்றே முல்லைநில மக்களும் அந்நிலத்திற்குரிய தெய்வத்தை வணங்கி ஆய்ச்சியர்குரவை என்னும் கூத்தினை ஆடினார்கள். வேலன்வெறியாட்டம் போன்றனவும் முருகனை வணங்கி ஆடப்பட்டன சங்கம் மருவியகால நடனக்கலையை விதந்துரைக்கும் தலைசிறந்த இலக்கியமாக சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இங்கு காணப்படும் அரங்கேற்றுகாதையிலே நடனக்கலையானது சிறப்பாக விபரிக்கப்பட்டுள்ளது.

இளங்கோவடிகள் இன்னின்ன கலையின் முழுப்பயிற்சி பெற்றவனே இன்னின்ன ஆசிரியன் எனக்கூறுகின்றார். இக்காலத்தில் பரதம் பயின்று புகழும் சிறப்பும் பெற்ற இளங்கலையரசியான மாதவி சிவன்ஆடி நடனங்களில் பதினோர்வகை நடனங்கள் ஆடியதாகக் கூறுகின்றது. சங்கம் மருவிய காலத்திற்கு பின் பல்லவ பாண்டியர் காலத்திலே தமிழகத்திலே நிலவிய பக்தி இயக்கத்தின் பயனாக இசையும், நடனமும் இறைவனை அடைவதற்கு சிறந்த சாதனங்களாக விளங்கின. பரவலாக ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களிலே இசையும் நடனமும் நித்திய, நைமித்திய விழாக்களில் ஒழுங்காக இடம் பெற்றன. இவற்றை முறைப்படி செய்வதற்கு தேவதாசிகள் அதாவது செய்வதிற்கு தம்மை அர்ப்பணித்த அடியார்கள் நியமிக்கப்பட்டார்கள். கோயில்களின் நடனம் நிகழ்வதற்கு நிருத்தமண்டபம் அமைக்கப்பட்டது. இக்கால அரசனான மகேந்திரவர்மன் சிவனார் ஆடிய தாண்டம் (நடனம்) மூவுலங்களையும் ஒருமைப்படுத்தவல்லது என்று கூறுகின்றார்.

பல்லவர் காலத்திலே தோற்றம் பெற்ற சைவத்திருமுறைகளில் சிவனாடிய நடனங்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. திருவையாறு என்னும் திருத்தலத்திலே நடனக்கலையின் சிறப்பு விளக்கபடுவதை சம்பந்தரது பாடல் நன்கு புலப்படுத்துகின்றது. இதனை "வலம் வந்த மடவார்கள் நடமாட முழுவதிர மழை யென்றஞ்சி சில மந்தி அலமந்து முகில் பார்க்கும் திருவையாறே" என்ற பாடல் மூலம் அறியலாம்.

சோழப்பெருமன்னர் காலத்திலே தேவரடியார் பலர் கோவில்களில் இடம் பெற்றனர். எடுத்துக்காட்டாக முதலாம் ராஜராஜனின் தஞ்சைப் பெருவுடையார் கோவிலிலே 400 தேவரடியார் திருத்தொண்டு செய்தனர் மேலுமிதே கோவிலிலே பரத நாட்டிய சாஸ்திரத்திலே கூறப்படும் 108 கரணங்களிலே 81 கரணங்களைச் சித்தரிக்கும் சிற்பங்கள் உள்ளன. நாட்டியத்திலே நன்கு தேர்ச்சி பெற்ற பெண்களுக்குப் பட்டங்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. கந்தபுராணம், பெரியபுராணத்திலும் நடனம் பற்றிய குறிப்புக்கள் காணலாம்

"கற்பகக் பூந்தளிரடி போய்க் காமரு காரிகை செய்ய
உற்பால மென் முகிழ்விலீரட்டவணை கைபெயரப்
பெற்றுமக் கையின் வழி யொரு கயற் கண்புடை பெயர
அற்புதப் பொற் கொடி நுடங்கி ஆடுவது போல ஆடினார்"

என்ற பாடலடி மூலம் பெரியபுராணத்திலும் நடனக்கலை சிறப்புற்று விளங்கிதை அறியலாம் கம்பராமாயத்தில் "கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல ஐய நுண் இடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார்" என்ற பாடலடி மூலம் சைவ சமய இலக்கியங்களில் நடனமானது சிறந்து விளங்கியதை உணரலாம்.

தமிழகப்பகுதியில் நாயக்கர்களாலும், மகாரஷ்டிபிரர்களாலும் ஆளப்பட்ட காலத்தில் கர்நாடக இசை தமிழல் புகுந்தது பரதநாட்டியம் தலை தூக்கியது. இக்காலத்தில் வடமொழி நூல்களான அபிநயதர்ப்பணம், அபிநயதர்ப்பணவிலாசம் போன்ற நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன.

இவ்வாறு சிறப்புப்புற்று வந்த நாட்டியக்கலை அரசியல், பொருளாதார சீர்குலைவுகளை எதிர்நோக்க வேண்டி வந்தது. இதன் போது ஆறுமுக நாவலர், கலாயோகிஆனந்தகுமாரசாமி போன்றோர் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இக்கலையின் மகிமையை சுதேசிகளுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் எடுத்துக் காட்டினார். பரத நாட்டிய மறுமலர்ச்சியில் கிருஷ்ணஐயரின் தொண்டுகள் அளப்பரியன. இவர்கள் முயற்சியால் மூலை முடுக்குகளிலிருந்த அறிஞர்கள் பலர் வெளிவரலாயினர். இக்கலையானது சீரிய சிறப்புடன் திகழ அடையாறில 1938ல் கலாசேத்திரம் என்னும் கவின் கலை நிறுவனம் உண்டானது. இதனால் வீட்டுக்கு வீடு நாட்டிற்கு நாடு பாதசலங்கைகள் ஒலித்தன.

எனவே தொகுத்து நோக்கும் இடத்து நடனக்கலையானது பரமாத்வாகிய இறைவனுடைய யீவாத்மாவாகிய உயிரினம் செய்கின்ற கேள்வியேயாகும் சிற்றின் பத்தை விட்டு பேரின்பத்தை காட்டும் இந்த நடனக்கலை பக்தி என்ற நீர் ஊற்றப்பட்டு கலைஞர்களது தரமான அறிவு என்னும் ஒளி பெற்று பரதக்கலை என்ற பெருவிருட்சமாக வளர்வதுடன் எண்ணற்ற கலை வடிவங்களையும் வண்ண மலர்களையும் மலரவிட்டு நறுமணம் வீசிப் பரிணமிக்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**


* இந்துநாகரிகத்திற்கலை - கலாநிதி.கரை செ.சுந்தரம்பிள்ளை
  குமரன் புத்தகஇல்லம் சென்னை 2001

* தமிழகக் கோயிற்கலைகள் - நாகசாமி
  இரா.சுந்தரமூர்த்தி தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை 1976

* தமிழர்சால்பு - சு. வித்தியானந்தன் கல்வதின்னை, கண்டி 1954


ஆக்கம்
திருமதி. இ.அபிராமசர்மா



# இசைக்கலையின் வளர்ச்சி

இந்திய நாட்டிலே பெரும்பாலான கலைகள் கோயில்களுடன் இணைந்து வளர்ந்தவையாக காணப்படுகின்றன. கலைகளைத் தெய்வத்துடன் தொடர்படுத்திக் பார்ப்பது இந்திய மக்களுடைய வழமை ஆகும். எந்தக் கலையானாலும் அதனை ஆரம்பித்து வைத்த பெருமை இறைவனையே சாரும் என்பார்கள். இக் கருத்தினை ஆராயும் போது ஒரு சாதாரண மனிதனுடைய பார்வைக்கும் ஒரு கலைஞடைய பார்வைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இந்தக் கலைக் கண்ணை இறைவன் தந்த கொடை என்பார்கள். இதனால் தான் இறைவனைப் போன்று கலைஞனும் சிருஷ்டிகர்த்தாவாக காணப்படுகிறான். இவ்வாறு வளர்ந்த கலைகளுள் இசைக்கலை முக்கியமானது. "இசையால் வசமாகா இதயமேது" என்பதற்கிணங்க மாந்தரின் மனதை கொள்ளை கொள்ளும் மகத்தான சக்தியே இசையாகும்.

புராண இதிகாச காலங்களில் இசைக்கலை பற்றி கூறப்படும் கதைகளில் இறைவனே இசை வடிவினன் என்னும் கருத்துக் கூறப்படுகின்றது. இக்காலத்தில் கடவுளர் திருவுருவங்கள் இசைக்கருவியோடு சித்தரிக்கப்பட்டிருந்தது. அதாவது
"சிவன் - உடுக்கையும், சரஸ்வதி - வீணையும், கண்ணன் - புல்லாங்குழலும், நாரதர் - தம்புராவும்" கொண்டு விளங்குவது இசைக்கலையின் மகத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இசையுடன் இறைவன் புகழ் கூறும் தேவாரங்கள் திரும்பத்திரும்ப படிக்கும் போது பக்தி உணர்ச்சி அதிகரிக்கின்றது. இராவணன் சாமகானம் இசைத்து! இறைவனிடம் அழியாவரம் பெற்றான். அகஸ்தியரின் இசையால் கற்பாறையும் உருகியது. தேவாரங்களும் பண்ணுடன் பாடித்துதிக்கும் தன்மை வாய்ந்தனவாகின இசை வடிவான இறைவன் புகழை பின்வருமாறு தேவார அடிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறி குய்ப்பன"

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்"
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"
-என அப்பரும்

"பண் ஆர் தரு மழையாய் உயர் பொருளால் இறைவனாய்"

என்ற சம்மந்தரின் தேவாரங்கள் மூலம் இறை பக்தியையும் வளர்க்கின்றன. என அறிய முடிகின்றது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் காணப்படும். இசைத்தூண்டுகள் ஆலயங்கள் இசையுடன் இணைந்துள்ளதை அவதானிக்க இராமாயணத்தில் இராவணன் சாமகானம்பிரியனாகவும், தனது பத்துத் தலைகளில் ஒன்றினை உடைத்து நரம்புகளின் துணையுடன் இசை மீட்டி சிவனிடம் வரம் பெற்ற வரலாற்றிலிருந்து இசையின் தன்மையை அறிந்து கொள்ள முடியும்.

சுவாமி திருவிழா உலா வரும் போது வாத்தியம் இசைக்கப்படுகின்றது. திருவிழாக் காலங்களின் போது இசைக்கச்சேரிகள் நடாத்தப்படுகின்றன. சம்மந்தருக்கு சிவபெருமான் பொற்றாளம் வழங்கிய கதையிலிருந்து இறைவன் இசையுடன் பாடும் பாடலில் வைத்து விடுகிறான். ஆலயங்களில் ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கு மானியங்களை வழங்கி வந்தமையும் இசைக்கலையின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகவுள்ளது.

சங்ககாலத்தில் இசையானது மக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து காணப்பட்டது. இசை இறைவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டதை

"செறி தொடி முன்னகை கூம்பிச் செல்வேள்
வெறியாடு மகளிரொடு செறித்தாய்க்
குழலகல, யாழ் முரல, முழுவதிர, முரசியம்ப
விழவறா வியல ஆவணத்து"

என பட்டினப்பாலை பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம். பண்கள் எவ்வாறு தோன்றினதோ அவ்வாறே ஐவகை நிலத்திலும் வாழ்ந்தோர் தமக்குரிய இசைக்கருவியையும் தோற்றுவித்தனர். அந்தக் காலத்தில் பாணர் என்பவர் பாடுதலையே தம் தொழிலாகக் கொண்டனர். பழந்தமிழ் இசையை பற்றி அறிய முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரமும் அதன் உரை நூல்களும் உதவுகின்றன.

"யாழும் குழலும் சீரும் மிடரும்
தாழ் குழல் நண்ணுமை ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையாகும்"

என சிலப்பதிகாரம் கூறுகின்றது.

சங்கமருவிய காலத்தில் இறுதிப்பகுதி பழந்தமிழ் நாட்டில் செழித்து வளர்ந்து வந்த இசைக்கலைக்கு இருண்ட காலமாகும். பௌத்த சமணச் செல்வாக்கு அதிகரித்தமையால் மக்கள் இசை முதலிய கலை நலன்களை மறக்கலாயினர். எனினும் இக்கால சிவ பக்தரான காரைக்கால் அம்மையாரது பக்தி பனுவல் தமிழிசை மீண்டும் வலும் பெறுவதற்கு எடுத்துக் காட்டாக இருந்தது.

பல்லவர்காலம் இசைவரலாற்றிலே பொற்காலமாக திகழ்கின்றது. இவ்வாறு பொற்காலமாக இருப்பதற்கு பக்தியும் இசையுமே காரணமாகும். இவ்வாறு பக்தி இயக்கத்தை வளர்ப்பதற் இனிய தேவாரம் பதிங்களைப் பாடிக்கொண்டு தலங்கள் தோறும் யாத்திரை செய்தமையால் நாயன்மார்கள் காலத்தில் இசை தெய்வீக இசையாக மாறியது.

பல்லவர் காலத்தில் மகேந்திரவர்மன் இசை வளர்தோர் வரிசையில் சிறப்புப் பெற்றான் என்பதை கல்வெட்டில் மூலம் அறிந்து கொள்ளலாம் "இசைப்பாக்களே எனது செல்வமும் வாழ்வும்" என்று தானியற்றிய மத்த விலாச பிரஹாசனம் என்பதன் மூலம் கூறியுள்ளான்.

இலங்கையில் ஆரம்பகாலத்தில் இசைக்கலையை வளர்த்துச் செய்வதற்கு நிறுவனம் காணப்பட்டன. இலங்கையை சேர்ந்தவர் தற்கால இசையின் காரணமாக இருந்தவர் விபுலானந்தர் இவர் இயற்றிய "யாழ் நூல்" இவரது இசை ஆர்வத்தை காட்டியது. இலங்கையில் இசைக்கலை வளர்ச்சிக்கு இராமநாதன் இசைக்கல்லூரி, விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி, வடஇலங்கை சங்கீத சபை என்பன பெரும் பங்கு ஆற்றுகின்றன.

கலையழகி, தெய்வீகம் பொருந்தியது என்ற காரணத்தினால் இறைவனை இசைமயங்க வைக்கக் கூடியது. என்பது கருத்தாகும் இசைக்கலை நுட்பங்கள் யாவும் அதனோடு தொடர்புடைய பாடல்கள் மூலமாக வெளிக்காணப்படும். இசையினுடைய பெருமையை நன்கு அறிந்து கொள்ளலாம் இசைக்கலை ஆனது ஆலயக்கிரியைகளின் போது பெரிதும் இசைக்கப்படுவதனால் பக்தி வெள்ளத்தில் இணைத்துக் கொள்ளுகின்றது. இந்த இடத்தில் தான் ஆலயங்களை மையமாக கொண்ட இசையானது இசைக்கருவிகள் மூலம் மேலும் மெருட்டப்படுகிறது.

இன்றைய நிலையில் இசைக்கலையின் வளர்ச்சியை நோக்கும் போது பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் பல்கழைக்கழகம் வரை இசை ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டு வருகின்றது. இசைக்கல்லூரிகள் அமைக்கப்பட்டு பட்டங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இசையினைக் கேட்பதால் மாணவருக்கு அறிவு விருத்தி! சுறு சுறுப்பு, மூளை வளர்ச்சி என்பன ஏற்படுகின்றன.



ஆக்கம்
க.தர்சிகா
2010 A/L

# சைவசமய கலாசாரம்

## மாவிலை பயன்படுத்தும் முறைகள்

**01) நற்காரியங்கள்:-**

ஆலயங்களில் நடைபெறும் உற்சவம், திருமண மண்டபங்கள், வீடுகளில் சுபகாரியம் நடைபெறும் போதும் மாவிலையின் காம்பு நுனியினை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பை குத்தி தொங்க விடல் வேண்டும். மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும்.

**02) அபரக்கிரியை காலங்கள்**

வீட்டில் மரணச் சடங்கு நிகழும் போது மாவிலையின் காம்பு நுனியினை பின்பக்கமாக பிடித்துக் குத்தி தொங்க விடல் வேண்டும். இது இம் முறைக்கு மட்டும் பொருந்தும்.

**03) கும்பம் வைக்கும் போது**

தேங்காய் கீழ் 5 அல்லது 7 அல்லது 9 இலைகளை அமைத்தல் வேண்டும்.



## வாழையிலை பயன்படுத்தும் முறைகள்

**01) கும்பம் வைக்கும் போது**


தலை நுனிப்பக்கம் எப்போதும் கிழக்குத்திசை அல்லது வடக்குத்திசையாக கும்பம் வைக்க வேண்டும்.

**02) சாப்பிடும் போது**

தலை நுனி இடக்கை பக்கமாக இருக்க வேண்டும்.

**03) அபரக்கிரியை காலங்கள்**

வாழை இலையின் தலை நுனி தெற்கு பக்கமாக அமைத்தல் வேண்டும்.



## வாழைக்குலை பயன்படும் முறைகள்

**01) மங்கல கிரியை:-** வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதற்காக பழுத்த வாழைக்குலை கட்டப்படும்

**02) அமங்கல கிரியை**


சாம்பல் வாழைக்காய் குலை கட்டப்படும்

## தென்னந்தோரணங்கள் பயன்படும் முறைகள்

**01) சுபகாரியங்கள்**

தென்னங்குருத்து தோரணத்தின் தலை நுனி கீழ்பக்கமாக இருக்க வேண்டும்.


* மண்ணை நோக்கியவாறு



**02) அபரக்கிரியை காலங்கள்**

தென்னங்குருத்து தலை நுனி மேல்பக்கமாக அமைய வேண்டும்.

* விண்ணை நோக்கியவாறு



## கும்பம் வைக்கும் முறை

கடவுளை கும்பத்தில் வழிபடும் போது கும்பம் உடம்பின் பாவனையாக கருதப்படுகிறது. வாழையிலையை அதன் தலைப்பகுதியை வடக்கு அல்லது கிழக்குப்பக்கமாக வைத்து அதில் பச்சை அரிசி அல்லது நெல் இட்டு தண்ணீர் நிறைந்த குடம் வைத்து அதில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைக்கு கீழ் தேங்காயை வைத்தல் வேண்டும். கும்பத்திற்கு நூல் சுற்ற வேண்டும். தேங்காய் தலையாகவும் மாவிலைகள் மயிராகவும் குடம் தசையாகவும், நூல் நாடிகளாகவும், தண்ணீர் இரத்தமாகவும் இரத்தினம் போட்டால் எலும்பாகவும் பாவனை செய்யப்படும்.

## விளக்கேற்றி வழிபடல்

தீபங்கள் 16 வகைப்படும் அவையாக தூபம், தீபம், அலங்கார தீபம், நாகதீபம், புருஷாமிருகதீபம், சூலதீபம், கமடதி தீபம், கனு தீபம், வியாக்ரதீபம், சிம்ஹதீபம், மயூரதீபம், ஐந்து தட்டு தீபம், நட்சத்திர தீபம், மேரு தீபம் என்பனவாகும்.

ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் பஞ்சபூதங்கள் ஒன்றில் ஒன்று ஒடுங்கி இறுதியில் கற்பூரம் போல் எரிந்து எவ்வித மிச்சமும் இன்றி இறைவனோடு ஒன்றி விடுதலே தீபாலங்கார தத்துவமாகும்.

தினந்தோறும் வீடுகளில் தீபம் ஏற்றி வழிபாடு செய்வதற்கும் நேரம் நெறி முறை அவசியம். அதிகாலை 4.30 மணி முதல் 6.00 வரையும் மாலை 5.30 - 6.00 வரை ஏற்றி விடுவதால் நிறைவான வளமும் பலன்களும் நிச்சயம் உண்டாகும்.



நெய் தீபம்:- வீட்டின் சுகத்தையும் நலத்தையும் அதிகரிக்க செய்யும்
எண்ணெய் தீபம்:- சகல பீடை பரிகாரங்களுக்கும் ஏற்றது
வெண்கல தீபம்:- பாவம் விலகும்
மண் விளக்கேற்றல்:-- வீரிய விருத்தி
பொதுவாக பொன்னால், பஞ்ச லோகத்தால் தீபம் ஏற்றினால் நலன் உண்டாகும்.
ஐந்து முகம்:- பெண்களுக்கு வேண்டிய அன்பு, அறிவு, உறுதி, நிதானம், பொறுமை ஆகிய பண்புகள்.
திருவிளக்கின் ஆசனமாக அடிப்பாகம் - பிரம்ம அம்சம்
நெய் ஏந்தும் அகல் - உருத்திரன் அம்சம்
அதன் மேல் உள்ள பகுதி - மகேஷ்வர அம்சம்
சிகரமாகிய உச்சி பகுதி - சதாசிவம்

மேலும்
நெய் - நாதம்
திரி - சிந்து
சுடர் - திருமகள்
பிளம்பு - கலை மகள்
தீ - சக்தி

தீபத்தின் 5 விளக்குத்திரியும்
அன்பு, அறிவு, நிதானம், பொறுமை, உறுதி என்று 5 விடயத்தை விளக்கும்.

## கோலம் போடுதல்

கோலத்தின் நடுப்புள்ளி சிவனையும், சுற்றுக்கோடுகள் சக்தியையும் குறிக்கும். முதுகு வளைத்தால் தான் கோலம் போட முடியும் அகம்பாவத்தைக் களைந்து தலை குனிந்து பனிதால் சிவனையடைய முடியும். பச்சரிசி மாவில் மஞ்சள் தூளை கலந்தோ, கலக்காமலோ கோலமிடுவதன் நோக்கம் மஞ்சள் தூள் கலந்து கோலமிடுவது தொற்று நோய்க் கிருமிகள் வீட்டிற்குள் நுழைவதை தடுக்கும் கிருமிக் கொல்லியாக மஞ்சள் செயற்படுவதால் பாம்பு தேள் போன்றஜந்துக்கள் தீயசக்திகள் மஞ்சள் வாசனைக்கு வீட்டிற்குள் நுழையாது என்பது ஐகம்

## தேங்காய் உடைத்தல்

தேங்காயின் புற ஓடு உலகமாயும் இளநீர் திருவருளையும் உள்ளீடு பரம் பொருளையும் குறிக்கிறது. சிதறு தேங்காய் உடைக்கும் போது புற ஓடாகிய உலகமாயை சிதறி விலகிட பரம்பொருளின் திருவருள் கைகூடும்.

* சரிபாதியாக உடைந்தால் - செல்வம் பெருகும்
* மிளகளவு துண்டாக சிதறினால் - ஆபரணங்கள் சேரும்
* பல துண்டாக சிதறினால் - துன்பங்கள் ஏற்படும்
* குறுக்கே பிளந்தாள் - குடும்பத்தில் பிளவு
* முடி பெருந்து அடி சிறுத்தால் - லட்சுமி கடாட்சம்

## இடமிருந்து வலமாக ஆலயத்தை வலம் வருதல்

கோயிலின் மூலஸ்தானத்தை சுற்றி வலம் வருகின்றோம். மைப்புள்ளியின்றி ஒரு வட்டத்தை வரைய முடியாது. இறைவனே நம் வாழ்வின் மையம், ஆதாரம், இலட்சியம் என்பதை நினைந்து நடத்தலே இவ்வழக்கின் முக்கியத்துவம். வலப்பக்கம் மங்களத்தை குறிக்கின்றது. இடமிருந்து வலமாக சுற்றும் போது இறைவன் வலப்பக்கமாகவே எமக்கு இருக்கிறான். இறைவனது கர்ப்பகிரகத்தை வலம் வருகையில் நமக்கு என்றும் உறுதுணையாக நமது வலது கையாக நம்மை தர்ம வழியில் நடத்திச் செல்கின்றார்.

## கற்பூரதின் தத்துவம்


கற்பூரம் எரியும் போது கரியோ, சாம்பலோ இல்லாமல் காற்றில் மறைந்து விடுகிறது. அதுபோல ஆன்மா இறைவனுடைய அருட் ஜோதியில் கரைந்து ஒன்று பட வேண்டும். என்ற தத்துவத்தை விளக்குகிறது.



## வணக்கத்தின் வகைகள்

* ஏகாங்க நமஸ்காரம் - தலை மட்டும் குனிந்து வணங்கல்
* திரியாங்க ,, - தலை மேல் இருகரம் கும்பிட்டு வணங்குதல்.
* பஞ்சாங்க ,, - கை - 2 முழந்தாள் - 2 சிரம் ஆகிய ஐந்தும் நிலம் பொருந்த வணங்குதல்.
* ஷடாங்கம் - தலை, இருகை, மார்பு, முழந்தான் பூமியில் பட வணங்குதல்.
* அஷ்டாங்கம் - தலை கையிரண்டும், இரு செவிகள், இரு முழந்தான் மார்பு இவை பூமியில் பட வணங்குதல்.

வீடு கட்டும் போது வீட்டு வாசலை மட்டும்
சிறிதாக வைப்பது எதற்காக?
எப்போதும் பணிவுடன் இருக்க வேண்டும்.



## கோலம்

* சுபகாரியம் - ஒரு கோடு கோலம் போடக்கூடாது
* அசுப காரியம் - இரட்டை கோடு போடக்கூடாது.

## வித்தையின் தேர்ச்சி ஞாபக சக்தி பெற

"ஓம் புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம்
அரோகதா அஜாட்யம் வாக்படுத்வம்ச
ஹனுமத் ஸ்மரனாத் பவேத்"

(12 தடவை கூறவும்)

# பல்கலைக்களஞ்சியமாம் எம் இந்து மதம்

அறிந்தும் அறியாமலுமுள்ள பூரிப்பில்
மலரும் கட்டிடங்களும் ஆலயங்களும்
தொல்லியல் எச்சங்களின் துடிப்பையும்
ஆனத் தழுவிய படி
அரங்கேறுவது இந்துவாம்
எம் பண்பாடு

புரியாத கேள்விகளுக்கு கூட
விடைகளை மாற்றிடும்
வரலாற்று அறிஞர்களும்
முளையின் தளத்தில்
நாதமாய் ஒலிக்கும்
நாணயங்களும் - இந்து நாகரிக
நிஜத்தின் நிழல்கள்:

இந்தியாவில் தோன்றினாலும்
புத்தாய் மலரும் நாடுகளில்
எல்லாம்
குடியுரிமை பெற்றதுடன்
வைதிக நெறிதனை
பூஞ்சோலை மலர்களாய்
தென்றல் வீசி வருகிறது.

94 சுதந்திரம் பெற்றது
தாயகம் - ஆனால்
கல்தோன்றி மண்தோன்றி
காலத்து முன்னே
சுதந்திரம் பெற்றது
எம் மதம்

மாற்றுகலப்புறு பண்பாடு, சமயம்
பௌத்திரக்கலை, தத்துவங்களையும்
மாறிவரும் அரசியல், வரலாறு
விண்ணை முட்டும் பொருளாதாரமும்
கவின் பெறு கல்வி
ஒரு நிமிட இதய மாற்று செய்யும் மருத்துவம்
எதிர்காலத்தை துல்லியமாய் கூறிடும்
சோதிடம் - என
பல பாடப்பரப்பு கொண்டு
மிளிர்கிறது இந்துவின் நாகரிகம்

சிரித்த முகத்துடனே
தன்னெடுத்த செந்தாமரை போல
எம் இந்து மத மக்கள் நெற்றியிலே
பண்பாய் மிளிர்கிறது திருநீறு

எம்மதப்பற்றை இறுக்கமாய் ஆக்கிட
பயன் கருதா கடமையுடன்
கண்ணியமாய் காத்திருப்போம்
இறைவா! உன் சம்மதம் கிடைக்க
தளர்ந்த கட்டுப்பாட்டுடன்
சுய குல தெய்வ வழிபாட்டுடனும்
வாழ்ந்திட - அன்றே
சுதந்திரம் தந்ததும் எம் மதம்

அறுவகை சமய நெறியையும்
"பொலிஸ்ரர்" நூலாய்
சுருங்கி கிடந்த
மனுஷ இதயத்தில்
ஐயந்திரிபற வாழ்க்கை விதியாய்
சுட்டிக் கூறி
தெளிவாய் எம் மனதில் உணர்த்தியதே

வாய்பிளக்க பேசி வரும்
வஞ்சகரை நம்பாதே
இராமகிருஷ்ணர், விபுலானந்தர்
தியாகச் செம்மல் மகாத்மா,
அழிவுறு விளிம்பின் காப்பாளன்
- நாவலர்
போதனையை மதித்திடுவோம்.

ஆசை வலை வீசும் நேசதாரிகளையும்
வேற்று மத காமுகரையும்
வஞ்ச மனமுள்ள மாற்று மனிதனையும்
தியானம், பஜனைகள் மூலம்
நாடு போற்றும் பண்பாளனாய்
மாற்றிடுமே



யமுனா

# வினாவிடைகள்

1) மூலசங்கரர் என அழைக்கப்படுபவர் யார்?
தயாநந்தர்

2) காஷ்மீர சைவத்தின் மூலநூல் எது?
சிவசூத்திரம்

3) ஆரிய மக்கள் இறைவனுக்குக் கொடுத்த உணவு எது?
அவி,ஆகுதி

4) வேத கால மக்களிடையே காணப்பட்ட சபைகள் எவை?
சபா,சமிதி

5) ஐந்தாம் வேதம் எது?
மகாபாரதம்

6) ஆகமங்கள் எழுச்சி பெற்ற மலை?
மகேந்திரமலை

7) பத்ததி என்றால் என்ன?
ஆகமக் கிரியை விரிவு

8) ஒப்பில்லாமணிப் புலவரால் உருவாக்கப்பட்ட நூல் எது?
சிவரகசியம்

9) கடவுள் கோட்பாட்டின் தந்தை யார்?
மாக்ஸ் முல்லர்

10) அக்கினி புராணத்தின் மறுபெயர் யாது?
ஆக்னேய புராணம்

11) கர்மகாண்டத்தின் மறுபெயர் யாது?
அற்ப சுருதி

12) முதன் முதலில் சக்தி பற்றி கூறும் உபநிதம் எது?
கேன உபநிடதம்

13) வேதம் ஆகமம் இரண்டுமே இறைவன் நூல் எனக் கூறியவர்?
திருமூலர்

14) வேதாந்த சூத்திரத்தை இயற்றியவர் யார்?
பாதராயணர்

15) விசிட்டாத்வைதத்தின் ஸ்தாபகர் யார்?
இராமனுயர்

16) சுவேதனப்பெருமாள் என அழைக்கப்பட்டவர் யார்?
மெய்கண்டதேவர்

17) திருச்சதகம் பாடிய சமயகுரவர் யார்?
மாணிக்கவாசகர்

18) வீரத்துறவி எனப் போற்றப்படுபவர் யா
சுவாமி விவேகானந்தர்

19) பிரத்யபிஞ்ஞான தரிசனம் தோன்றி ப இ ட்
காஷ்மீர

20) "சவிஞானச் செல்வி' என அழைக்கப் ிம் வைண ப பக் ர யா
மீராபாய்

21) வேத நிகண்டு என அழைக்கப்படும் வேதாங்கம் எது?
நிருத்தம்

22) பாஷா சாஸ்திரம் என்னும் மொழி தோன்றுவதற்கு காரணமாக அமைந்த வேதங்கம் எது?
நிருத்தம்

23) தமிழகத்தில் சைவமும் வைணவமும் வளர்ச்சி பெற பணியாற்றும் ஆதீனங்களில் மிகப் புராதனமானது?
திருவாவடுதுறை ஆதீனம்

24) சாங்கிய காரிகை என்ற நூலின் ஆசிரியர் யார்?
ஈஸ்வர கிருஷ்ணர்

25) வைசேடிய தத்துவ முறைக்கு ஆதாரமாய் அமைந்த நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
வைசேடிய சூத்திரம்,சனாதன முனிவர்

26) வசப புராணம் கூறும் சமயப் பிரிவு எது?
வீரசைவம்

27) கன்மமும் மாயையும் ஆன்மா பிறந்த பின்னரே பற்றுவதால் அது எவ்வாறு அழைக்கப் படுகின்றது?
ஆகந்து மலம்

28) வசன தம்ம பதம் எம்மதத்திற்குரியது?
பௌத்த மதம்

29) இந்தி மொழியில் துளசிதாசரால் பாடப்பட்ட இராமாயணம் எப்பெயரினால் அழைக்கப்படுகிறது?
இராமசரிதமானஸ்

30) பூர்வ மீமாம்சை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
கரும மீமாம்சை

31) பாதாத்த தர்ம சங்கிரகம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
பிரசஸ்த பாதிரிகள்

32) நவயுக சங்கரர் என அழைக்கப்படும் நவீன சீர்திருத்தவாதி யார்?
சுவாமி விவேகானந்தர்

33) பட்டாரகுரு என அழைன்னப்படும் தென்கிழக்காசிய முனிவர் யார்?
அகத்தியர்

34) மீம்மாம்சை சூத்திரத்தின் ஆசிரியர் யார்?
ஜைமினி

35) வட இந்திய வரலாற்றுக் காலங்களில் 'பொற் காலம்' என அழைக்கப்படும் காலம் எது?
குப்தர் காலம்

36) ஸ்ரீசைதன்னியருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டப் பெயர் யாது?
ஸ்ரீ வித்தியாபூஷன்

37) மகாராஷ்த்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சமயம் எது?
காணபத்தியம்

38) சங்கர திக் விஜயம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
ஆனந்த கிரி

39) வைணவர்களால் தமிழ் மறை அல்லது திராவிடவேதம் என அழைக்கப்படும் நூல் எது?
நாலாயிர திவ்விய பிரபந்தம்

40) திராவிடாச்சாரியார் என அழைக்கப்படுபவர் யார்?
கௌடில்யர்

ஆக்கம்
சி.சுஜீவா (A/L 2010)

# ஜயம்பு சஞ்சிகை வெளியீட்டுக்கு
# நன்கொடை நல்கியோர் விபரம்

| | |
|---|---|
| செல்லமுத்தூஸ் - நெல்லியடி | - 5000.00 |
| மக்கள் வங்கி - நெல்லியடி | - 3000.00 |
| கொமஷல் வங்கி - நெல்லியடி | - 2000.00 |
| HNB வங்கி - நெல்லியடி | - 2000.00 |
| செலான் வங்கி - நெல்லியடி | - 2000.00 |
| டைட்டானிக் ரெஸ்ரோரன்ஸ் - நெல்லியடி | - 2000.00 |
| தாஜ்மஹால் - அரசடி | - 1500.00 |
| சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை | - 1000.00 |
| கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம் | - 1000.00 |
| தமிழ்ப்பூங்கா அச்சகம் | - 1000.00 |
| கஜமுகன் கட்டட நிலையம் | - 1000.00 |
| பிள்ளையார் ஸ்ரோஸ் | - 1000.00 |
| மொடொன் ஸ்ரோஸ் | - 1000.00 |
| Ishu Tech - நெல்லியடி | - 1000.00 |
| மொடோன் கல்வி நிலையம் | - 1000.00 |
| அருண் அழகு மாடம் & புடவையகம் | - 1000.00 |
| கணேசன் மோட்டோர்ஸ் | - 1000.00 |
| கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.ச | - 1000.00 |
| பிக்கன் கல்வி நிலையம் | - 1000.00 |
| நியூ எக்சலன்ட் கல்வி நிலையம் | - 1000.00 |
| லெட்சுமி ஒவ்செற் பிறிண்டர்ஸ் | - 1000.00 |
| அபிராமி ஸ்ரோஸ் | - 500.00 |
| சுபாஸ் வெதுப்பகம் | - 500.00 |
| நெல்லை சில்க் | - 500.00 |
| நியூ மெடிக்கல் சென்ரர் | - 500.00 |
| டினா ஓடியோ வீடியோ | - 500.00 |
| குணம் அண்சண்ஸ் நெல்லியடி | - 500.00 |
| உதயம் - நெல்லியடி | - 500.00 |
| அழகர் பல்பொருள் வாணிபம் - நெல்லியடி | - 500.00 |
| வைஷ்ணவி நகைப்பூங்கா | - 500.00 |
| அம்பிகா ஸ்ரோஸ் | - 500.00 |
| பவானி நகை மாடம் | - 300.00 |
| வின்மீன் அங்காடி | - 200.00 |
| யசோ ரெக்ஸ் | - 200.00 |
| நெல்லியடி மெடிக்கல்ஸ் | - 200.00 |
| சாயி ஸ்ருடியோ | - 200.00 |
| றோயல் ஸ்போட்ஸ் | - 200.00 |
| அன்னை ரெக்ஸ் | - 200.00 |
| கேசவன் சில்க் | - 200.00 |

| | | |
|---|---|---|
| ரூபினாஸ் | - | 200.00 |
| கருணா ரெக்ஸ் | - | 200.00 |
| சு.தனுஜா (Kezro) | - | 200.00 |
| வண்ணமாடம் | - | 200.00 |
| பாபா மோட்டோர்ஸ் | - | 200.00 |
| ஜனனி பல்பொருள் வாணிபம் | - | 150.00 |
| பழக்கடை - நெல்லியடி | - | 150.00 |
| வசந்தா லோன்றி | - | 100.00 |
| சீ.சிவராஸ் | - | 100.00 |
| இரத்தினசிங்கம் வைண்டிங் | - | 100.00 |
| குகரதி | - | 100.00 |
| திசா.களஞ்சியம் | - | 100.00 |
| சி.கிருஷ்ணன் | - | 100.00 |
| சீ.குமார் | - | 100.00 |
| T.அஜி | - | 100.00 |
| ஹீ ஜெயராம் கண்ணாடி அகம் | - | 100.00 |
| **மொத்தம்** | | **40,400.00** |



# தமிழ்ப்பூங்கா அச்சகம்


# THAMIL POONKA PRINTERS

**Mulfy Offset**

T.P No: 021 2264014
077 9597145

பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி


Main Street, Nelliady
Karaveddy.






# கஜமுகன் ஹாட்வெயர்

T.P No:- 0213008554, 0778330145







பிரதான வீதி, நெல்லியடி

# மொடோன் ஸ்டோர்ஸ் அன் புத்தகசாலை

பாடசாலை மாணவர்களுக்கான அனைத்து விதமான

பாடசாலை உபகரணங்கள், பாடசாலை புத்தகங்கள்

வார, நாள் ஆங்கில, தமிழ் செய்தி தாள்கள்

அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்



மொடோன் புத்தகசாலை

பஸ் நிலையம்

நெல்லியடி

# BCON கல்வி நிலையம்



A/L விஞ்ஞானம், கணிதம்

வதிரி

A/L கலை, வர்த்தகம்

உடுப்பிட்டி

கொமர்ஷல் வங்கியின்
அடகுச் சேவை

தேர்ந்தெடுக்கப்பட்ட
கொமர்ஷல் வங்கிக் கிளைகளில்

பவுணுக்கு
ரூ. 32,000 வரை
உங்கள் தங்க நகைகளுக்கு
குறைந்த வட்டியில் அதிகூடிய பணம்


வங்கி மேலதிகப் பற்று மற்றும் அடகு வைக்கும் வசதி
இரகசியம் பாதுகாக்கப்படும்
உங்கள் தங்க நகைகளுக்கு அதிக பாதுகாப்பு
பகுதி பகுதியாக பணம் செலுத்தும் வசதி
மாதாந்த வட்டி 1.16% மட்டுமே

www.combank.lk

COMMERCIAL BANK
பொற்கடன் சேவை

# Money Gram

Money Transfer



## அன்புக் கரத்திலிருந்து உங்கள் கரத்திற்கு

- வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணம் மணிகிராம் மூலம் இலகுவாகவும் விரைவாகவும் கட்டணம் எதுவுமின்றி *HNB* நெல்லியடிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
- பாதுகாப்புடன் கூடிய உயர் கணினி தொழில்நுட்பம் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள் உரியவரை சென்றடைவதை உறுதிப்படுத்துகின்றது.
- உலகம் பூராகவும் உள்ள மணிகிராம் பிரதிநிதிகள் ஊடாக பணத்தினை அனுப்பலாம்
- வெளிநாடுகளிலிருந்து பணத்தினை 24 மணி நேரத்தினுள் எந்த வித கட்டணமும் இன்றி பரிமாற்றிக் கொள்ள இலகுவான நம்பகமான ஒரே வழி *HNB* மணிகிராம்.


## காசு மரம் உண்டாக்குவோம் பரிசுகள் பல பெற்றிடுவோம்

HNB
சிங்கிதி
சிறுவர்

*சிறுவர்களே... உங்கள் எதிர்காலத்தை வளமாக்க சிங்கிதி சிறுவர் கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள். அது காசு மரம் போல வளர்ந்து உங்களுக்கு பல பரிசுப் பொருள்களை அள்ளித்தரும்.*

*HNB சிங்கிதி சிறுவர் கணக்கு 12 வயதுக்குக் குறைந்த உங்களுக்காக அமையும் காசு மரம் போன்றது.*

காசு மரம் ஒன்றை வளருங்கள்.
எதிர்காலத்தில் பயன்பெறுங்கள்.



# தாஜ்மகால்



**இந்திய சைனீஸ் உணவு வகைகளை ஒரே கூரையின் கீழ் ரசித்து ருசித்திட**

காலை, மதியம், இரவு போசனங்களுக்கு உன்னதமான ஸ்தாபனம்
தாஜ்மகால் பிரியாணி வகைகள், வெள்ளி தோறும் மசாலா தோசை
இன்னும் பல உணவு வகைகள் கிடைக்கும் ஓடர்களுக்கும்
உரியநேரத்தில் உணவு வகைகள் செய்து கொடுக்கப்படும்.



அரசடி
கொடிகாம வீதி
கரவெட்டி
T.P No:- 0214902943

# GANESAN MOTORS

**Authorised Spare Parts Dealer for David Pieris Motor Company Ltd**


**Mogan'S", Jaffna Road, Nelliady**

**T.P:- 0212263338, 0777049364**


**To:** ..............................................................

**Cash/Credit Memo No:**

**Date:..................**







# அருண் புடைவையகம்

# ARUN





Textiles & Fancy

விசேட நிகழ்வுகளுக்கான சாறிகள்,
பிளவுஸ் பீக்ஷஸ் மற்றும்
அனைத்து வகையான
துணிவகைகள் மற்றும்
றெடிமற் ஆடைகளை பெற்றுக்
கொள்ளும் இடம்
அருண் புடைவையகம்

பிரதான வீதி, நெல்லியடி.

0213001774

## கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கம்

சிற்றுண்டிச் சாலை, புடைவையகம்,
வாடகை சேவை, விசேட
நிகழ்வுகளுக்கான பொருட்கள்,
தொலைத்தொடர்பு நிலையம், கிராமிய
வங்கி போன்றவற்றை நாடிச் செல்லும்
ஒரே இடம்

## கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம்

பிரதான வீதி நெல்லியடி



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு
மக்கள் வங்கியின்
'இசுரு உதான' - 'சிசு உதான'
சிறுவர் கணக்குகளின் உரிமையாளர்களுக்கு
பெறுமதிமிக்க பரிசுகள்
மக்கள் வங்கியின்
இசுரு உதான
மக்கள் வங்கி
சிசு உதான
சிறந்த எதிர்கால சந்ததியினர்
வைப்புத் தொகை | மக்கள் வங்கியின் அன்பளிப்பு
ரூ. 5,000/- | ரூ. 1,000/-
ரூ. 10,000/- | ரூ. 2,000/-
ரூ. 15,000/- | ரூ. 3,000/-
ரூ. 20,000/- | ரூ. 4,000/-
ரூ. 25,000/- அல்லது அதற்கு அதிகமாக | ரூ. 5,000/-
• அழகிய Lap Top கணனிகள் 200
• ரூ.5,000 பரிசுகள் 700
உங்கள் அன்புச் செல்வத்துக்காக ஏற்கனவே நீங்கள் ஆரம்பித்த அல்லது புதிதாக ஆரம்பிக்கும் மக்கள் வங்கியின் "சிசு உதான" கணக்கில் ரூ.5,000வை வைப்புச் செய்து வெப் கெமரா ஒன்றுடன் இணைந்த அழகிய லெப்-டொப் கணனி ஒன்றை பரிசாக வெல்லுங்கள்.
மேலும் நாடு முழுதுமான சகல கிளைகளிலும் ரூ.5,000/- வீதம் 700 வெற்றி வாய்ப்புகளை வெல்லும் வரம்.
அன்பான பெற்றோர்களே,
உங்களது அன்பான செல்லக் குழந்தைகளுக்காக உங்கள் அருகாமையிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் 'இசுரு உதான' அல்லது 'சிசு உதான' கணக்கில் பணத்தை வைப்புச் செய்து, இப் பெறுமதியான பரிசுகளை வெல்லும் வரம் பெறுங்கள்!
AA Brand Finance Rating, A(lka) Fitch Ratin
2010 ஒக்டோபர் 01 முதல் 2010 டிசெம்பர் 31 வரை இப் பரிசு வாய்ப்பு வழங்கப்படும்.
சீட்டிழுப்பு - 2011 ்பெப்ரவரி மாதம் நடைபெறும்.
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
www.peoplesbank.lk
2008 2010 2009 2009


## சுயம்பு வளர வாழ்த்துகிறோம்

# லெட்சுமி ஒவ்செற் பிறிண்டஸ்

# LECHCHIMI OFFSET PRINTERS

Tp No:- 021 4909133
077 0242340
077 1987194





பிரதான வீதி, நெல்லியடி கரவெட்டி

Main street,Nelliady
Karaveddy



## சிறியவர்களின் கற்பனை உலகம்

பெரிய பரிசு

பெரிய போனஸ்

Dream வேர்ல்ட்

சிறுவர்கள் 25 பேருக்கு பெற்றோருடன் பாங்கொக்கிலுள்ள Dream வேர்ல்ட்டிற்கு செல்லும் வாய்ப்பு.

50% வரை பெரிய போனஸ் வட்டி. பைசிகள், ஓகன், பரிசு கூப்பன், ரேடியோ, ஸ்கிரபிள், பேக் மற்றும் பெறுமதியான பரிசுகள் பல...



ஒவ்வொரு ரூ.1,000/= வைப்பிற்கும் பாங்கொக் Dream வேர்ல்ட் சீட்டிழுப்பில் தகுதி பெறும் வாய்ப்பு

பாங்கொக் Dream வேர்ல்ட் சீட்டிழுப்பானது 2010 டிசம்பர் 31 வரை செல்லுபடியாகும்.

செலான் வங்கி நெல்லியடிக்கிளை 021-3205961

மேலதிக விபரங்களுக்கு: 021-3205962

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

- இம்மலர் சிறப்புற உறுதுணையாய் நின்ற கல்லூரியின் முதல்வர் அவர்களுக்கும்......
- கேட்கும் போதெல்லாம் மனம் சலிக்காது கட்டுரைகளை பார்வையிட்டும் ஆலோசனைகள் வழங்கியும் எம்மை வழிப்படுத்திய கல்லூரியின் ஆசிரியர்களுக்கும்............
- நிதியுதவி செய்த வர்த்தக பெருமக்களுக்கும்...............
- விளம்பரம் மூலம் நிதயுதவி திரட்டி உதவிய மாணவர்களுக்கும்..........
- ஆசியுரை மற்றும் வாழ்த்துரைகளையும் வழங்கிய பெரியார்களுக்கும்...........
- சுயம்பு சஞ்சிகைக்கு ஆக்கங்களை தந்து சிறப்பித்த பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும்................
- இச் சஞ்சிகையை நல்ல முறையில் அச்சுப்பதித்து உதவிய லெட்சுமி ஒவ்செற் அச்சகத்தினருக்கும்.................
- சஞ்சிகையின் நிறைவிற்கு பல்வேறு வகைகளிலும் உதவிய அனைவருக்கும்............
- பல்வேறு வழிகளிலும் இச் சஞ்சிகை வெளிவர உதவி புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும்....................

எமது இதயபூர்வமான நன்றி

"திணைத்துணை வேள்வி செயினும் பனைத்துணையாகக்
கொள்வார் பயன் அறிவோர்"

யா/ விக்கினேஸ்வரக்கல்லூரி

இந்துமாமன்றம்



TR Taste of Home

இந்திய சைனீஸ் உணவு வகைகளை ஒரே

கூரையின் கீழ் ரசித்து ருசித்திட






யாழ் மண்ணில்

சைனீஸ் உணவுவகைகள்,

திருமணம் மற்றும் விசேடவைபவங்களுக்கான

உணவுகள்


சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்





# டைட்டானிக் றெஸ்ரோறன்ட்

நெல்லியடி.



# பிள்ளையார் பல்பொருள்

# வாணிபம்

வீட்டுக்கு தேவையான அனைத்து பொருட்களையும்

குறைந்த விலையில் தரமாக பெறும் ஒரே வாணிபம்

பிள்ளையார்

பிரதான வீதி, நெல்லியடி.


சுயம்பு சிறப்புற வாழ்த்துகிறோம்
தரமிக்க வண்ணவண்ண
ஜவுளித் தினிசுகள்
உங்களுக்குத் தேவையான
சேட்டிங், சூட்டிங்ஸ்,
ஸ்கேட் ளு பிளவுஸ்,
சல்வாரிகமிஸ், சாரம்
வேட்டிகள்
மற்றும் அனைத்து விதமான
திருமண பட்டு புடவைகள்
சிறுவர்களுக்கான ரெடிமேட்
ஆடைகள்
பெற்றுக்கொள்ள
Wedding Silk Sarees, Shirtings
Suitings & Readymade Dresses
மங்கையர் மனங் கவரும்
ஆடைத் தெரிவுகளுக்கு
செல்லமுத்தாஸ் புடவை மாளிகை
SELLAMUTHUS TEXTILES
Main Street,
பிரதான வீதி,
Phone :- 021 2263238
Nelliady, Karaveddy.
நெல்லியடி, கரவெட்டி